கல்கி

KALKI 20-1-80 90 காசு




வாழ்த்துகிறோம்



அடுத்தது தில்லானா —
அதற்கு முன் ஒரு கப்
நரசூஸ்
காபி!
தமிழகத்தின்
சிறப்புக் கலை —
பரத நாட்டியம்.
தமிழகத்தின்
சிறப்புக் காபி
நரசூஸ் காபி!
ADWAVE/NC/1005 TAM
ஜீவனுள்ள ஒரே காபி
நரசூஸ்
"தெர்மலோ" காபி
நரசூஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

மதிப்பிற்குரிய மர்பி

—தாணு



மறைந்த மர்பியின் முக்கிய குணம் அவர் ராஜ கம்பீரம்! அவர் ரிஷிகளில் ஒரு ராஜா! கூனியோ குறுகியோ அவரைப் பார்த்தது இடையாது! 91 வயதுவரை!

சில வருஷங்களுக்கு முன் அவர் துடை எலும்பு முறிய நேர்ந்தது. ஆஸ்பத்திரியில் பல வாரங்கள் தங்கிக் குணமடைந்து லயோலா கல்லூரிக்குத் திரும்பி வந்தார். காணச் சென்றேன். பாதிரிகள் லாட்ஜில் படி ஏறிச் சென்று கொண்டிருந்தார். அதே கம்பீரம், அதே Sense of balance!

நிறைகுடம் என்றாலே ஃபாதர் மர்பியைத் தான் எனக்கு ஞாபகம் வரும். எதிலும் மிதம், அமைதி! பாதிதான் பாதிரி. மறு பாதி சாதா மனிதர். குடும்ப வாழ்க்கை, சமூகம், அரசியல் எல்லாவற்றிலும் சாதா மனிதரைப் போல் கண்ணோட்டம். சிரித்துக் கொண்டே உலகப் போக்கை நன்கு கவனித்து வந்தார்.

ஒரு விதத்தில் ராஜாஜியைப் போல். யாரும் மர்பியை ஏமாற்றிவிட முடியாது. வேஷம் ஆட்களை நம்ப மாட்டார். யார் எப்படிப் பேசித் தன்னை மறைத்துக் கொண்டாலும் உண்மை ஸ்வரூபத்தைக் கண்டு கொள்வார். தன்னை வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வோரையும் ஆசிர்வதிக்கும்போதே வந்தவரின் உள் நோக்கத்தை ஆராய்ச்சி செய்பவர் ராஜாஜி. இதே குணம் மர்பியிடமும் உண்டு. அவரிடம் பொய் சொல்லிப் பிழைக்க முடியாது.


இன்னும் எத்தனையோ விதத்தில் ராஜாஜியையும் மர்பியையும் என் மனம் ஒப்பிடுவது உண்டு. ராஜாஜி பாதி சாதா மனிதர் பாதி ரிஷி. மர்பி பாதி ரிஷி பாதி சாதா மனிதர்!

ராஜாஜியும் மர்பியும் நன்கு ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டிருந்தவர்கள். ராஜாஜியை ஸி. ஆர். என்றுதான் மர்பி சொல்வது வழக்கம். லயோலா கல்லூரியில் பெர்ட்ராம் ஹாலில் ஸி. ஆர். படம் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு மர்பிதான் முக்கிய காரணமாக இருப்பார் என்று நான் நினைக்கிறேன். நமது அரசியல் வாதிகளில் ராஜாஜிக்குத் தனி மதிப்புக் கொடுத்தவர் மர்பி பாதிரியார்.

நாற்பது வருஷம் மர்பியிடம் பழகியிருக்கிறேன். 1939ல் முதன் முறையாக மர்பியைக் கண்டதும் ஏற்பட்ட கவர்ச்சி இன்றுவரை குறையாமல் இருந்து வருகிறது. வருஷத்துக்கு இரண்டு மூன்று முறை அவரைக் காண லயோலா கல்லூரிக்குச் செல்வதுண்டு. ஒவ்வொரு முறையும் புத்துணர்ச்சி பெற்றுத் திரும்புவேன். அவர் பேசிய முறை, எடுத்து ரத்தினச் சுருக்கமாகச் சொன்ன வார்த்தைகள், அவர் குறும்புப் பார்வை, எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டு மனத்துக்குள் சிரித்துக் கொண்டே திரும்புவேன்,

ஃபாதர்ஸ் லாட்ஜில் முதல் மாடியில் ரூம் நம்பர் 12லேயே பல வருஷங்கள் சந்தித்திருந்த மர்பியைச் சமீபத்தில் காணச் சென்றபோது கீழ்த் தளத்திலேயே ஒரு அறையில் இருப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் 'திக்' என்றது. ஏனென்றால் அந்த அறை தேக நலக் குறைவானவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டது. அதிலேதான் டிசௌஸா தமது கடைசி நாட்களைக் கழித்தார். அதே அறையில் மர்பி என்றதும் அதிர்ச்சி அடைந்த நான் உள்ளே சென்றதும் அவர் என்றும் உள்ள முக மலர்ச்சியுடன் என்னை வரவேற்றார். ''நான் மாடி ஏறி இறங்கக் கூடாதாம். டாக்டர்கள் தீர்மானித்து விட்டார்கள்'' என்று ரத்தினச் சுருக்கமாக அவர் உடல் நிலையைச் சொல்லிவிட்டு உலக விஷயங்களைப் பற்றி என்னுடன் உரையாட ஆரம்பித்து விட்டார். என்றும் போல் அதே சிரிப்புடன் அபிப்ராயங்கள். இன்னும் பல வருஷங்கள் நிச்சயமாக இருப்பார் என்ற எண்ணத்துடன் திரும்பினேன். ஆனால் எனக்கு ஏமாற்றம் காத்திருந்தது.

ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஜ்ஜாய் ③



குற்றவாளிகள் சங்கம்!

எதற்கெல்லாமோ சங்கம் இருக்கிறதல்லவா? கேரளாவில் சமூக விரோதிகள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்து அதற்கு All Kerala Criminals Association என்று பெயரிட்டுள்ளார்கள்! தென் திருவிதாங்கூர் பகுதியில் பிரபல ஜேப்படி திருடரான இ.கே.பி. சாஹிப்தான் இதன் தலைவர்! படுக்கை அறைகளில் மட்டும் புகுந்து திருடுவதில் மன்னர் தம்பி தங்கல், ஜெயிலிலேயே கூரையின் மீது அமர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய சசிதரன், ஓடும் ரயிலில் மின்னல் வேகத்தில் ஜேப்படி செய்யும் "மின்னல்" சொன்ன, வீடுகளில் புகுந்து திருடும் ராமய்யன், பூட்டிக் கிடக்கும் காரைத் திறந்து திருடுவதில் புகழ் பெற்ற "சாலி" முகமது ஆகியோர் இந்தச் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர். ஜெயில் வசதிகளை அதிகப்படுத்த வேண்டும், ஜெயில் அதிகாரிகளின் வீட்டில் போய் 'அடிமை வேலை பார்க்கச் சொல்வதை நிறுத்த வேண்டும், போலீஸ் அதிகாரிகள் குற்றவாளிகளிடம் மனிதாபிமான முறையில் பழக வேண்டும் போன்றவை இவர்களது கோரிக்கைகள்!

—எஸ். எஸ். மணி



தொடரும்.

பழமொழிகள் பற்றி பழமொழிகள்

✗ நினைவில் உள்ள நல்ல பழமொழி பெட்டியில் உள்ள தங்க நாணயம் போன்றது.

—ஸ்வீடன்

✗ பழமொழியில் உயர்ந்த கருத்து மலிவாகக் கிடைக்கும்.

—ஸ்விட்ஸர்லாந்து

✗ நல்ல பழமொழி எந்த நேரமும் பயனளிக்கும்.

—அமெரிக்கா

✗ பழமொழி அறிவிலிருந்து வருகிறது. அறிவு பழமொழியிலிருந்து வருகிறது.

—ரஷ்யா

✗ பழமொழியில் பொய் கிடையாது.

—இந்தியா

தொகுப்பு : டாக்டர் இரா. மோகன்



✖ பாசு சட்டர்ஜி



✖ சத்யஜித்ரே

Best wishes to the readers of KALKI — Satyajit Ray 7/1/80.

பி. சட்டர்ஜி விமர்சனங்கள்

"இந்தப் படத்தின் கதை உரிமையை உனக்கே கொடுத்து விடுகிறேன். எனக்கு வேண்டாம்!''

''நான் இதில் எதையும் தொடவே முடியாது. ஏன் என்றால் இதன் உரிமை உனக்கும் இல்லை எனக்கும் இல்லை, முன்பே இவருக்குக் கொடுத்து விட்டேன்!''

''எனக்கு வேண்டவே . வேண்டாம். மொத்தமும் நீங்கள் இருவருமே பங்கு போட்டுக் கொள்ளுங்கள்!''

இந்தத் தமாஷ் பேச்சு நடைபெற்ற இடம் ''சந்தோஷ்'' தியேட்டரின் வராந்தாவில். பேசியவர்கள் தமிழ்நாட்டின் தலைசிறந்த கதாசிரியர்கள் மூன்று பேர்.

முதல் நாளன்று காணப்படாத சில இயக்குனர்கள் 4-ம் தேதியிலிருந்து தென்பட்டனர். எஸ். பி. முத்துராமன், பாரதிராஜா, ஒளிப்பதிவாளர் பாபு, கதாசிரியர் தூயவன், பஞ்சு அருணாசலம், இளையராஜா முதலியோர் ஒவ்வொருவராக வர ஆரம்பிக்கவும் விழா களை கட்டி விட்டது.

''இளையராஜா வந்திருக்கிறாரே, டேப் ரிக்கார்டர் கொண்டு வந்திருக்கிறாரா?''

''அவர் டேப் பண்ண வரவில்லை. தமது பாட்டை யாராவது காப்பி அடித்திருக்கிறார்களா என்று பார்க்க வந்துள்ளார். இவருடைய ''மின்மினிக்கு''(சிவப்புரோஜாக்கள்) பாட்டைதானே 'நூரி' படத்தில் அப்படி போட்டுள்ளார்கள். இது ஒருவகை கிண்டல்.

''ஐந்து 'படங்களை விமர்சனம் செய்யுங்களேன்'' என்று ஒரு நடிகரிடம் கேட்டுக் கொண்டதற்கு ''நான் படத் தயாரிப்பாளராக வந்துள்ளேன். நடிகராக அல்ல. நான் ஐந்து படங்களைச் சிறந்தது என்று சொன்னால் அந்த ஐந்தையும் மற்றவர்கள் காப்பி அடிக்கத் தயாராகி விடுவார்கள்'' என்று கூறி நழுவி விட்டார்!

கமலஹாசன், ஒரிரு படம் தான் பார்த்தார் என்று நினைக்கிறேன். அப்புறம் அவரை எங்குமே காணவில்லை. ஆனால் அவரது அண்ணன் சாருஹாசன் அவரது மகள் சுஹாசினி ஆகியோர் தொடர்ந்து தென்பட்டனர்.

டைரக்டர் ருத்திரைய்யா திடீர் என்று 5-ம் தேதி காலையில் தென்பட்டார். ''எவ்வளவு படங்கள் பார்த்தீர்கள்?'' என்றேன். ''நான் படம் பார்க்க வரவில்லை. டிஸ்கஷனுக்காக வந்திருக்கிறேன்'' என்றார்.

பாலசந்தர் குழாத்தைச் சேர்ந்த அனந்து விடாமல் படங்களை இதுவரை பார்த்துக் கொண்டு வருகிறார். தொடர்ந்து பார்க்கப் போவதாகச் சொல்கிறார்.

நான்காம் தேதி மாலை பல்லவி திரையரங்கில் சத்யஜித்ரே படங்களின் சிறு விழா எடுத்தனர். அரங்கம் நிரம்பி வழியவில்லை. மூன்றாம் தேதி துவக்க விழாவைப் போலத்தான் இருந்தது. சத்யஜித் ரேயைப் பற்றிய புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது. அவரது படங்களை எல்லாம் வரிசைப்படுத்தி ஒரு கண்காட்சியும் அமைத்திருந்தனர்.

இந்த விழாவில் ரேயை பாராட்டிப் பலர் பேசினார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் உலகப் புகழ் பெற்ற இயக்குனர் ரோமன் போலன்ஸ்கி. அவர் தமது உரையில் ரே படமெடுத்துக் கொண்டிருந்த போது நான் திரைப்படக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அவர் ஒரு சிறந்த இயக்குனர். ஆனால் இந்தியாப் படங்கள் எண்ணிக்கையில் தான் அதிகமே ஒழிய தரத்தில் இல்லை. அதை உயர்த்தப் பாடுபட வேண்டும்'' என்று அப்பட்டமாகச் சொன்னார்.

''எனக்கு இப்படி ஒரு விழா எடுக்கும் போதுதான் நான் இருபத்தி ஐந்து ஆண்டுகளாகப் படங்களை இயக்கி வருகிறேன் என்பது எனக்கே நினைவுக்கு வருகிறது'' என்றார் ரே. அவர் தமது படங்களுக்காக வரைந்த சித்திரங்களைக் கண்காட்சியில் வைத்திருந்தார்கள். தகவல் ஒலிபரப்பு செயலர் செய்கல் ''இவை எல்லாம் உங்களுடையதா?'' என்று ரேயைக் கேட்க அவர், ''என்னுடையதாக இருந்தது; இப்பொழுது அரசுக்குச் சொந்தமாகி விட்டது'' என்றார். ரே பல துறைகளில் வல்லுனர். எழுத்தாளர், ஓவியர், இசையமைப்பாளர் — பத்திரிகை ஆசிரியர், குழந்தைக் கதைகளை எழுதுபவர் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

'சத்யஜித்ரே' கல்கி வாசகர்களுக்காகத் தாம் பார்த்த படங்களை விமர்சிக்கிறார்.



✖ 'மெஸிடார்'

சுவாமி, சோடி—சி—பாத் முதலிய பல படங்களை இயக்கிய பாசு சட்டர்ஜியும் தாம் பார்த்த சில படங்களை விமர்சிக்கிறார். இதோ:

பாசு சட்டர்ஜி:

MESSIDOR (சுவிஸ்—பிரஞ்சு தயாரிப்பு): இந்தப் படத்தைப் புரட்சிகரமானது என்று வர்ணிக்க முடியாது. கதை என்று பார்த்தால் அதிகம் இல்லை. இரண்டு பெண்கள் வீட்டை விட்டு ஓடுகிறார்கள். அவர்கள் யாரை எல்லாம் சந்திக்கிறார்கள், அவர்களுக்குத் துன்பம் எப்படி வருகிறது. கடைசியில் அவர்கள் எப்படி கைதிகளாகுகிறார்கள் என்று சித்திரிக்கப்பட்டுள்ளது. ஒரு மாறுபட்ட படம் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒளிப்பதிவு நன்றாக உள்ளது. வெளிப்புறக் காட்சிகள் அருமை. இடைவேளைக்குப் பிறகு முன்னர் பார்த்த பல காட்சிகளே திரும்பவும் வருகின்றன. இதைத் 'தவிர்த்திருக்கலாம். இது அலெயின் டேனர் எழுதி இயக்கியது.

GETTING OF WISDOM (ஆஸ்திரேலியா) இது ஒரு காலக் கட்டத்தை உடைய நல்ல படம். ஆனால் 1980-ம் வருடம் இந்தியாவில் உள்ள எனக்கு ஆஸ்திரேலியாவில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள விருப்பம் இல்லை. ஒரு சிறிய பெண்ணின் பள்ளி வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்று சுவைபடச் சித்திரிக்கும் படம். நான் நடப்புலக மனிதன். இருபதாம் நூற்றாண்டில் வாழ்பவன். அதில் நடப்பதையே பார்க்க விரும்புபவன்.

I-TINTIN (பெல்ஜியம்): நான் காமிக் நிறைய படிப்பதால் பார்க்க விரும்பினேன். இந்த மாதிரி பட விழாவில் 'டாக்குமெண்டரி' படங்களைப் போடவே கூடாது. ஏனோ இதைக் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். நான் தியேட்டருக்குச் சென்றுவிட்டுப் பாதியில் திரும்பி விட்டேன். ரொம்பச் சாதாரணம்.









✖ பெல்ஜியம் படம்: ஐ - டின்டின்

✖ ஆஸ்திரேலியப் படம்: தி கெட்டிங் ஆப் விஸ்டம்

✖ நியூயார்க் நியூயார்க்

✖ யு. எஸ். ஏ. படம்: ''ஹார்ட் கோர்''

REMEMBER MY NAME (யு.எஸ்.ஏ.) நல்ல படம். ஒரு பெண் கைதி விடுதலையாகி வெளியே வருகிறாள். தனது கணவன் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துவதைப் பார்த்து வஞ்சம் தீர்த்துக் கொள்ள நினைக்கிறாள். அதை எப்படி செயலில் நிறைவேற்றுகிறாள் என்பதுதான் கதை. இதில் கைதியாக நடிப்பவர் Geraldine Chaplin. இவரது நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. அதனால் தான் இவர் பாரிஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகை பட்டம் பெற்றார். நான் பார்த்த நல்ல படங்களில் இதுவும் ஒன்று.

LAST WALTZ (யு.எஸ்.ஏ.): ஒரு வாத்திய குழுவைப் பற்றிய கதை. அவர்களது பல சிறப்பு இசை நிகழ்ச்சிகளை வைத்து எடுக்கப் பட்டிருந்தது. ஹாலிவுட்டின் தலைசிறந்த இயக்குனர்களில் ஒருவரான Martin Scorcese எடுத்தது. இசைப் பிரியர்களுக்கு ஒரு விருந்து. எனக்கல்ல!

HARD CORE (யு.எஸ்.ஏ.): நல்ல கமர்சியல், மசாலா படம். ஒருநாள் திடீர் என்று பிக்னிக் சென்ற மகள் காணாமல் போய் விடுகிறாள். தகப்பனார் ஒரு துப்பறியும் நிபுணரை வைத்துத் தேடுகிறார். 'புளு' பிலிமில் தமது மகள் நடிப்பதைப் பார்த்து அந்த வட்டாரத்தில் நுழைந்து தேடுகிறார். செக்ஸ் காட்சிகள் அதிகம் என்றாலும் படத்தோடு ஒட்டி வருகிறது. கடைசியில் தமது மகளை எப்படி கண்டு பிடிக்கிறார் என்பதே படம். எடுத்த முறை நன்றாக இருந்தது. ஜார்ஜ்—சி ஸ்காட் தகப்பனாராக மிக இயற்கையாக நடித்துள்ளார்.

சத்யஜித் ரே:

NOSFERATU THE VAMPIRE (யு.எஸ்.ஏ.) முன்பே இது மௌனப் படமாக வந்திருக்கிறது. இதைவிட அது மிகவும் நன்றாக இருந்தது. இந்தப் படத்தில் ஒளிப்பதிவு மிகவும் நன்றாக உள்ளது. படப்பிடிப்புக்கு இவர்கள் தேர்ந்தெடுத்த இடங்கள் அருமை. ஆனால் படம் நம்மை நெருங்கி வராமல் கொஞ்சம் கொஞ்சமாக, ஏனோ நம்மை விட்டு விலகிப் போவது போல் இருக்கிறது. இடைவேளைக்குப் பிறகு படத்தை அவ்வளவாக ரசிக்க முடியவில்லை.

பாசு சட்டர்ஜி: இது டிராக்குலா வகைப் படம் தான். நல்ல படம். நாம் பயப்படும் படியான சூழ்நிலையை நன்கு உருவாக்கியிருக்கிறார்கள்.

NEW YORK NEW YORK (யு.எஸ்.ஏ.): இசை பற்றிய படம்தான் என்றாலும் ஒரு சிறு மாற்றம். இசையமைப்பாளரைப் பற்றியும் வாத்தியம் வாசிப்பவரைக் குறித்தும் கதையுள்ள படம். இசையில் பற்று மட்டுமல்ல, அதையே தொழிலாகக் கொண்டுள்ள இருவரைப் பற்றிய கதை. இருவரும் திருமணம் செய்து கொண்ட பிறகு அவர்களது வாழ்க்கை எப்படி மாறுகிறது என்பதை மிக அழகாகச் சித்திரிக்கிறார் இயக்குனர் மார்ட்டின் ஸ்கார்சி. நீளம் அதிகம். கதாநாயகனாக வரும் ராபர்ட்—டி—நிரோவும், நாயகி லிசா மென்னிலியும் மிகச் சிறப்பாக நடித்துள்ளனர்.

THE BOXER (ஜப்பான்): ஒரு குத்துச் சண்டை வீரரின் வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களை கதையாக்கி இருக்கிறார்கள். ஆனால் குத்துச் சண்டையைப் பற்றி மட்டுமே உள்ளது. குத்துச் சண்டைப் பயிற்சிகளைக் குறைத்திருக்கலாம். முடிவு அருமை.

THOSE MAGNIFICENT MEN WITH THEIR CRANKING MACHINES (செக்கோஸ்லாவாகியா)

சத்யஜித் ரே: பார்க்கலாம். நகைச்சுவையாக உள்ளது. ஆனால் "great" என்று சொல்ல முடியாது.

பாசு: அழகாகப் படம் எடுத்திருந்தார்கள். ஒவ்வொரு காட்சியிலும் நகைச்சுவை துளிர்விட்டது. சினிமா எப்படி உருவானது. ஆரம்ப காலச் சினிமா எப்படி படமாக்கப்பட்டது என்பது போன்ற பல விஷயங்களை மிகவும் நகைச் சுவையோடு காட்டியுள்ளனர். நான் இந்த விழாவில் இதுவரை பார்த்ததிலே சிறப்பான படம் இதுதான்.

BAPTISM (ஹங்கேரி):

சத்யஜித் ரே: எனக்கு இந்தப் படம் குழப்பத்தைக் கொடுத்தது. காரணம் நிறைய ஃபிளாஷ் பாக் காட்சிகள். அவை நாம் கதையைப் புரிந்து கொள்ள முடியாதபடி நம்மைக் குழப்பி விடுகின்றன. கதையின் பாதையையே மறைத்து விடுகின்றன. இந்தப் படத்தின் இயக்குனர் இஸ்தவான் கால் மிகுந்த திறமைசாலி. ஆனால்.....

பாசு: ஒரு சிற்பி தமது பழைய கிராமத்துக்கு வர அவருக்குப் பழைய நினைவுகளும் வருகின்றன. இதைத்தான் எடுத்துள்ளார்கள். ஆரம்பம் அழகு. ஆனால் போகப் போக எங்கே போகிறது என்றே தெரியவில்லை!

INTERIORS (யு.எஸ்.ஏ.):

ரே: மிகச் சிறப்பான படம். முதல்தரமானது. உணர்வுகளை வைத்து மிக அருமையாக எடுக்கப்பட்டுள்ளது. நான் பார்த்த விழாப் படங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது.

பாசு: ஹாலிவுட்டின் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகராக இருந்து இன்று தலைசிறந்த இயக்குனராக மாறியுள்ள உட்டி ஆலன் (Woody Allen) இயக்கிய படம் என்பதால் ஆர்வத்துடன் சென்றேன். ஆனால் ஏமாற்றம். கதை என்று விசேஷமாகக் கூற ஏதுமில்லை. ஒரு குடும்பம். அதில் உள்ள மூன்று சகோதரிகள். இவர்களது தகப்பனார் இவ்வளவு காலத்துக்குப் பிறகு தம் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறார். இதைத்தான் காட்டுகிறார்கள். வசனங்கள், மிக அதிகம். பேசுகிறார்கள், பேசுகிறார்கள், அப்படிப் பேசுகிறார்கள்! பாதி ஆங்கிலம் நமக்குப் புரிவதில்லை. பின் எப்படி உட்கார்ந்து ரசிக்க? தொகுப்பு: **"சலன்"**

அடுத்த வாரம் சில தமிழ்ப்பட டைரக்டர்கள் விழாப்படங்களை விமர்சிப்பார்கள் என எதிர் பார்க்கலாம்.

அலைஓசை கருத்தரங்கு

அமரவாழ்வு பெற்ற அலைஓசை

மில்டனின் கருத்து: ''சிறந்த நூல் என்பது ஒரு பெருங்கலைஞனின் உயிர்த்துடிப்பாகும். அவன் வாழ்நாளைக் கடந்து பலகாலம் நிலைபெற்று வாழ்வதற்காகப் பக்குவம் செய்யப்பட்ட உயிர் அனுபவமாகும் அது. ''கல்கியின் உயிர்த் துடிப்பினை'' 'அலைஓசை'யின் முகப்பாகிய 'தபால் சாவடி' முதல் முடிவாகிய 'பாமா விஜயம்' வரையிலும் நாம் தெளிவாக உணர முடியும்.

''சாலையின் இரு புறத்திலும் ஆல மரங்கள் சோலையாக வளர்ந்திருந்தன. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் போல் அந்தச் சாலை எங்கே ஆரம்பமாகிறது, எங்கே முடிவாகிறது என்று தெரிந்து கொள்ள முடியாததாயிருந்தது.'' கல்கியார் தம் 'பூகம்பத்'தைத் தான் எவ்வளவு அமைதியாகத் துவக்குகிறார்? இவ்வளவு அமைதியாகத் துவங்கும் புதினத்தில் தான் எத்தனை நிகழ்ச்சிகள்? எவ்வெவ் விதமான மனிதர்கள்? எத்தனை எத்தனை இடங்கள்? வரலாற்றையே அல்லவா தம் நூலில் பதிவு செய்து விடுகிறார்.

அலைஓசை ஒரு நாவலுக்கு வேண்டிய அனைத்துப் பண்புகளையும் தன்னகத்தே நிறுத்திக் கொண்டு ''தான் ஒரு சிறந்த நாவலா'' என்ற சோதனையில் முழு வெற்றி பெற்றுவிடுகிறது. 'அலைஓசை'யின் நிறைவு பெற்ற தன்மை அதன் நிலைபேற்றுக்கு முதற் காரணமாகின்றது.

''கல்கிக்குப் பின் வந்த எழுத்தாளர்களில் பலர் அவர் உருவாக்கிய பாதையை உறுதியாகப் பின்பற்றுகின்றனர். எனினும் நாம் வாழ்ந்த காலத்தின் அரசியல் போராட்ட பின்னணியில் எழுந்த நாவல்களில் அலைஓசையின் இடத்தை வேறொரு நாவலும் எட்டிப் பிடிக்கவில்லை'' என்கிறார் டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்கள். கல்கியின் இத்தகைய தனித்தன்மையும் 'அலைஓசை'யின் நிலைபேற்றுக்குத் தகுந்த காரணமாகி விடுகிறது.

''1930 முதல் 1948 வரையுள்ள பரந்துபட்ட காலமும், பாரதகண்டம் முழுவதுமே களமாகவும் அமைந்து, 'அலைஓசை'க்கு ஒரு சிறந்த தேசிய முத்திரையைப் பொறித்துவிட்டன. அலைஓசை பாரத சமுதாயம் முழுவதுமே வியாபித்துள்ள ஒரு அகில இந்திய சமூக நாவல்'' என்பது 'தீபம்' நா. பார்த்தசாரதி கருத்து. இத்தகைய பரந்த உள்ளப் பாங்கும் கல்கியின் 'அலைஓசை' பல காலம் வாழ்வதற்குத் தன் பங்கைத் தந்து நிற்கிறது.

கல்கி ஒரு நாவலாசிரியராக மட்டும் நின்று அலைஓசை' எழுதியிருந்தால் எத்தனையோ நாவல்களில் இதுவும் ஒன்றாகி நின்றிருக்கும். அவ்வாறின்றி விடுதலைப் போராட்டமாகிய வேள்வித் தீயில் மாசுகளை எரித்துக் கொண்ட பசும் பொன்னாக நின்று இந்நாவலை எழுதியமையால் நாவல் உலகத்திலே தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டது.

''கல்கியின் கதாபாத்திரங்கள் ஒவ்வொரு வாசகனின் உள்ளத்திலும் ஏறி நடக்கும்



சக்தி பெற்றவை. ''ஆண்டுகள் பலவாகியும் அன்று படித்த போது தோன்றிய உணர்வுகளையே இன்றும் கல்கியின் படைப்புக்கள் வாசகனின் உள்ளத்திலே தோற்றுவிக்கின்றன என்பது திரு. சி. கஸ்தூரிரங்கன் அவர்களது கருத்து. கல்கி தம் முன்னுரையில் ''இந்தக் கதையைக் கதாபாத்திரங்களேதான் எழுதியிருக்கிறார்கள். ஆசிரியன் செய்திருப்பதெல்லாம் 18 வருஷத்திய இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றை இந்தக் கதைக்குப் பின்னணியாக அமைத்துக் கொடுத்திருப்பதுதான்'' என்று குறிப்பிடுகிறார். உலக இலக்கியங்கள் அனைத்துள்ளும் உலவி வந்த மும்முனைப் போராட்டத்தை மாற்றி மனிதனின் உளவியலை உணர்த்தும் வகையில் சந்தர்ப்பத்துக்கேற்ப நல்ல முறையிலும், தீய முறையிலும் நடந்து கொள்ளும் சௌந்தரராஜன்—சூர்யா, சீதா—தாரிணி ஆகியோரைப் படைத்துமனிதனிடத்தில் மறைந்து கிடக்கும் மானுடம், தெய்வீகம், விலங்குத்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தி மனிதன் தன்னைத் தானே உணரச் செய்கிறார். இது 'அலைஓசை'யைப் படிப்பவர்கள் பெறுகின்ற பெரும் அனுபவம்.

''பண்டிட் நேரு மகாபுருஷர். மாபெரும் தலைவர் தாம் என்கிற உணர்ச்சியே இல்லாமல் தொண்டர்களோடு தொண்டராகப் பணியாற்றுகிறார். அவர் நடிப்பதே கிடையாது'' ''இது என்ன பிரகாசம்? இது என்ன ஜோதி? தேஜோமயமான உருவம் ஒன்று எங்கிருந்தோ வருகிறதே?'' என்பனவற்றால் பண்டிட் நேரு, காந்திமகானின் தெய்வீக உரு ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதுடன் நில்லாது, அந்த விடுதலை இயக்கம் இந்நாவலின் கதைமாந்தர்களை எவ்வெவ்வாறு இயக்கியது என்பதைப் படிக்கும் போது நாம் அந்தக் காலகட்டத்திலேயே வாழ்வது போல உணருகிறோம். இது ஒரு நாவலாசிரியரின் தலையாய வெற்றி.

'அலைஓசை'யில் பல இடங்களில் கல்கி திருமணத்துக்கு ஜாதகம் பார்ப்பது, (அலை ஓசை பக். 90) பெண் பார்க்க (பக்.92) வருவது போன்று நாட்டில் நிலவி வருகின்ற சில சம்பிரதாயங்களை எல்லாம் சமுதாயம் களைந்து விட வேண்டும் என்று தமக்கே உரித்தான கிண்டலுடன் குறிப்பிடுகிறார். தலையாய நாவலாகிய அலைஓசை வெறும் பொழுது போக்கு நாவல் அல்ல. அது மனிதனைச் சிந்திக்க வைத்துச் சிறப்புறச் செயலாற்ற வைப்பது என்பதை உணருகிறோம்.

நல்ல எழுத்தாளன் என்பவன் இறந்த காலத்தை அறிந்து நிசழ்காலத்தைக் கண்டு வருங்காலத்தை உறுதிப்படுத்தும் ஆற்றல் உடையவன். ''வருங்காலத்தில் மெஜாரிட்டிதான், மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம் என்பதை அமரநாதன் வாயிலாகவும், ''சீமாச்சு மாமா, எழுதிக் கொடுத்தாலும் கொடுப்பேன். அல்லது வயலில் இறங்கி நானே உழுவேன். அப்போது நிலம் என்னுடையதாயிருக்கும்'' என்று சூரியா வாயிலாகவும் கூறுவதிலிருந்து அவரது தீர்க்க தரிசனத்தை உணரலாம்.

கல்கி, மக்கள் உள்ளத்தில் மாறாத வெறியைத் தூண்டி அவர் தம் சக்தியை அழிவுச் சக்தியாக்கும் எழுத்தாளர் இனத்தைச் சார்ந்தவர் அல்ல. கல்கத்தா, வங்காளம் போன்ற இடங்களில் நடந்த போராட்டங்களைக் குறிப்பிட்ட போது, ''ஜனங்கள் பைத்தியமாகி விட்டார்கள். அவ்வளவுதான். கல்கத்தாவுக்கு நவகாளியில் பழிவாங்குகிறார்கள். நவகாளிக்குப் பீஹாரில் பழி வாங்குகிறார்கள். பீஹாருக்கு இப்போது மேற்குப் பஞ்சாபில் பழிவாங்குகிறார்கள். இதன் பலன் என்னவாகுமோ கடவுளுக்குத்தான் தெரியும்'' (பக. 789) என்று மென்மையாகக் குறிப்பிட்டுப் பூசலை வளர்க்காமல், வளர்க்க விரும்பாமல் நிகழ்ச்சிகளை எல்லாம் பின்னணியிலும் அதன் விளைவுகளை அனுபவித்து நிற்கும் கதைப் பாத்திரங்களை முன்னணியிலும் படைத்து நிற்கும் கல்கியின் நாகரிகம் அவர் தம் 'அலை ஓசை'யை அமர வாழ்வு பெறச் செய்வதுடன் நாட்டு எழுத்தாளர் ஒவ்வொருவரும் எவ்வாறு இலக்கியம் படைத்தல் வேண்டும் என்பதைக் காட்டி நிற்கிறது. — **வள்ளியம்மாள்**

கண்ணன்: பாடகருக்கும் பிரகாசமான எதிர்காலம் உண்டு என்கிறாயே, எப்படி?

முரளி: பாடகர் பாடப்போவது 'லைட்' மியூசிக் ஆச்சே!

—லலிதா செல்லப்பா



அலை ஓசை - ஓர் அகராதி

அமரர் கல்கி அவர்களின் 'அலை ஓசை, நாவலைப் படித்து முடித்த போது இலக்கியத்தில் ஒன்பது சுவைகளுக்கும் மேலே ஏதோ ஒன்று இருக்கிறது என்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது. அதற்குக் 'கல்கி சுவை' என்றே பெயரிட்டு விடலாமா என்று கூட ஓர் எண்ணம் உண்டாயிற்று. பின்னே என்ன? காதல், சுதந்திரச் சரித்திரம், மன விகாரங்கள், தியாகங்கள், பெருமிதங்கள், பெருமூச்சுகள், மின்னலைப் போல குண மாறுதல்கள், கத்தியோடு திரியும் திகிலூட்டும் பெண்கள், தேர்தல் அட்டூழியங்கள், 'மிஸோஜினிஸ்ட்'டுகள் 'ஸாடிஸ்டு'கள், இட்(id)களுக்கும் சூபர்ஈகோக்களுக்கும் (Super ego) போராட்டத்தைத் தூண்டி விடும் ஈகோ (ego)க்கள் இத்யாதி கலவைகளை ஒரே மனிதரால் ஒரே நாவலில் எழுத முடியும் என்றால்—அது 'கல்கி' ஒருவரால்தான் முடியும் என்பதை 'அலைஓசை' பறைசாற்றுகிறது.

இப்போது கதாசிரியர்களுக்கு ஒரு தணிந்து போகும் (restraint) மனப்பான்மை வந்து விட்டிருக்கிறது. மேலோட்டமாக வெளிப்பூசல்களை அலசி, மனப்போராட்டங்களைத்தான் அதிகமாகச் சித்திரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கல்கியின் இந்நாவல் இத்தனை பெரிதாக இருப்பதற்குக் காரணம், அவர் வெளிப்பூசல், உட்பூசல் இரண்டையும் அலசித் தள்ளியிருக்கிறார். அதிலும் கடைசியில் வரும் அத்தியாயங்கள் உண்மையிலேயே நம்மைப் பிரமிப்புக்கு உள்ளாக்குகின்றன.

துரதிர்ஷ்டவசமாக இந்து — முஸ்லீம் கலவரங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. நிலச்சுவான் — குடிபடை தகராறுகள் இன்றும் உள்ளன. உண்மையான சுதந்திரம் மக்களுக்குக் கிடைக்கவில்லையே என்று சூர்யா ஏங்குவதைப் போல இன்றும் நாம் ஏங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். ராகவனைப் போல உத்தியோகப் பித்துப் பிடித்து அலைகிறவர்கள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். தாரிணிகள் 'தெரஸா'க்களாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சரஸ்வதி அம்மாள்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் 'மார்க்கண்டேயினி'களாக உலவி வந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைப் பொதுப்படுத்திப் படைக்கப்பட்ட 'அலையோசை' ஒரு 'டிக்ஷனரி' போல் பல விளக்கங்களைக்கொடுத்துக்கொண்டிருக்கிறது.

இதில் வரும் தேர்தல் பற்றிய வருணனைகள் இன்றும் கூடப் பொருத்தமாக இருக்கின்றன. 'எலக்ஷன் சனியன்' என்று ஓர் அத்தியாயத்திற்கு அந்தக் காலத்திலேயே பொருத்தமாகப் பெயர் சூட்டியிருக்கிறார் அமரர் கல்கி. திடீரென்று கள்ள மார்க்கெட்டில் பணக்காரர் ஆகிவிட்ட சீமாச்சுவையரின் லீலைகள் இன்னும் தொடருகின்றன. 1946-லேயே அப்படியென்றால் இன்று கேட்கவே வேண்டாம். உலகியலை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார் கல்கி அவர்கள்! பட்டாபிராமனின் குடும்பத்தில் நிகழ்பவை போன்ற குழப்பங்கள் ஒவ்வொரு வேட்பாளரின் வீட்டிலும் நிகழலாம். இந்த விஷயத்தில் 'அலையோசை' ஒரு நல்ல அங்கதமாக (Satire) அமைந்திருக்கிறது.

உலகத்தின் முதல் ஓசை 'ஓம்' என்னும் பிரணவநாதம் என்பார்கள். கிரகங்கள் ஒன்றை ஒன்று சுற்றி வருவதில் கூட இனிமையான ஒரு தாளகதி (harmonious rhythm) இருப்பதாக பிதாகரஸ் (Pythagorus) என்ற கிரேக்க கணக்கியல் அறிஞர் கூறியதை மில்டனைப் போன்ற ஆங்கிலக் கவிகள் பாடியிருக்கிறார்கள். ஆனால் கல்கியின் 'அலையோசை' அவலச் சுவை கொண்டதாக இருக்கிறது. வாழ்க்கையின் அநித்தியங்களை அவ்வப்போது ராஜம்மாளின் காதிலும், சீதாவின் காதிலும் அந்த ஓசை நுழைந்து உணர்த்துகிறது. வாழ்க்கையில் மிகவும் நொடித்துப் போன பெண்கள் இவர்கள் இருவர்தாம். அதனால் அவ்வோசை அவர்களுக்கு மட்டுமே கேட்குமாறு கல்கி அவர்கள் அமைத்திருப்பது பாராட்டத்தக்கது. ஒருவகையான மனப் பிராந்தி (Phobia) அவர்களுக்கு இருக்கிறது. சீதா செவிடான பின்னர் கூட Vocalization ல் அந்த ஓசை கேட்கிறது.

1948 ஜனவரியில் மகாத்மாவின் கொலை கல்கியை மிகவும் பாதித்து விட்டிருக்கிறது. அந்தச் சூட்டோடு 1948 மார்ச்சில் 'அலை ஓசை'யை ஆரம்பித்திருக்கிறார். அவருடைய மனக்கொதிப்பு கதாபாத்திரங்களின் வாயிலாகச் சுடர் விட்டு எரிகிறது.

நாவலில் வரும் ராகவனும், சூர்யாவும், சீதாவும், லலிதாவும், ஆங்கிலத்தில் கூறப்படும் '*round character*' வகையைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய குணாதிசயங்களை ஒரே வரியில் அடக்க முடியாதபடி சிக்கலானவர்கள். இதற்கு நேர்மாறான '*flat Character*' வகையைச் சேர்ந்தவர்கள், நாவல் முழுதும் ஒரே சீரான குணாதிசயங்களைக் கொண்டிருப்பார்கள். பத்மலோசன சாஸ்திரிகள், காமாட்சியம்மாள், கிட்டாவையர், சரஸ்வதியம்மாள் போன்றோர் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

தாரிணி ஏறக்குறைய ஒரு *Flat Character* வகையைச் சேர்ந்தவள். லட்சியம் மாறாத ஒரு பெண்.

சூர்யாவும் ராகவனும் கதாநாயக ஸ்தானத்துக்கு மிகவும் போட்டியிடுகிறார்கள். இதில் இருவருமே தோல்வி அடைகிறார்கள் என்பது என் வாதம். சில சமயங்களில் ஆசைப்படக் கூடாததற்கெல்லாம் இருவரும் ஆசைப்படுகிறார்கள்.

முடிவில் ராகவன், குரூபியான தாரிணியை மணப்பதன் மூலம், அதற்கு முன் அவன் எத்தனை சுயநலவாதியாக இருந்தாலும் படிப்போரின் அநுதாபத்தைப் பெற்று விடுகிறான். ஷேக்ஸ்பியராவது 'ஹாம்லெத்' நாடகத்தில் ஒரு ஹாம்லெத்தின் பிரச்னைகளைச் சமாளிக்கிறார். அமரர் கல்கி அவர்கள் இந்நாவலில் இரண்டு மூன்று 'ஹாம்லெத்'களைச் சமாளித்திருக்கிறார்.

எல்லாக் கதாபாத்திரங்களும் கதையில் வரும் நிகழ்ச்சிகளுக்குக் கடவுள் மேல் பழி போடுகிறார்கள். அதைப் படிக்கையில் எனக்கு *King Lear*ல் வரும் ஒரு வரிதான் நினைவுக்கு வருகிறது. "*As flies to wanton boys are we to the Gods; They kill us for their sport.*

நாவலைப் புகழ்ந்து இத்தனை நேரம் எழுதிய நான் அதில் உள்ள சில குறைபாடுகளையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.


சீதாவுக்குத் திருட்டுப் பட்டம் கட்டும் இடம் அநாவசியமாக வளர்த்தப் பட்டிருக்கிறது. மௌல்வி சாகிப் உதவுவதைப் போல் காட்டப்பட பின்னால் எத்தனையோ சம்பவங்கள் அமைந்திருக்கின்றன. வார இதழில் எழுதும் போது அந்த இதழின் ஆசிரியரே வாராவாரம் தொடர்கதையாக எழுதியிருப்பதில் இப்படி ஒரு சம்பவத் திணிப்பு நடந்திருக்கலாம். ஆனால் கல்கி அவர்கள் புத்தகமாக வெளியிடும் போது சில நிகழ்ச்சிகள், உரையாடல்கள் முதலியவற்றைக் குறைத்து வெளியிட்டிருக்கலாம் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.


—விநோதன் சாயிராம்

மாதர்சங்கத் தலைவி:''சகோதரிகளே! நாளைக்கு சங்கத்துக்கு வரும்போது எல்லோரும் தங்கள் கணவர்களையும் அழைத்து வருமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏனெனில் சில புதிய சமையல் குறிப்புகளும் செய்முறை விளக்கங்களும் இடம் பெற இருக்கின்றன.''-விஜயலக்ஷ்மி ராமாமிர்தம்




பொங்கலோ
பொங்கல்!
பொங்கலோ
பொங்கல்!
பொங்கலோ
பொங்கல்!


'எதிர்க்கட்சி'
ஒன்று சேருமா?
ர்
க்
க
ட்
தி
சி
எ
காங்(அர்ஸ்)


என்னய்யா வாத்தியார்! உம் பையனை
'பெய்ல்' ஆக்கிவிட்டான்! ராஜிநாமா
பண்ணுய்யா!
16/39
2/39

1980 ஜனவரி 20
சித்தார்த்தி தை 6
மலர்: 38 இதழ்: 25



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்மியடி பாப்பா - பாரதியார்

எழுபத்தேழை மறவாதீர்!

வென்றவருக்கு: இந்திரா காந்தி அவர்களே! உங்களுக்கு நமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழகத்தில் உங்களுடன் ஒத்துழைத்து பக்கபலமாக நின்ற கலைஞர் கருணாநிதிக்கும் நமது நல்வாழ்த்துக்கள். அதே நேரத்தில், ''எழுபத்தேழை மறவாதீர்கள்'' என்றும்-மீண்டும் பாரதப் பிரதமராகியுள்ள உங்களுக்குக் கூறிக்கொள்கிறோம். அன்று உங்களைப் பதவி இறக்கம் செய்த மக்கள்தான் இன்று உங்களை அரியாசனத்தில் அமர்த்தியிருக்கிறார்கள். மறுபடி அவர்கள் மனம் மாறுமாறு நடந்து கொண்டு விடாதீர்கள். கர்வத்தை ஒழித்து, அடக்கம் பயிலுங்கள். கடுமையை நீக்கி, கனிவு காட்டுங்கள், விவேகத்துடன் பிரச்னைகளை அணுகுங்கள். எதிர்க்கட்சி என்று சொல்லிக் கொள்ளும்படி நாடாளுமன்றத்தில் விசேஷமாக எதுவும் இல்லாததால் ஜனநாயகப் பண்புடன் உங்கள் கட்சிக்குள்ளேயே சுதந்திரமாகப் பிரச்னைகளை விவாதிக்க அனுமதி கொடுங்கள். அப்போதுதான் தெளிந்த சிந்தனை பிறக்கும். அவற்றைப் பரிசீலித்து முடிவெடுத்த பின் அதில் உறுதியாக நில்லுங்கள். தேசம் உங்களைப் போற்றும்.

தோற்றோருக்கு: சோர்வடையாதீர்கள்! எழுபத்தேழை மறவாமல் எண்ணிப் பாருங்கள்; நம்பிக்கை பிறக்கும். அதே நேரத்தில் நீங்கள் செய்த தவறுகளையும் நினைத்துப் பாருங்கள். ''மீண்டும் இந்திரா?'' என்ற தலைப்பில் சில வாரங்களுக்கு முன் எழுதிய தலையங்கத்தில், 'உங்களுடைய மெத்தனப் போக்கினாலும் உட்பூசல்களாலும் மும்முனைப் போராட்டத்துக்கு வழி வகுத்து, பாரத நாட்டையே வெள்ளித்தட்டில் வைத்து இந்திராவிடம் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்று எழுதினோம். இருப்பினும் இந்திரா—சஞ்சய் அண்டு கம்பெனியின் பழைய சரித்திரத்தை நினைவில் கொண்டு அவர்களுக்கு வோட்டளிக்க வேண்டாமென்றும் அடுத்து எழுதிய தலையங்கங்களில் மக்களை வேண்டினோம். ஆனால் மக்கள் உங்களுக்குப் பாடம் கற்பிக்கவே தீர்மானித்து விட்டார்கள். விளைவு இந்திரா காட்டில் மழை! இனியேனும் கடந்த காலத்தவறுகளை அலசிப்பார்த்து எதிர்காலத்திலாவது அவற்றைத் தவிர்த்தால் நீங்கள் மறுபடி ஆட்சிக்கு வருவது அசாத்தியமல்ல. ஒற்றுமையாக ஓய்வின்றிச் செயல் படுங்கள். மனப்பூர்வமாக மக்களுக்காக உழைத்துப் பாடுபடுங்கள். கட்சியிலுள்ள உற்சாகம் மிக்க இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பளித்து முன்னணிக்குக் கொண்டு வாருங்கள்.

மக்களுக்கு: உங்கள் தீர்ப்பை ஏற்று அதற்குத் தலை வணங்குகிறோம். வோட்டுரிமைக்குள்ள மகத்தான சக்தியை நீங்கள் நன்கு புரிந்து கொண்டு விட்டீர்கள். முன்பு இந்திரா சர்வாதிகாரியாகச் செயல்பட்டபோது அவருக்கு எதிராக வாக்களித்தீர்கள். அது ஜனதாவுக்கு ஆதரவாக முடிந்தது. இப்போது ஜனதாவின் உட்பூசல்களையும் கையாலாகாத்தனத்தையும் கண்டிக்கும் விதமாக வோட்டளித்தீர்கள். அது இந்திராவுக்கு ஆதரவாக முடிந்தது. மூன்றிலிரண்டு பங்குக்கும் அதிகமான பெரும்பான்மை பலத்தைக் கொடுத்ததன் மூலம் அபரிமிதமான அதிகாரத்தை - சர்வாதிகாரத்தை நீங்களே அவருக்கு அள்ளி அளித்து விட்டீர்கள். இது எங்கு போய் எதில் முடியுமோ என்று கவலையாகவே இருக்கிறது. ஆயினும் எமது கவலை ஆதாரமற்றது என்று நிரூபிக்கப் படுமானால் எம்மை விட அதிகமாக மகிழப்போகிறவர் யாருமில்லை. ''பாரத மக்கள் 1980 தொடக்கத்தில் விவேகத்துடன் நடந்து கொண்டார்கள்; இந்திராவை மறுபடி பிரதமராக்கியதன் மூலம் ஜனநாயகம் தழைக்கவும் நல்லாட்சி மலரவும் வழி வகுத்தார்கள்; தொழில் துறையும் பொருளாதாரமும் சிறந்து, வேலை வாய்ப்புக்கள் பெருகி, ஏழ்மை குறைந்து, சுபிட்சம் நிலவியது'' என்று எதிர்காலத்தில் சரித்திரம் கூறவேண்டும் என்பதே நமது பிரார்த்தனை. ஆனால் ஒருவேளை இப்படி நடக்க வில்லையானால், இந்திராவின் போக்கு பழைய எதேச்சாதிகாரப் பாதையிலேயே திசை திரும்புமானால் ''எழுபத்தேழை மறவாதீர்கள்'' என்று இப்போதே உங்களுக்கும் வலியுறுத்திக் கூறி வைக்கிறோம்!

மேலட்டை-வண்ணப்படம்: **வித்யாவ்ரதா.**

பூக்குழி

லக்ஷ்மி

22

வேகமாக இரண்டே தாவலில் மாடி அறைக்குள் வந்து நின்ற காமேஷின் இதயம் வெடித்து விடும்போல் மார்பு எலும்புக் கூட்டின்மீது மோதிக் கொண்டது. கால்கள் தள்ளாடச் சோபா ஒன்றின்மீது தொப்பென்று விழுந்தான். நெற்றியில் பொடித்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒத்திக் கொண்டான். மூச்சு விட முடியாது போல் திகில் உணர்வு அவன் நெஞ்சை அமுக்கவே திணறிப்போனான்.

அவனது அட்டகாசமும் ஆர்ப்பாட்டமும் எங்கே போயின? காய்ச்சல் வந்து விட்டது போல் உடம்பெல்லாம் ஏன் இப்படி நடுங்கித் தொலைக்கிறது? ஒரு கிராமத்துப் பெண்ணிடமா அவன் இப்படி மிரண்டு போய்விட்டான்? பெண்ணா அவள்?... சே! சே! எப்படிப் பயங்கரமாகக் கூச்சலிட்டாள்? ரத்தம் போலச் சிவந்துவிட்ட முகமும் நெருப்பாக மின்னிய கண்களும் விரித்துப் போட்ட கூந்தலுமாக விளக்கொளியில் ரத்தக் காட்டேரி போலல்லவா ஒரு விநாடியில் அவனைக் கிடுகிடுக்க வைத்துவிட்டாள். கோபாவேசத்தில் நின்ற அவளைப் பார்த்து உண்மையில் அவன் பயந்துதான் போய்விட்டான். கையில் பிடித்துக் கொண்டிருந்த அந்தக் கனமான விளக்கை ஓங்கி மண்டையில் போட்டுவிடுவாளோ என்றுகூட அச்சமாகத்தான் இருந்தது. போயும் போயும் ஒரு பெண் முன்... அதுவும் தனியாக இருக்கும்போது ஏன் இப்படிக் கோழையாகிப் போனான்? ஏன்? ஏன்? ஒரு சமயம் அவள் வழிபடுகிற அந்த மாரியம்மனின் மாபெரும் சக்தி அவளுடன் கலந்துகொண்டு அவனை அப்படி ஒரு கலக்குக் கலக்கி விட்டதோ? இன்னமும் அவன் நெஞ்சு படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. எச்சிலை விழுங்கிக் கொண்டு தன்னையே நிதானப்படுத்திக் கொள்ள அவன் முயன்று கொண்டிருந்தான்.

கையில் பிடித்துக் கொண்டிருந்த குத்து விளக்கைப் பூஜை அறையில் இருந்த இடத்தில் வைத்துவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் அகல்யா. கூந்தலை அள்ளிச் சுற்றி முடிந்து கொண்டு மெல்லப் பின் பக்கம் சென்று கதவைத் திறந்தாள். ஆத்திரம் அடங்காது அவள் உடல் இன்னமும் ஆடிக் கொண்டிருந்தது.

''என்னம்மா... உள்ளே யிருந்து யாரோ கத்தினது போலச் சத்தம் கேட்டது....?'' பதைபதைத்த சிங்காரம் அவளை ஏற இறங்கப் பார்த்தான். சின்னம்மா ஏன் இப்படிக் கோபமாக இருக்கிறீங்க?''

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அகல்யாவுக்குச் சில விநாடிகள் பிடித்தன.

''சிங்காரம்! அத்தைக்கு உடம்பு ரொம்ப அதிகமாயிடுச்சு. நீயும் பூரணியும் எனக்குத் துணையா உள்ளே வந்து படுத்துக்குங்க. பூரணி என்னோடயே இருக்கட்டும். அத்தை உடம்பை நினைச்சு நான் ரொம்பப் பயப்படறேன்.'' தாங்க முடியாது திடீரென்று அவள் விம்மி விம்மி அழுதாள்.

சிங்காரத்தின் மனம் சங்கடப்பட்டது. எஜமானி என்றாலும் அவனுக்கு அகல்யா மீது தன் சொந்த மகள் போன்றதொரு பரிவு.

ஐயா வந்து சேர்ந்ததும் சந்தோஷமாக இருக்க வேண்டிய சின்னம்மா கண்ணும் கண்ணீருமா நிக்கறாங்களே... மனத்துக்குள் வேதனைப்பட்டான்.

''அழாதீங்கம்மா! கொஞ்சம் சுதாரிச்சுக்குங்க. நாளை ஒரு பொழுது போச்சுன்னா அடுத்த நாள் பூக்குழி. அது முடிஞ்சதும் பெரியம்மா எழுந்து உட்கார்ந்திடுவாங்க. பூரணி உங்களோடயே இருந்து உதவி செய்யும். சமையலைக் கூட அதுவே கவனிச்சுக்கும். நீங்க மனசை ரொம்ப அலட்டிக்காதீங்க. இதோ வரேன்...'' சொல்லிக் கொண்டே அவன் தோட்டத்துக்குள் விரைந்தான்.

சிறிது பொழுதில் பூரணியுடன் உள்ளே வந்தான். ஹாலில் தரையில் தன் பாயை விரித்துக் கொண்டு அவன் படுத்து விட்டான். பூரணி பஞ்சரத்தினத்தின் படுக்கையறை வாயிலில் கையை மடக்கி வைத்துக்கொண்டு படுத்துக் கொண்டாள்.

மேலே இருந்து வந்த பேச்சுக் குரலைக் கேட்டதுமே குற்ற உணர்வுடன் கதவை மெல்லச் சாத்திக் கொண்டு விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கை மீது சாய்ந்து



விட்டான் காமேஷ். அவனுக்கு உறக்கம் வந்தால்தானே?

அகல்யா புடவைத் தலைப்பால் அடிக்கொரு தடவை கண்களைத் துடைத்துக் கொண்டு மாரியம்மன் தாலாட்டை எடுத்து வைத்துக் கொண்டாள். தனக்குள்ளே விம்மலும் அழுகையும் நடுவே முத்து மாரியின் புகழை மெல்லப் படித்த வண்ணம் விடிய விடிய உறங்காது மாமியாரின் கட்டிலின் கீழ் தரையில் உட்கார்ந்திருந்தாள்.

அவள் கணவன் ராஜ்குமார் எங்கே? அவருக்கு என்ன நேர்ந்து விட்டது? வந்திருக்கும் பாவி — சண்டாளன் அவரைக் கொன்றுவிட்டானா? யார் அவன்? அவரிடம் ஏன் பகை? ஐயோ! முத்துமாரி... என்னை என்ன கோலம் செய்து விட்டாயம்மா... பக்தியுடன் உன்னை வழிபட்டதற்கு இது தானா பலன்?.... தனக்குள்ளே கேட்டவண்ணம் கண்ணீரை மாலை மாலையாகப் பொழிந்து கொண்டிருந்தாள்.

இரவு முழுவதும் உறங்காத காமேஷுக்கு மறுநாள் எழுந்தவுடனேயே தலையைச் சுற்றியது. சூடான வெந்நீரில் முழுகிவிட்டு வேறு உடுத்திக் கொண்டு அவன் தயாராகிக் கொண்டிருந்த சமயம் சிங்காரம் உள்ளே வந்தான்.

''அம்மா உங்களைக் கோயிலுக்கு வரச் சொன்னாங்க'' என்றான். காமேஷினால் மறுக்க முடியவில்லை.

கோவிலினின்று திரும்பியதும் சிங்காரம் அவனுக்குச் சாப்பிடக் காப்பி பலகாரத் தட்டைத் தூக்கிக் கொண்டு வந்து அறை மேஜை மீது வைத்தான். சாப்பிட்டதும் ''அம்மா கீழே வரச் சொன்னாங்க. உங்ககிட்ட முக்கியமா என்னமோ சொல்லணுமாம்.....'' என்று முணு முணுத்துவிட்டு அப்பால் சென்று விட்டான்.

அவன் கீழே இறங்கி வந்தபோது ஹாலில் அகல்யாவைத் தவிர யாரும் இருக்கவில்லை.

சூரிய உதயத்தைக் கண்டதும் அவனுக்கு மிகவும் துணிவு ஏற்பட்டு விட்டது போலும்.

வாயில் — கொல்லை இரு பக்கத்துக் கதவுகளையும் தாளிட்டு விட்டிருந்தான்.

''டாக்டர் வருவதற்குக் கொஞ்சம் நேரமாகும். அதற்கு முன் எனக்குச் சில விஷயங்கள் தெரிந்தாகணும்.'' ஆத்திரமான குரலில் அவன் அதட்டினான்.

முதல் முதலாக அவன் இந்த வீட்டுக்குள் நுழைந்தபோது அவன் பார்த்த அகல்யாவுக்கும் இப்போது அவன் முன்னால் நின்ற



இவனுக்கும் எத்தனை வித்தியாசம்? அவனுக்குப் பிரமிப்பாகத்தான் இருந்தது. மூகம் ஊதிக் கண்கள் சிவந்து — துயரத்தில் உதடுகள் துடிக்க உக்கிரமாகத் தன்னை வெறித்துப்பார்த்த அவளை எதிர்ட்டு நோக்கக் கூசி கடைசிவரை அவன் ஜன்னல் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றான்.

கலபமாகச் சமாளித்து விடலாம் என்ற துணிவில் அகல்யாவிடம் முறைகெட்டு நடந்து கொண்டது மாபெரும் பிசகு... என்றவரை அவன் மனத்திலே ஒரு உறுத்தல்.

''எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். இல்லாட்டாப்போலீசைக்கூப்பிடப்போகிறேன்.'' அகல்யாவின் ஆவேசக் குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது.

''போலீசா? இதென்ன வம்பு?'' 'திகிலடைந்ததுபோல் விசுக்கென்று திரும்பினான்.

மட்டமான பல குணங்கள் அவனிடம் குடிகொண்டிருந்தவை என்பது உண்மை. ஆனாலும் போலீசாருடன் மோதும் அளவுக்கு வம்பு வழக்குகளில் அவன் துணிந்து இறங்கியதில்லை — பழக்கமும் கிடையாது. பயந்தே போய்விட்டான்.

''கோவிலிலிருந்து ஆத்தாளை வணங்கிட்டு இப்பத்தான் வந்திருக்கேன். அதனால் கேட்கிறேன். உண்மையைச் சொல்லு. நீ எதுக்காக இங்கே வந்தே? நீ யார்? என் புருஷன் எங்கே?'' படபடவென்றுகேட்டாள் அகல்யா.

புறங்கையால் முகவாயைத் துடைத்துக் கொண்டான் காமேஷ்.

''நான் ராஜ்குமார் இல்லே. ஒப்புக்கிறேன்.'' கூறி முடிப்பதற்குள் நெஞ்சு உலர்ந்து அவன் நாக்குக் குழறியது.

''உன் பெயர் காமேஸ்வரன். எனக்குத் தெரியும்.'' அகல்யா உறுமினாள்.

''எப்படித் தெரிந்தது?....'' அவன் வியப்புடன் கேட்டான்.

''பஞ்சாயத்து அதிகாரிக்கு டைப் அடிச்ச கடிதத்திலே காமேஸ்வரன்னு உன் பெயரைத் தப்பாகக் கையெழுத்திட்டுவிட்டுக் கிழிச்சுப் போட்டியே அந்தக் கடிதத் துண்டுகளைச் சிங்காரம் பெருக்கிக் குப்பைக் கூடையில் போட்டான். அவைகளை எடுத்து ஒன்று சேர்த்துப் பார்த்துப் புரிந்து கொண்டேன்.''

பலே பொல்லாதவளாக இருக்கிறாளே? வீணான வம்பில் மாட்டிக் கொண்டு விட்டிருக்கிறோமே!... என்னுற எண்ணி மிரண்டு போனான் காமேஷ்.

''எல்லோரும் என்னை ராஜ்குமார்தான்னு நினைச்சுக்கிட்டு இருக்காங்க. பூக்குழியில் இறங்க விரதம்னு இருக்காட்டி....'' அவன் முடிக்கவில்லை. ஆத்திரத்துடன் சீறினாள்.

''பூக்குழியில் இறங்கணும்னு விரதம் அனுஷ்டிக்காத சாதாரண நாளில் நீ இங்கே வந்திருந்தாலும் நான் தவறு செய்திருக்க மாட்டேன். மடையா! கட்டின புருஷனை மனைவி இருட்டிலே கூட கண்டுகொள்ள முடியும். அகல்யான்னு என் பெயரைக் கேட்டதும் தப்பா எடை போட்டுட்டே. ஆனால் இந்த மனுஷி அகல்யா ஒரு நாளும் ஏமாந்து போக மாட்டா. நீ வீட்டுக்குள்ளே நுழைஞ்ச உடனேயே நீ போலியான ஆசாமிங்கறதை என் உள் மனம் எனக்கு எச்சரிச்சுடுத்து.

''பெண்களுக்கு ஆறுவது அறிவுன்னு ஓர் அறிவு உண்டு. அகல்யாவைக் கல்லாக்கின அதே புராணத்தில் இன்னொரு பெண்ணைப் பத்திச் சொல்லும்போது 'தீண்டலும் உணர்ந்த தெய்வக் கற்பினள்' என்று எழுதி வச்சிருக்காங்க. உங்கிட்ட இதெல்லாம் பேசிப் பயன் என்ன? தமிழ் கூடத் தெரியாத படு முண்டம்னு நான் உன் பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன்.''

''வந்ததுமே நான் ஆள் மாறாட்டம் செய்கிறவன்னு தெரிஞ்சு கொண்டது மிகவும் ஆச்சரியமான சங்கதி.''

''இதில் ஆச்சரியம் என்ன இருக்கு? எங்க வீட்டு வாயில்லாத ஜீவன் கூழைப் பசு உன் மோசடியை ஐந்து நிமிஷத்திலே கண்டு பிடிச்சுட்டுதே. அது சீறிக் கொண்டு உன்னை முட்ட வந்ததுன்னு கேட்டதுமே என் சந்தேகம் ஆழமாச்சு. குளிச்சுட்டுச் சொட்டச் சொட்ட இடுப்பிலே துண்டைச் சுற்றிக் கொண்டு திறந்த மார்போட போற பழக்கம் என் கணவனுக்குக் கிடையாது. அவருக்குப் பிடித்த பதார்த்தங்களை நீ சாப்பிடாமல் ஒதுக்கித் தள்ளினதைக் கவனிச்சேன். நாள் முழுதும் நீ சிகரெட் பிடிச்சது, பட்டும் படாததுமாக என் அத்தையிடம் பழகினது எல்லாம் நீ போலி வேஷக்காரன்னு காட்டிக் கொடுத்துடுத்து. கடைசியா நீ போலிதான்னு முத்திரை குத்துவது போல் உன் முகவாய்.....''

சட்டென்று காமேஷ் தன் முகவாயை இடது கையால் தடவிக் கொண்டான். ''முகவாயில் என்னவாம்?''

''என் மாமனார் இறந்துபோன சமயம் அவரது படத்தைச் சுவரில் மாட்ட ஏணியில் ஏறிய என் கணவர் தவறிக் கீழே விழுந்து விட்டார். அப்போது முகவாயில் ஏற்பட்ட காயத்தின் வடு ஒரு சிறு கோடு போல் பளிச்சென்று கீழ்த் தாடையிலே தெரியும். அந்த வடு உன் முகவாயில் இல்லாததைக் கண்டதுமே நீ போலி, ஆள் மாறாட்டம் செய்கிறாய்ன்னு தெரிஞ்சு கொண்டேன். ...இப்பச் சொல்.... யார் நீ?... ஏன் இங்கே வந்தே?... என் புருஷன் எங்கே?''

காய்ந்துபோன உதட்டை நாவால் தடவிக்கொண்டு குழப்பத்துடன் விழித்தான் காமேஷ்.

''மற்றவர்களுடைய நோயின் மூலம் நான் வாழ விரும்பவில்லை, அதனால் டாக்டராகவில்லை; அவர்களுடைய பாவத்தின் மூலம் வாழ விரும்பவில்லை, அதனால் பாதிரி ஆகவில்லை; மற்றவர்களுடைய சச்சரவுகள் மூலம் வாழ விரும்பவில்லை, அதனால் வக்கீலாகவில்லை; அதனால் எனக்குக் கதாசிரியராகும் வழியைத் தவிர வேறு இல்லை?''

—நாதனியல் ஹாதோர்ன்

—சம்பத் குமாரி ஆதாரம்: விஸ்டம்



சாதாரணமான ஒரு பெண் — பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்தவள் — ஒரு விநாடியில் உருட்டல் மிரட்டல் பேச்சினால் சுருட்டிக் கையில் போட்டுக் கொண்டு விடலாம் என்று அவன் போட்ட கணக்கு கோளாறாகிவிட்டதே. குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவைச்சு நார் நாராகக் கிழிச்சுப் போடுகிற வக்கீலைப் போலக் கேள்விக்கு மேல் கேள்வியாக...

''உண்மையைச் சொல்லாட்டா நான் உடனடியாகப் போலீசை அழைத்து உன் மோசடியை அம்பலப்படுத்திவிடுவேன்.''

''ஊரார் அப்போ என்ன நினைப்பாங்க அதைப் பத்தி யோசிக்கலையா?'' — துணிவைத் திரட்டிக் கொண்டு கேட்டான்.

''அதைப் பத்தி அக்கறை இல்லை. நான் யார்னு என் தெய்வம் மாரியாத்தாளுக்குத் தெரியும். என் கணவனுக்குத் தெரியும். அது போதும். இப்போ எனக்குத் தெரிய வேண்டிய உண்மை நீ யார் என்பது....''

''நான் ராஜ்குமாரின் தம்பி.... காமேஸ்வரன். கூடப் பிறந்தவன். நானும் அவனும் ஒரே சமயத்தில் பிறந்த இரட்டையர்கள் போதுமா? கேட்டுவிட்டுக் காமேஷ் தலையை நிமிர்த்தி அவளை நேருக்கு நேர் பார்க்க முயன்றான்.

''அண்ணி என்ற உறவு தெரிஞ்சுமா நீ என்கிட்டத் தகாத முறையிலே நடந்துக்கப் பார்த்தே. அறிவு கெட்டவனே நீ உருப்பட மாட்டே. எங்கே என் புருஷன்?''

''ராஜ்குமார் இறந்துவிட்டான்.''

''பொய் — நான் நம்பவே மாட்டேன்... என் கணவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தா என் மனசிலே அது ஏதாவது கலக்கத்தை உண்டாக்கி யிருக்கும். எனக்கு அப்படி ஒண்ணுமே தோணலே. நீ அவரை எங்கேயோ வஞ்சகமாக ஒளிச்சு வச்சிருக்கே... உண்மையைச் சொல்லாட்டி நான் போலீஸிடம் புகார் பண்ணிடுவேன்.'' — அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. தாள முடியாத துக்கம் நெஞ்சை அடைக்கக் கண்களில் நீர் புரளப் பதறிப் போய்விட்டாள் இந்தப் பாவி சொல்கிறது உண்மையா?... ஓவென்று வாய் விட்டு அழவேண்டும் போன்ற பயங்கர உணர்விலே அவள் உள்ளம் ஓலமிட்டது.

''பேச்சுக்குப் பேச்சு போலீஸ்னு பயமுறுத்தினா செத்தவன் எழுந்து வந்துவிடப் போகிறானா? ராஜ்குமார் இறந்துபோய் விட்டான் என்ற தெம்பில்தானே நானே புறப்பட்டு வந்திருக்கிறேன். நானும் அவனும் பஹ்ரானில் சந்தித்து நண்பர்களானோம். தன்னைப் பற்றிய விவரங்களை அவன் சொன்னதுமே அவன் என் கூடப் பிறந்த அண்ணன்னு நான் தெரிந்து கொண்டு விட்டேன். — அவனுக்குத் தெரியாது. நான் சொல்லவில்லை. தன்னைப் போலவே நான் இருப்பதை எண்ணி அவன் அதிசயப்பட்டுப் போனான். ஊருக்குத் தன்னுடன் கூட வர வேண்டும், தன் மனைவியிடமும் தாயாரிடமும் அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினான்.''

அகல்யாவின் நினைவு பளிச்சிட்டது. ஒவ்வொரு கடிதத்திலும் 'ஒரு அதிசயத்தைக் காட்டப் போகிறேன்' என்று அவள் கணவன் எழுதியிருந்த அதிசயம்தானா இந்தப் பாவிப்

''நான் மூன்றாவது ஃபாரம் தான் படிச்சிருக்கேன். அதுவும் ஒரே வகுப்பில் இரண்டு வருடம்'' என்று கண்ணதாசன் சொன்னவுடன் கூட்டத்தில் எல்லோரும் சிரித்தார்கள். உடனே கண்ணதாசன் ''என்ன இதற்குப்போய் சிரிக்கிறீங்க? பி. ஏ. கூட மூணு வருஷம் படிக்கிறாங்களே'' என்றார்!

—என். பாகிரதி



பயல்? கண்களில் பெருகிய கண்ணீரை விரல்களால் வழித்தெறிந்துவிட்டு அவனை வெறித்துப் பார்த்தாள்.

''நானும் இங்கே வர ஆசைப்பட்டது உண்மை. ஏனென்றால் நானும் அண்ணன் ராஜ்குமாரும் கனகசபை அவர்களின் பிள்ளைகள்தான். ஆனால் பஞ்சரத்தினம் அம்மாளுக்குப் பிறந்தவங்க இல்லை. ஒரு காலத்தில் இந்த வீட்டில் வேலைக்காரியாக இருந்த காசாம்பூவுக்குப் பிறந்தவங்க. சமுதாய வேலிக்கு அப்பால் பிறந்தவங்க.''

''பொய். நான் நம்ப மாட்டேன்....''

''நான் இப்போ சொல்றதெல்லாம் உண்மை. இந்த விஷயம் தெரிந்தது முதல் என் மனத்தில் பழிவாங்கணும் என்கிற எண்ணம் உருவானது உண்மை. பஞ்சரத்தினம் அம்மாளை நேரில் கண்டு — 'விஷயம் எனக்குத் தெரியும். எனக்கும் சொத்தில் உரிமை உண்டு. — என் தகப்பன் ஒத்துக் கொண்டிருக்கார்'னு வாதாடி அவுங்க ஒப்புக்க மறுத்தா வெளியே சொல்லி மானத்தை வாங்குவேன்னு மிரட்டி அண்ணனையும் பஞ்சரத்தினம் அம்மாளையும் ஆட்டிப் படைக்கணும்னுதான் ஆத்திரத்தோடு புறப்பட்டு வந்தேன். சென்னையில் மகாபலிபுரக் கடற்கரையிலே கடலில் குளிக்க இறங்கின என் அண்ணன் அப்படியே தண்ணியோட போயிட்டான். அவன் மூழ்கி இறப்பதைக் கண்களால் பார்த்தேன்.''

அகல்யாவின் இதயம் வெடித்து விடும் போல் துடித்தது. கதறி அழவேண்டும் என்ற ஆவேசம்.... ''நம்ப மாட்டேன். என் கணவருக்கு நீந்தத் தெரியும்.''—அழுகையும் விசும்பலுமாக அதட்டிச் சொன்னாள்.

மாடிப் படிகளை வேகமாகக் கடந்து அறைக்குள் புகுந்த காமேஷ் அவசரமாகப் பெட்டியைத் திறந்து துழாவினான். ஒரு காகித உறையும், பத்திரிகைத் தாள் ஒன்றையும் தேடி எடுத்துக் கொண்டு விரைந்து வந்தான்.

''நான் சொல்வதெல்லாம் உண்மை— உண்மையைத் தவிர பொய்யே இல்லை என்பதை இந்தக் கடிதம் நிரூபிக்கும்... ராஜ்குமார் இறந்து போய் விட்டான் என்பதற்கு இந்தப் பத்திரிகையில் வந்த செய்தி ஆதாரம்.....''

அவைகளை வாங்க நீட்டிய அவள் கரங்கள் நடுங்கின.

(தொடரும்)

Kalki Shopping Page

ஸ்தாபிதம்: 1962
போன்: 664002



வர்ணம் ஆர்ட் ஸ்கூல்

நீங்கள் வீட்டிலிருந்தவாறே சித்திரம் கற்று சிறந்த ஓவியராகலாம். வரி படம், வாஷ் படம், வண்ணப் படம், சித்திர ஆசிரியர் பயிற்சி இவையாவும் ஏராளமான விளக்கப் படங்களுடன் எளிய முறையில் பயிற்சியளிக்கப் படுகிறது. விவரங்களுக்கு 60 பைசா தபால் தலை அனுப்பினால் படங்களுடன் கூடிய விவரப் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

வர்ணம் ஆர்ட் ஸ்கூல்
115, பராக்கா ரோடு சென்னை 600010

Tel: 844936
846410

ANANDS XEROX DOCUMENT COPYING SERVICE

37, Pycrofts Road,
Triplicane,
MADRAS – 600 005


for

COPIES OF DOCUMENTS CERTIFICATES Etc.

Instant Service Available:
DAY & NIGHT

Gemini

BRAND
AGMARK GHEE



தயாரிப்பாளர்கள்
K. G. & Brothers
Butter & Ghee Merchant
13, Jammanai Street,
TIRUPUR–4

அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

தரத்திலும் குணத்திலும் சிறந்தது எங்கள் **"ஜெமினி" பிராண்டு அக்மார்க் நெய்** 16 kg, 4 kg, ½ kg பேக்கிங்களில் கிடைக்குமிடங்கள் பின் வருமாறு:

1. தஞ்சாவூர் நடராஜன் & Co. பாம்பாட்டி தெரு, தஞ்சை 2. தஞ்சை கோஆபரேடிவ் ஸ்டோர் 3. K. கருப்புசாமி செட்டியார் & சன்ஸ், ரயிலடி, மாயவரம் 4. L. நயினா செட்டியார் & Co. மேற்கு ரத வீதி, சிதம்பரம் 5. பாரதி & கோ, 27, மண்டி தெரு, வேலூர்-4 6. செல்வம் & கோ, 34, மெயின் மார்க்கெட், வேலூர்–4 7. திருமலை டிரேடர்ஸ், ஆச்சாரப்பன் சந்து, சென்னை-1 8. P. நமசிவாயம் & சன்ஸ், 298, பழைய தரகு பேட்டை, பெங்களூர்-2 9. யுனைடெட் டிரேடர்ஸ், 150/151, இப்ராஹிம் சாயபு தெரு, பெங்களூர்-1

தமிழ் நாட்டில் இதர இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை


எங்கள் இதர தயாரிப்புக்கள்:
'காமதேனு' பிருந்தாவன் பிராண்டு நல்லெண்ணெய்
R. M. S. & V. V. S. & Co. 8-A, Perundurai Road, ERODE–9

வனஜா



புஷ்பா தங்கதுரை

கடலுக்குள் ஜூலி



அவனைச் சந்திக்கக் குளிர்ச்சியான கடல் விரைந்தது. அவனை மூடியது. கடலுள் அவன் அமிழும்போது, தன் ஸ்கீக்களை உதைத்தான், கண்களைத் திறந்தான், கழியும் பாட்டில் — பச்சையான ஆழங்களுக்குள் மூழ்கினான்.

'லவ்வின்' ஒரு வாரத்தில் ஜேம்ஸ் லீஸர்.

3

அந்தத் தோண்டும் ஆசாமியைப் பார்த்து மல்லிக் ஒரு புன்னகை காட்ட விரும்பினான்.

ஆனால் மல்லிக்கின் நேர்த்தியான சமிக்ஞைகளுக்கு உட்பட அவன் விரும்பவில்லை.

குப்பென்று குதித்து மேடு ஏறி மல்லிக்கின் பக்கம் வந்தான். சகல கோபத்தையும் வைத்து அவன் மண்டையில் இரண்டு கும் கொடுத்து, துண்டைத் தோளில் போட்டு மறைந்து போனான்.

கண்ணில் இருட்டு பூக்க, மல்லிக் கீழே சாஷ்டாங்கமாக விழுந்தான். சீக்கிரம் மூர்ச்சையானான்.

நினைவு வந்தபோது, ஆச்சரியம், அந்தப் பெண் விசிறிக் கொண்டிருந்தாள். தைல வாடை மூக்கில் ஏறியது. எங்கிருக்கிறேன் என்று சினிமா பாணியில் கேட்க விரும்பினான். நாக்கு வரவில்லை.

மெள்ளப் புரண்டு மண்டையைத் தட்ட, தலையில் இரண்டு இடங்களில் சுத்தி அடித்துக் கொண்டிருந்தது.

எழுந்ததும், சிறிது உலாத்தியது. அந்தச் சுற்று வட்டாரம் ஒருதரம் குலுங்கிவிட்டுப் பிறகு சரியாகியது.—நன்றி, என்றான் பெண்ணைப்பார்த்து.

—நல்ல வேளை! ரொம்ப நாழி வரலேன்னு வந்து பார்த்தா மூர்ச்சையாகிக் கிடக்கிறீங்க.

கொஞ்சம் கண்ணைக் கசக்கி முகத்தைச் சரி செய்தான். நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னான்.

இருவரும் நடந்தார்கள். அவனுக்கு ஒரே யோசனை!

கோவிலை அடைந்ததும்

—இங்கே நிறையப் பேர் வராங்களா? என்றான்.

—கோவிலுக்கா?

—இல்லை, எலும்பைப் பார்க்கிறதுக்கு!

—உங்களைச் சேர்த்து நாலு பேர் ஆகிறது.

அவன் மௌனம் சாதிக்க, —இந்த எலும்பிலே என்ன விசேஷமோ? என்றாள் அந்தரத்தைப் பார்த்து.

என்ன சொல்லலாம் என்று அவன் யோசித்தபோது, கோவில் நாயக்கர் காலத்து யாளி அவன் தோளுக்கு மேலாக முறைத்தது.

பதில் பேசவில்லை அவன்.

நேராக உள்ளே போனான்.

கர்ப்ப இருட்டில் நாகலாபுரீசுவரர் சந்தனப் பொட்டுடன் உட்கார்ந்திருந்தார்.

—உன்னை முதலிலே பார்க்காமல் போனது தப்பு! எனக்கு எடுத்த காரியத்தில் வெற்றி கொடு, என்றான்.

—அம்மன் சந்நிதி எங்கே?

—வெளிப் பிராகாரம்.

பிராகாரத்தில் தும்பையும் நந்தியாவட்டையும் காடு உண்டாக்கி யிருந்தன.

—இங்க யாரும் வரமாட்டாங்களா?

—யாரும் வர மாட்டாங்க. கோவில அனாதை! எங்க ஊரைப் போல!

—கோவிலுக்குச் சொத்து, கித்து?

—ஏக்கர் கணக்கிலே உண்டு. பக்கத்து ஊரிலே! இப்போ, இருந்த இடந்தான்!

—என்னுக்க?

—எல்லாரும் வாயிலே போட்டாச்சு. கோவிலைப் பூஜ்யம் ஆக்கியாச்சு. அம்மனுக்கும் சுவாமிக்கும் நாங்க சாப்பாடு போடறோம்.

—நீங்களா?

—ஆமா; நாங்கதான் நைவேத்தியம் பண்ணறோம். ரெண்டு வேளை பூஜை பண்ணறோம்.

—பண்ணறோம்னு யாரு?

—எங்கப்பாவும் நானும். சும்மா, சம்பளம், கிம்பளம் இல்லாம! பரம்பரையா கவனிக்கிறோம். விட்டுட்டுப் போக இஷ்டமில்லே.

...எலும்புக்கூடு எடுத்த இடத்தில் ஆசாமி எதற்குத் தோண்டினான்? என்னைப் பார்த்ததும் ஏன் அடிக்க வந்தான்? ஒருவேளை ஒரு புதையலைத் தோண்டியிருப்பானோ? நானும் தோண்டிப் பார்க்க வேண்டும். அப்படித்தான் இட்டம்...

அம்மன் சந்நிதி மிக உயரம்!

நிறையப் படிகள்.

ஏறி, அழிக் கதவுள் பார்த்ததும் முகம் பின்னுக்கு இழுத்தது.

அம்மன் ஒரு நிஜமான பெண் போல —இதோ இருக்கேன் என்று சொல்லும் சத்தியத்தில் இருந்தாள்

நகை நட்டுக் கிடையாது.

வெறுமனே குளித்து வந்தவள் போல் நின்றாள். ஒரு காவிக் கந்தல் ஒரு கிராமப் பெண்ணைப் போல் அரை குறையாய் அவளை மூடியது.

அவள் அழகின் அமோகம் அவன் மூச்சை அடைத்தது.

ஒரு கல்லுக்குள் உயிர் வந்திருக்கிறதே;

—நெற்றியைப் பார்த்தீங்களா?

பொட்டு இடும் இடத்தில் குழிவு! —அங்கே தான் சந்திரகாந்தம் இருந்தது.

—என்னது அது?

—நீலம். ராத்திரியிலே நீல வெளிச்சம் அடிக்கும். கன்னியாகுமரி மாதிரி எங்க அம்மனுக்கும் கதை உண்டு.

இருவரும் சாவகாசமாக ஒரு படியில் அமர்ந்தார்கள்.

—எனக்குச் சில விவரங்கள் தேவைப்படறது. சொல்ல முடியுமா? என்றான் அவன்.

—கேளுங்க.

—எலும்புக் கூடு எடுத்தாங்களே! அதை என்ன செஞ்சாங்க?

—ஒரு பெட்டிலே போட்டாங்க!

—அப்புறம்?

—மெட்ராஸ் கொண்டு போயிட்டான்னு நினைக்கிறேன்.

—பழைய காலத்து எலும்புக் கூடா?

—ரொம்பப் பழைய காலம் இருக்காது. முந்நூறு, நானூறு வருஷம் இருக்கும்னுங்க.

—எப்படிக் கண்டு பிடிச்சாங்க?

—பித்தளைக் குழல் கிடைச்சதில்லே! அதிலேந்து.

—அதிலேந்து எப்படி?

—அந்தக் குழாய் ஒரு டெலஸ்கோப்னு கண்டு பிடிச்சாங்க. ஐ பீஸ் மட்டும் இருந்தது. அந்த மாதிரி டெலஸ்கோப்பை 200 வருஷத்துச்கு முன்னாடி பயன்படுத்தினதாகச் சொன்னாங்க.

—யார் பயன்படுத்தினாங்க.



—ராணுவத் தளபதிங்க.

—ஓ!

அவன் மனத்தில் அது உதைத்தது. கப்பல் தளபதி என்று சொன்னால் சந்தோஷப்பட்டிருப்பான்.

—அப்புறம் அந்த பாட்ஜ் இருந்ததே, அதில் என்னவோ எழுத்துங்க.... (மல்லிக்)

—எச். எம். எஸ். ஜே.

—அது என்ன?

—தெரியாது.

அவன் மௌனமாக இருந்தான்.

அவள் நிமிர்ந்து —இதெல்லாம் ஏன் கேட்கறீங்க? என்றாள்.

அவனுக்கு அந்தக் கேள்வி கொஞ்சம் திகைப்பாக இருந்தது.



—ஒரு ஆராய்ச்சி பண்றேன்.

—என்ன ஆராய்ச்சி?

—அந்த எலும்புக் கூடு யாருடைய எலும்புக் கூடுன்னு தெரியணும்.

—ஏன், நீங்க ஏதாவது கொலைக்குத் துப்புத் துலக்க வந்திருக்கீங்களா?

—கிட்டத்தட்ட அத மாதிரி வச்சுக்கயேன்.

—எப்போ நடந்த கொலைக்கு எப்போ துப்புத் துலக்கப் போறீங்க?

அவன் மௌனமானான்.

மீனம்பாக்கத்தில் அந்த சார்ட்டர்ட் விமானம் பலரது கவனத்தை அழைத்தது. யுத்தத்தில் ஸப்ளைக்காகப் பயன்படும் போயிங்க்லிப்பர் விமானம் போல இருந்தது. நிறையத் தளவாடங்களுடன் இருபது கொழுத்த வெள்ளைக்காரர்கள் இறங்கினர்.

அவர்களது பெட்டிகள் பக்கவாட்டில் பருத்துக் கர்ப்பங்களாகத் தெரிந்தன.

விமானத்தின் வயிறு திறக்க, உள்ளிருந்து பல உயரப் பெட்டிகளும், சாமான்களும் ஏராளமாகக் கீழே இறங்கின.

சோதனையில் அவர்கள் ஹாலிவுட் ஆர். எம். கார்ப்பரேஷனின் மூன்றாவது அவுட்டோர் யூனிட் என்றார்கள்.

முடிச்சுகள் போன்ற பல உபகரணங்களுடன் காமிராக்கள், பிறந்து பளபளப்போடு வெளிவந்தன.

இன்னும் லைட்கள், ஸவுண்ட் ரிக்கார்டிங் இயந்திரங்கள், டிராலிகள், எல்லாம் யாரும் பார்த்திராத கலையுடன் வந்து இறங்கின.

எல்லோரும் விமான நிலயத்தையும், சுங்கத்தையும் காலி செய்ய அரை நாள் ஆகியது.

தங்குவதற்கு பாரத் கோரமாண்டலின் வெவ்வேறு மாடிகளில் தொத்திக் கொண்டார்கள்.

382 அறைக்காரர் பெர்மிட் விஸ்கியைக் கொஞ்சம் அருந்தி இளைப்பாறி விட்டு, கொழும்புவுக்கு ஒரு கால் புக் பண்ணினார்.

வானிலை கோளாறு செய்ய, இரவு ஏழுக்குத்தான் கால் கிடைத்தது.

கண்டியன் ஹோட்டலைக் கூப்பிட்டு 209ம் அறைக்குப் போடச் சொன்னார்.

—மிஸ்டர், ப்ரமன்! ஆர்தர் பார்க்கர் கம்பெனி ஹியர்! 50 கேஸ் ஸிலோன் டீ அவசரமாக பாரீஸுக்கு அனுப்ப வேண்டும் என்றார்.

—உடனே அனுப்ப வழியில்லை. செவ்வாய்க் கிழமை அனுப்பப்படும் என்றது — பதில்.

இந்த இரண்டு வாக்கியங்களும் அவர்களுக்குச் சங்கேத வாக்கியங்கள், ஒருவரை ஒருவர் அறிந்து நிச்சயப்படுத்திக் கொள்ள. தன்னிடம் பேசுவது வெண்டல் ப்ரமன் என்று தெரிந்ததும், சென்னிக் குரலில் கொஞ்சம் விசேஷ சிநேகம் பற்றிக் கொண்டது. —நாங்கள் இன்று வந்து சேர்ந்தோம். நெப்ட்யூனை உடனே அனுப்பவும் என்று சொல்லிப் போனை வைத்தார்.

மறு நாள் காலை அந்த அயல் நபர் ஒரு டாக்ஸியைப் பிடித்து மயிலைக் கோவில் முன் போய் இறங்கினார்.

டாக்ஸியை அனுப்பிவிட்டு, இரண்டு பிச்சைக்காரர்களை விரட்டி, மாடத் தெருவை திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்க, பெரிய கால்களை வைத்து நடந்து போனார்.

இரண்டு தெருக்களில் இடுங்கி, மூன்றாவதற்குள் வந்ததும் அந்த 78ஆம் கதவிலக்கம் கண்ணில் உறுத்தியது.

முறுலவு ..ன் மாடிப் படிகளில் ஏறி வரிசையாகக் கிடந்த மூன்று அறைகளில் இடது ஓர அறையைப் பார்க்க,

ஒன்பது லிவர் பூட்டு அதில் தொங்கி, அவருக்குத் திகைப்பைக் கொடுத்தது.

அப்போது இரண்டாம் அறைக் கதவு திறக்க, பாதி சோப் முகத்தில் பூசியிருந்த ஒரு ஒல்லி பனியன், அவசரமாக வெளியே வந்து —மல்லிக் ராமநாதபுரம் போயிருக்கான் என்றது.

—எதுக்கு?

—அங்கே கடற் கரையில் என்னவோ ஆராய்ச்சி பண்ணுறான். அவன் புத்திதான் உங்களுக்குத் தெரியுமே!

வெள்ளைக்காரரின் முகத்தில் சிவப்பு வந்தது. தலையை ஆட்டினார். பிரயாசையுடன் ஒரு புன்னகையை வரவழைத்து சர்க்கஸ் யானையைப் போல் ஒரு செயற்கை நமஸ்தே போட்டுவிட்டுப் படிகளில் இறங்கினார்.

—என்னண்டையும் வந்தான்! என்றார் அந்த ஆர்கியாலஜிஸ்ட் மனிதர்.

சந்தனக் கிறுக்காரர் திரும்பினார்.

—கோயிலைத் தூக்கிட்டுப் போயிடப் போறான்.

—செஞ்சாலும் செய்வான்.

—ஜாக்கிரதையா இருக்கணும். வேணும்னா போலீஸ்லே சொல்லி ஒரு பாராப் போட்டுடறணும்.

—எல்லாரும் சைலன்ஸ்! சம்பகா வரா.

கையில் காப்பிச் செம்புடன் வந்து திண்ணை மீது பாத்திரத்தை வைத்து முறுவலைக் கொட்டினாள் சம்பகா.

"கவர்ச்சிக்காகவா கல்கி வாங்குகிறோம்?"



● புது வருடத்தில் முதலில் பெறுகின்ற கல்கியில் ஹேமமாலினியின் அட்டைப்படம். ஏதோ நாங்கள் எல்லாம் கவர்ச்சிக்காக கல்கியை வாங்குவது போல.

தலையங்கமோ அமைச்சர் வீரப்பனின் இசைப் புதுமைகளைச் சாடும் Satire. புத்தாண்டில் வாக்காளர்களுக்கு நல்லவிதமாக நாலு வார்த்தைகள் இல்லை. நீங்கள் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

செம்பனார்கோயில் எம். ஜீ. கலியபெருமாள்

● "சோஷலிஸ சங்கீதம்" என்ற கல்கியின் தலையங்கத்தை மும்முறை படித்தேன். அத்தலையங்கம் வெளிப்படைப் பொருளைக் குறியாது குறிப்புப் பொருளை உணர்த்துகிறது. பொருளாதாரத்திலே இன்னும் சோஷலிஸ மலர் மணம் வீசவில்லை. அதற்குள் சங்கீதத்தில் சோஷலிஸம் மணக்க முடியுமா? கர்நாடக சங்கீதத்தைப் பாமரன் அனுபவிக்க வேண்டாமென யார் தடுத்தார்கள்? பாமரர் பாமரராகவே இருக்க வேண்டுமா? பாமரனின் பாமரத் தன்மை எத்தனாவது நூற்றாண்டில் நீங்கும்? கர்நாடக சங்கீதத்தைக் காட்டிலும் சிறந்தது வேறு இல்லை. அதனை அனுபவிக்கும்படி அனைத்து மக்கள் ரசனை உயரப் பாடுபட வேண்டுமேயன்றி சங்கீதத்தின் தரத்தைத் தாழ்த்திவிடக் கூடாது.

உத்தமபாளையம் தி.பொ. நாராயணசாமி பாரதி

● கல்கியின் ஒரு முழுப் பக்கத்தை, அதுவும் முதல் தலையங்கத்தை சோஷலிஸ சங்கீதத்துக்கு வீணாக்கி விட்டீர்களே. 20000 சினிமாப் பாட்டுக்களில் 20 மாதத்துக்கு மேல் எத்தனை பாட்டுக்கள் நிலைத்து நின்று இருக்கின்றன? என்று ஒரு வரி கேட்டால் போதாதோ?

ஒரே ஒரு ஆறுதல்: கடந்த 20 ஆண்டுகளில் கூவத்தில் எத்தனை ஆயிரமாயிரம் க்யூசெக்ஸ் ஆற்று நீர் போயிருக்கிறது என்று யாரும் நம்மைக்கேட்டுப் பிரமிக்க வைக்கவில்லை.

ஈரோடு வி.வி. கிருஷ்ணன்

● நேற்று பாராளு மன்றத் தேர்தல் முடிவைக் கேட்டதிலிருந்து தங்களுக்குக் கடுமையான குளிர் ஜுரம் ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறேன். தாங்கள் ஆதரித்த கட்சிகளின் தலைவர்களுக்கும் அதே நிலை ஏற்பட்டிருக்கும். நீங்கள் அவசியம் ஒரு நல்ல போர்வை வாங்கிப் போர்த்திக் கொண்டு படுத்துக் கொள்ளவும். உங்களுடைய அரசியல் விமரிசனத்துக்கும் போர்வை வாங்கிப் போர்த்தவும். நீங்கள் இனி அரசியல் விமரிசனம் எழுதாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

சீர்காழி கே. ராஜாராமன்

● கடந்த கால நிகழ்ச்சிகளையும் வருங்கால சிந்தனைகளையும் பற்றிப் பல துறையைச் சேர்ந்த முன்னோடியாளர்களிடம் பேட்டி கண்டு எங்களுக்கு வழங்கியது மிக்க ஜோர். பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துக்கள்.

செங்கோட்டை வி. தர்மராஜன்

● கதை உலகம் பற்றி சுந்தா அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் நிலைத் தீண்டினாற் போன்று சூடானவை. பாராட்டுக்களைப் படித்தே பழகிப்போன பலருக்கு, நியாயமாய்க் குறை சொல்லவும் தெரிந்த சுந்தா போன்றோர் வேடிக்கை மனிதராய்க் காண்பார்கள்.

திருச்சி என். மதுரம்

● கல்லூரியில் 'குவிஸ்' பாராட்டப்பட வேண்டிய ஒன்று. வாராவாரம் தொடர்ந்து நடத்தலாமே. தற்போது வங்கிகள் போன்ற

ஊர் தேடி வந்திருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் காப்பி மட்டும் சப்ளை செய்வது அவன் வழக்கம்.

—ஏன் லேட்? என்று கேட்டார் ஆர்கியாலஜிகல் கிருஷ்ணன்.

—ஒரு புது ஆள் வந்திருக்கார் இல்லே! அவரை யாரோ அடிச்சுட்டாங்க!

—எங்கே? என்று முகத்தைக் கோணி குதியங்காலைத் திருகினார் சந்தனப் பொட்டு.

—எலும்பு கண்டு பிடிச்சாங்களே, அங்கே!

கிருஷ்ணன் படக்கென்று எழுந்து உட்கார்ந்தார்.

—அங்கே ஏன் அவன் போனான்?

—பார்க்கணும்னார். அழைச்சிட்டுப் போனேன்.

கிருஷ்ணனுக்குக் கோபமாக வந்தது.

—அழைச்சுக்கிட்டுப் போகலாமா? தப்பு இல்லே. என்ன நடந்தது சொல்லு!

சொல்ல, எல்லோருக்கும் ஒரு வினோத ஆத்திரம் வந்தது.

காப்பியைச் சூடாகச் சாப்பிட்டு மேலும் சூட்டில் தோய்ந்தார்கள்.

—ஆள் எங்கிருக்கான், காட்டு! உடனே விரட்டணும்! என்று எல்லோரும் கருவி, படையாகத் திரண்டு புறப்பட்டார்கள்.

(தொடரும்)

வட்டமேஜை

பல நிறுவனங்கள் நடத்தும் நவீன பாணி தேர்வுகளில் தேறிட உதவியாக இருக்கும்.

குடியாத்தம் நா. செந்தில் கரா

● குவிஸ் பகுதியில் ''களவனுக்கும், கள்வனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?'' என்று வினா எழுப்பிவிட்டுப் பதிலாக ''களவன் என்றால் நண்டு'' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இலக்கியத்தில் 'நண்டு'க்கு அலவன் என்றுதான் பெயர். களவன் அல்ல. வினாவே தவறாக இருக்கிறதே!

மதுரை பி. புஷ்பா

● ஹாப்பி நியூ இயர் ஜோக்ஸ் அத்தனையும் அருமை. புதுமை. ''இந்த ஜனவரி 1க்கு என்ன சக்தி பாருங்கள்! ஒரு வருஷமா தங்கி இருந்த 1979ஐ ஒரே நாளில் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடிச்சு!'' என்ற ஜோக்கை எழுதியவரின் கையைப் பிடிச்சுக் குலுக்கிப் பாராட்ட வேண்டும் போலிருக்கிறது.

மதுரை ஜீ. விசுவநாதன்

● புஷ்பா தங்கதுரையின் ''கடலுக்குள் ஜுவாலை'' எங்கள் உடலுக்குள் மின்சாரத்தைப் பாய்ச்சிவிட்டது என்றால் மிகையாகாது. நடையில் ஒரு கிளுகிளுப்பு, கதை சொல்லும் உத்தியில் ஒரு ஜிலுஜிலுப்பு! ஜெ...யின் படங்கள் வேறு படு அட்டகாசம்!

கரப்பாடி ப. முருகேசபாண்டியன்

● கல்கியை வாங்கியதுமே அதன் கனம் என்னைக் கவர்ந்து விட்டது. சிருங்கார ரஸம் ததும்பும் வண்ணம் புஷ்பா தங்கதுரையின் ''கடலுக்குள் ஜுவாலை'' தொடர் நவீனம்; போதாக் குறைக்கு செம்பியனின் குறுநாவல்: 'கிரியா ஊக்கி'யை ஏழு முறை படித்தேன்! சபாஷ் செம்பியன்!

மேலகிருஷ்ணன்புதூர் ஆர்.கே. லிங்கேசன்

● புத்தாண்டுப் பரிசாக செம்பியன் வழங்கிய ''கிரியா ஊக்கி''யை ஐம்பது நிமிடங்களில் படித்து முடித்தேன். ஆனால் ஐம்பது வருடமானாலும் என் மனத்தை விட்டு அகலாது. வலிய வந்த இசை மேதையின் காதலைப் புறக்கணித்து விட்டு, பார்வை இழந்த ஒருவனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சரோஜாவின் பாத்திரப் படைப்பு அருமை. வெல் டன் செம்பியன் ஸார்!

வேலூர் வேணுகோபால்

● மனத்தை உருக்கும் கதைக் கரு. பண்பின் தழுவலோடு வரம்புகளை மீறாத அவரின் வர்ணனைகள் அபாரம். அத்தனைக்கும் சபாஷ் சொல்கிறேன். பாதுகாக்கவேண்டிய நாவல்!

குறிக்காரன்வலசு ந. இராமசாமி

● ''கிரியா ஊக்கி'' முழு நாவல் முத்தான உரையாடல், சத்தான கதை, நேர்த்தியான சம்பவங்கள் சேர்ந்து கதை முதல் தரமாக அமைந்துவிட்டது.

சென்னை—4 கே. ஆர். கல்யாணம்

● தாணுவின் 'வாஷிங்டனில் திருமணம்' என்ற பயணக் கட்டுரையின் மூலம் அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறையினைப் பற்றியும் அந்நாடு விஞ்ஞானத்தில் எவ்வளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதையும் அறிந்து வியப்படைந்தோம்.

கோயமுத்தூர்-9 கே. கோபாலகிருஷ்ணன்

● ''இழப்புக்கள் .... எதிர்பார்ப்புக்கள்'', வழக்கமான மசாலாக் கதைகளிலிருந்து வேறுபட்டுப் புதுமையாக உள்ளது. இது போன்ற கதைகளைத் தாங்கள் மேலும் வெளியிடவேண்டும். இல்லை என்றால் 'இழப்பு' வாசகர்களுக்குத்தான்.

'தோல்வியில் வெற்றி'யில் ஜெயமேஜயன், கால் பந்தாட்ட ரசிகர்கள் எவ்வாறு பேசிக்கொள்வார்கள், அம்பயர்கள், டோர்னமெண்ட் கமிட்டியினர் கலெக்ஷனுக்காக எவ்வாறு மோசமான வழிகளைக் கையாளுகிறார்கள் என்பதை நடைமுறையில் உள்ளது போலவே அழகாகப் படம் பிடித்துக் காண்பித்துள்ளார்.

சென்னை—18 ''மதுரை மணியன்''.

"குளிர் ஜுரம் கண்டிருக்குமே!"

தமிழ்நாடு பரிசுச் சீட்டு வழங்கும்
மாபெரும் பொங்கல் சிறப்புக்குலுக்கல்!

2 சிறப்பு முதல் பரிசுகள்

ரூ.5,00,000 வீதம்



3 சிறப்பு
இரண்டாவது
பரிசுகள்
ரூ. 1,00,000 வீதம்
மற்றும் ஆயிரக்-
கணக்கான இதர
பரிசுகள்!

பொங்கல் சிறப்புக்
குலுக்கல் தேதி:
23.2.1980
மொத்த வரிசைகள்: 6
சீட்டின் விலை: ரூ. 2/-



இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

செம்புலிங்கம்

மீ.ப.சோமு

இந்த நூற்றாண்டில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய ஒரு திருடன் செம்புலிங்கம். நெல்லை மாவட்டத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இவனைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்லுவார்கள்!

செம்புலிங்கம் திருடர்களிலே ஒரு சமதருமவாதி! அவனுடைய 'சோஷியலிஸம்' எப்படி என்றால், பெரிய பண்ணையார்கள், வியாபாரிகள், நிலச்சுவான்தார்கள் ஆகியோரின் வீட்டிலேதான் அவன் கொள்ளையடிப்பான். அப்படிக் கொள்ளையடித்த பொருளை யெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு வாரி வாரி வழங்குவான்! ஏழை எளியோரிடம் இரக்கம் காட்டுகிற செல்வந்தர்கள் இருந்தால் அவர்களிடம் கொள்ளையடிக்க மாட்டான் செம்புலிங்கம்! இதனால் அவனிடத்தில் பயம் உள்ளவர்களும் இருந்தார்கள், அபிமானம் உள்ளவர்களும் இருந்தார்கள். இது காரணமாக அந்தக் காலத்தில் அவனைப் பிடிப்பது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பெரும் பாடாகவே இருந்தது!

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் செம்புலிங்கம் வருவதானால் முன்னால் ஒரு பெரிய நிசப்தப் படை போகும். அதைத் தொடர்ந்து சத்தம் செய்கிற ஓசைச் செருப்பு அணிந்தவனாய் செம்புலிங்கம் தனது மைத்துனன் காசி என்பவனோடு செல்லுவான்! அந்த மிதியடி ஓசைக்கே ஊரெல்லாம் நடுங்கும்!

என் நெருங்கிய உறவினரான சங்கநேரிப் பண்ணையாரின் வீட்டுக்கு ஓர் இரவு சென்று வேறு எந்தப் பொருளையும் அபகரித்துக்கொள்ளாமல், அவருடைய துப்பாக்கியை மட்டும் கேட்டு — அதாவது, கேட்டால் மறுக்க முடியாது, அந்தக் கண்டிப்புடன் — வாங்கிக் கொண்டு போய்விட்டான்! இந்தச் செய்தி கிடைத்த நாளிலிருந்து நாங்கள் எல்லோரும் மேலும் அச்சமாக இருந்தோம்! வெளியூர்களுக்கு வண்டி கட்டிப் போக வேண்டிய காலம் அல்லவா அது, விடியற்காலை புறப்பட்டால் மாலை ஐந்து மணிக்குள் குறிப்பிட்ட ஊருக்குப் போய்ச் சேருகிற முறையில்தான் பயணங்களை மேற்கொள்வது என்று ஆகிவிட்டது!

இப்படி இருக்கும்போது சிவராத்திரி வந்தது. ஒவ்வொரு சிவராத்திரியும் மூலைக்கரைப்பட்டி என்ற கிராமத்தில் உள்ள பரமசிவசுவாமி கோவிலில் நடைபெறும் சிவராத்திரிக்கு நாங்கள் தவறாமல் போவதுண்டு. என் பெரியப்பாவும் குடும்பத்துப் பெண்களும் காலையில் மாட்டு வண்டியில் புறப்பட்டோம், கட்டுச்சோறு கட்டிக் கொண்டு! மாலை நான்கு மணிக்குள் மூலைக்கரைப்பட்டிக்குச் சென்றுவிட வேண்டும் என்று திட்டம்!

எதிர்பாராத விதமாக வழியில் மழை பிடித்துக் கொண்டு விட்டது. ரெட்டியார் சத்திரத்தில் தங்கிக் கொண்டோம். ஆனால் மழையோ வெறிப்பதாக இல்லை.

''இருட்டுகிறவரை சத்திரத்திலேயே தங்கி விடக் கூடாது. மழை குறைந்து வருகிறது. புறப்படுவோம்!'' என்றார் என் பெரியப்பா.

தெற்கத்திப் பெண்கள் அந்தக் காலத்தில் ''பாம்படம்'' என்ற காது நகையும், காசுமாலை, அட்டிகை, ஐந்து வடச் சங்கிலி முதலிய பலபல கனத்த நகைகளும் போட்டுக் கொள்வது வழக்கம். மூன்று பெண்டுகள் எங்கள் வண்டியில் இருந்தார்கள். என் தமக்கைக்கும் தங்கைக்கும் காதில் வைரம் மின்னிக் கொண்டிருந்தது. நான், சிறுபிள்ளை. தங்க அரைஞாணும், கடுக்கனும், கையிலே காப்பும் போட்டிருந்தேன். செம்புலிங்கம் வந்தால் என்ன ஆவது?

சத்திரத்திலிருந்து வண்டி புறப்பட்டது. மழை வெறித்துக் கொண்டு வந்தது. ஆனால் இருட்டு கவிந்து விட்டது. சாலையெல்லாம் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. உடை மரங்களின் நடுவே செல்கிற வண்டிப் பாதையில் மழைத் தண்ணீர் சீறியவாறு ஓடிக் கொண்டிருந்ததால், மாடுகள் வேகமாகச் செல்ல முடியவில்லை. மழை குறைந்து போயிருந்தாலும் இடியும் மின்னலுமாக இருந்தது. மக்கள் நடமாட்டமே இல்லை. மின்சார விளக்குகள் இல்லாத காலம், உடங்காட்டுக்குள்ளே மாட்டு வண்டி செல்கிறது!

மூலைக்கரைப்பட்டியின் எல்லையே இன்னும் வரக்காணோம்! பெண்டுகள் பதற ஆரம்பித்தார்கள். காதிலும் கழுத்திலும் கைகளிலும் இருந்த நகைகளை யெல்லாம் கழற்றி ஒரு துணியிலே கட்டி வைத்துக் கொண்டார்கள்.

''செம்புலிங்கம் வந்தால் இப்படியே இந்தத் துணி மூட்டையை எடுத்துக் கொடுத்துவிட்டு 'எங்களை விட்டுவிடு' என்று சொல்லலாம்'' என்று கையும் காலும் உதறியவாறே உளற ஆரம்பித்தார்கள்!

''யாரப்பா வண்டி?'' என்று ஒரு குரல் கேட்டது.

''ஐயோ பரமசிவமே, செம்புலிங்கம் வந்துட்டானே!'' என்று பதறினாள் என் அத்தை.

பெரியப்பா வண்டியை நிறுத்தும்படி சொன்னார்கள். பெண்டுகள் எல்லாரும் எவ்வளவோ தடுத்தும்கூட. வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்கள்.

''நாளைச் சிவராத்திரிக்குக் குடும்பத்தோடு மூலைக்கரைப்பட்டிப் பரமசிவ சுவாமி கோயிலுக்குப்—''

அமரர் 'கல்கி' ஆனந்த விகடனில் எழுதிய முதல் நாவல் கள்வனின் காதலி. இந்த நாவலின் கதாநாயகன் பாத்திரத்தை, ஐம்புலிங்கத்தை மனத்தில் கொண்டு தான் கல்கி படைத்தார்.



''மீனாட்சிபுரம் குட்டைக்கரை விட்டு ஐயா தானே? ஐயாவைத் தெரியுமே எனக்கு. நான் யாரு தெரியலையா? இந்த ஊருத் தலையாரி! காலையிலேயே திருநெல்வேலி யிலே புறப்பட்ட வண்டி இன்னும் வந்து சேரலையேன்னு என்னை அனுப்பிச்சாக கோயிலு ஐயா.''

தலையாரி என்ற வார்த்தை வந்த பிறகு தான் என் அத்தைக்கு மூச்சு வந்தது. ஏனென்றால் எங்கள் மாமா காயல்பட்டினம் கிராம முனிசிபு! தலையாரிகள் என்றால் பராக்கிரமசாலிகள் என்பது என் அத்தையின் உறுதி.

''வண்டிக்கார அண்ணாச்சி, கொஞ்சம் நகந்து உக்காந்துக்கிடுங்க. நான் வண்டியை ஓட்டுறேன். அம்மாமாருகளே, பயப்படாதீக! எந்தச் செம்புலிங்கம் வந்தாலும் பருப்பு வேகாது. என் இடுப்பிலே பிச்சுவா இருக்கு!''

இப்படிச் சொல்லிக் கொண்டே வண்டிக் காரனைக் ''கோச்சுப் பெட்டியில்'' உட்கார வைத்துத் தானே வண்டியை ஓட்ட ஆரம் பித்தான் தலையாரி. அவனுடைய சாட்டை யிலே மாடுகள் வேகம் பிடித்தன!

மூலக்கரைப்பட்டி எல்லை வந்தது.

''முதலாளி, இனிமே பயமில்லே. உங்களைத் தேடிக்கிட்டு அதோ கோயிலு ஐயாவே எதிரே வர்றது தெரியுது. அண்ணாச்சி, நீ வண்டியை ஓட்டு. நான் இறங்கிட்டேன்!''


அந்த இருட்டில் ஓடியே மறைந்துவிட் டான் தலையாரி என்று தன்னைச் சொல்லிக் கொண்ட அவன்!

''அப்பப்பா இப்பந்தான் மூச்சு வந்தது. முதலாளி, நம்ம வண்டியை இதுவரை ஓட் டினது யாரு தெரியுமா? செம்புலிங்கம்!''

இவ்வாறு சொல்லிக் கொண்டே மீண்டும் பதறினான் எங்கள் வண்டிக்காரன்!

FOCUS

முற்றுப் பெறாத கோபுரப்பணி!



"திருவான்மியூரில் உள்ள ஸ்ரீ மருந்தீஸ்வரர் ஆலயத்தின் கோபுரம், இதுவரை எந்த ஊரிலும் காணாத வகையில் பாதி கட்டப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. ''இதன் காரணங்கள் மர்மமாக இருக்கின் றன'' என்று கல்கி வாசகி கலா மூர்த்தி நமக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த விஷயமாக இக்கோயிலின் வளர்ச்சி யில் முக்கிய பங்கு வகித்துள்ள ஒருவரை அணுகிய போது, அவர் சொன்னது:

''கோயில் வாயிலைத் தாண்டி எப்போதோ கட்டி, தகர்ந்த கோபுரம் இருந்தது. அதே இடத்தில் 1965-ம் ஆண்டு கோபுரம் கட்ட ஆரம்பித்தனர். 1970 ஆம் ஆண்டுகோபுரம் கட்டும் பணி நிறுத்தப்பட்டது. இந்த இடத் தில் கோபுரம் கட்டுவதில் ஆரம்ப முதல் தடங்கல்கள் ஏற்பட்டு வந்துள்ளன. இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆகம விதிகளைச் சரியாகக் கடைப் பிடிக்கவில்லை. பழைய கோபுரத்தின் மேலேயே கட்டியது தவறு என்றெல்லாம் கூறப்படுகிறது. கோயில் அந்தணர்களும் எதிர்ப்பு தெரிவித்தனராம். இந்த இடத்தில் கோபுரம் கட்ட யார் முன் வந்தாலும், அவர்களுக்கோ, அல்லது அவர்கள் குடும்பத்துக்கோ ஏதேனும் சிரமம் ஏற்படுகிறது.

''இப்படி அடுத்தடுத்து தடங்கல் ஏற்பட்ட தால், அந்த இடத்தில் கோபுரம் எழுப்பும் முயற்சியும் பாதியிலே நிறுத்தி வைக்கப்பட் டது.

''இப்போது புதிய கோபுரம், முன்பு இருந்த இடத்தில் இல்லாமல், ஆகம விதிகளுக்கு உட் பட்டுக் கோயிலின் பிரதான நுழை வாயி லிலேயே கட்ட ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இனி எந்தவிதப் பயமுமில்லை என்று தைரியமாகச் சொல்லலாம். இக் கோயிலுக்குச் சென்ற ஆண்டு சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்யப் பட்டது.

• பாரதத்துக்குப் புதுப் பெருமை

சர்வதேச இன்னிசைக் கழகம், ஈராக் ஒலிபரப்பு ஸ்தாபனம், ஐ.நா. கலாச்சார ஸ்தாபனம், அரபு ரேடியோ, ஆசிய – பசிபிக் ஒலிபரப்பு அமைப்பு ஆகிய ஸ்தாபனங்கள் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் பாக்தாதில் (ஈராக்) கூடின.

இக் கூட்டத்துக்கு மொத்தமாக 77 இசைப்பதிவு டேப்களைப் பல்வேறு நாடுகள் அனுப்பி வைத்தன. சர்வதேச இன்னி சைக் கழகமும், ஆசிய பசிபிக் ஒலிபரப்பு ஸ்தாபனமும் நடத்திய ஐந்தாவது கூட்டத் தொடரில் இந்த இசைப் பதிவுகளில், ஒன்பது பதிவுகளை மட்டும் தேர்வு செய்துள் ளார்கள். இவற்றில் இந்தியாவைச் சேர்ந்த லால்குடி ஜெயராமனின் வயலின் இசை சிறந்தது என ஏகமனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டு முதலிடம் பெற்றுள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தி.



இந்தப் பெருமை லால்குடிக்கு மாத் திரம் அல்லாது, நமது கர்நாடக இசை உலகுக்கும் ஏன் இந்தியாவுக் குமே பெருமை யைத் தேடித் தருவ தாகும்.

''சிக்ஷி''


சிவசங்கரி
எழுதும் நவீனம்
பிப்ரவரி 17உ
சிறப்பிதழில் ஆரம்பம்



ஜானகிராமன்

ஜானகிராமன் பற்றி சிட்டி

ஜானகிராமனுக்கு சாகித்ய அகாடெமி பரிசு என்ற செய்தி தெரிந்தவுடன் ஒரு நண்பர் கேட்டார், இரண்டாம் முறைகூட ஒருவருக்குக் கொடுக்கிறார்களா?'' என்று. ஜானகிராமன் ஏற்கெனவே இந்தப் பரிசைப் பெற்றதாகப் பலர் நினைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவரது இலக்கியத் தரமாகும்.

சுமார் 35 ஆண்டுகளாக அவருடன் நெருங்கிப் பழகிய நண்பன் என்ற முறையில் அவரிடம் நான் கண்ட மிகப் பெரிய குறை ஒன்றுண்டு. தம்முடைய திறமையை அவர் தாமே என்றும் பறை சாற்றிக் கொண்டதில்லை. வாசகர்களுக்கோ, சமுதாயத்திற்கோ கனல் பறக்கும் அறிவுரைகள் வழங்கியதில்லை. தாம் சொல்ல வேண்டியவைகளைத் தாம் படைக்கும் பாத்திரங்கள் மூலம் நாசுக்காகத் தெரிவிக்கும் நளினம் அவர் பயின்ற சொந்தக்கலை.



சிட்டி

ஜானகிராமனின் இலக்கிய வெற்றிகளில் 'மோகமுள்' தமிழ் நாவல் வரலாற்றுக்குப் பெருமை கூட்டும் விஷயம் என்பதையும் 'அம்மா வந்தாள்' அந்தப் பெருமையை நிரந்தரமாக்கும் சாதனை என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

மணிக்கொடியில் இளம் வயதில் சிறுகதை எழுதி அக்குழுவில் இடம் பிடித்துக் கொண்ட ஜானகிராமன் சுமார் 45 ஆண்டுகளாகச் சிறுகதைகள் எழுதி வருகிறார்.

பரிசுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 'சக்தி வைத்தியம்' என்ற தொகுப்பில் 'முள்முடி' என்ற கதை எனக்கு ரொம்பவும் பிடித்தது. சிறுகதை இலக்கணத்திற்கு இது சான்றாக விளங்குகிறது. வடிவம், நடை, உத்தி, உள்ளடக்கம் ஒருமையுணர்வு என்ற பல அம்சங்களிலும் சிறந்த கதை. மிகவும் நுட்பமான உணர்வுகளைச் சித்திரிக்கும் இந்தக் கதை ஜானகிராமனின் படைப்புக் கலையின் இயல்பை விளக்குவதோடு அவருடைய பூர்வாசிரமமான பள்ளி ஆசிரியத் தொழிலுக்கு அஞ்சலி செலுத்துவது போலவும் அமைந்திருக்கிறது.''

பேட்டி : ரங்கா



முள்முடி

தி. ஜானகிராமன்

“அப்ப எங்களுக்கு உத்தரவு கொடுக்கிறீங்களா?'' என்று கண்ணுசாமி எழுந்ததும் கூடத்தை அடைத்து உட்கார்ந்திருந்த கூட்டமும் எழுந்து கொண்டது.

''நான் வரேன் சார்!''

''சார்! போயிட்டு வரேன் சார்!''

நடுவில் ஒரு பையன் அவர் காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். சட்டென்று காலை இழுத்துக் கொண்டார் அனுகூலசாமி.

''அட, இதென்னடா தம்பி!''

''செய்யட்டும் சார் — இந்த மாதிரி யார் கிடைக்கப் போறாங்க அவங்களுக்கு? — நல்லாயிருக்கணும்னு உங்க வாயாலே சொல்லுங்க, நடக்கும்'' என்றார் கண்ணுசாமி.

அந்தப் பையனைப் பார்த்து மற்றப் பையன்கள் அத்தனை பேரும் அவர் காலைத் தொட்டுத் தொட்டு ஒற்றிக் கொண்டார்கள். அனுகூலசாமி குன்றிப்போய் நின்றார்; ''இதெல்லாம்....?'' என்று அவர் இழுப்பதற்குள் கண்ணுசாமி இடைமறித்தார். ''அனுகூலசாமி, நீங்க நிஜமாவே கிறிஸ்தவர். முகத்துக்குச் சொல்லலே. முப்பத்தாறு வருஷம் பிரம்பைத் தொடாம, அதிர்ந்து ஒரு வார்த்தை சொல்லாம, வாத்தியாராய் இருக்கிறதுன்னா, அந்தத் தெய்வத்தை விழுந்து கும்பிட்டாத்தான் என்ன?''

''அதெல்லாம் சொல்லாதீங்க.''

''நான் சொல்லலே, ஊர் முழுக்கச் சொல்லுது. கடைத் தெருவிலே உட்கார்ந்து நானும் விசாரிக்கிறேனே? வயத்திலே பொறந்த பிள்ளையைக் கூட ஒரு அடியாவது எப்பவாவது அடிக்காம இருக்க மாட்டாங்க. ஒரு வெசவாவது வெய்வாங்க. அதுகூட இங்கே பேசப்படாது. இந்த மாதிரி யாரால் இருக்க முடியும்? குழந்தையும் தெய்வமும் கொண்டாடற இடத்திலே. இந்தக் குழந்தைகளை, இன்னும் எத்தனையோ புள்ளைங்களை மனுஷப் பிறவிக்குக் கொடுக்கிற மரியாதை கொடுத்து மதிச்சீங்க...''

கண்ணுசாமி பேசும்போது பையன்கள் குனிந்து கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அனுகூலசாமிக்கு வாயைத் திறக்கவே முடிய வில்லை. வாயைத் திறந்தால் குரல் உடைந்து நாக்குப் புரளும் போலிருந்தது.

''நான் வரட்டுமா... அப்பா?''

''செய்யுங்க'' என்று சிரமப்பட்டு வாயைத் திறந்து, உடனே மூடிக் கொண்டார் அவர்.

''எங்களுக்கும் உத்தரவு கொடுக்கணும்'' என்று முற்றத்தில் நாயனக்காரர் கும்பிட்டார். அதற்கும் அவரால் தலையசைக்கத் தான் முடிந்தது.

கூடத்துக் கூட்டம் முழுவதும் வாசற்படி வழியாக வெளியேற இரண்டு நிமிஷமாயிற்று.

இரண்டு மூன்று பையன்கள் கிசுகிசுவென்று பேசிவிட்டு, ''சார், விளக்கு ரண்டும் இங்கியே இருக்கட்டும். காலமே வந்து எடுத்துக் கறோம்'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

வாசல்வரை கொண்டு விட்டுத் திரும்பி வரும்போது, கூடம் வெறிச்சிட்டுக்கிடந்தது.. அந்தச் சூனியமும் நெஞ்சைப் பிடுங்குகிற ஏக்கமும் முன்னே ஒரு தடவை வந்ததுண்டு. பத்து வருடம் முன்னால் ஜாயிசாவை மாப்பிள்ளை வீட்டில் கொண்டு விட்டு விட்டு வரும் போது அதே சூன்யம்; அதே ஏக்கம்.

'புஸ்ஸ்ஸ்' என்று பெட்ரோமாக்ஸ் இரண்டும் சூனியத்தை நிரப்பிக் கொண்டிருந்தன.

தனியாக விட்டு விட்டுப் போய்விட்டார்கள். நாளைக்குப் புதன் கிழமை. ஆனால் அவருக்கு சனி, ஞாயிறு, நாளை, மறுநாள், அதற்கும் மறுநாள் — இனிமேல் எப்போதுமே சனி, ஞாயிறுதான். பள்ளிக்கூடத்துக்கு இனிமேல் போக முடியாது. அவருக்கு வயது அறுபதாகி விட்டது. ஓய்வு கிடைத்து விட்டது.

ஊஞ்சல் மீது உட்கார்ந்து கொண்டார் அவர். பக்கத்தில் ப்ரேம் போட்ட ஏழெட்டு உபசாரப் பத்திரங்கள், ஒரு வெள்ளித் தட்டு, ஒரு பேனா, கடையில் நாலு ரூபாய் விலை. ஆனால் இங்கு இந்தப் பேனாவுக்கு விலை கிடையாது. நாலு லட்சம், நாலு கோடி பெறும் என்று சொன்னால் வீண் வார்த்தை— ஏதோ இரண்டும் சமம் என்று ஆகிவிடும்.



கொர்ஜெட் பட்டையும் வெள்ளி நூலு மாக நாலைந்து ரோஜா மாலைகள் சுருண்டு கிடந்தன.

ஊஞ்சல் சங்கிலி இரண்டையும் பிடித்துக் கொண்டு நின்றாள் மகிமை. பேசவில்லை; அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள். இத்தனை மேள தாளங்களும் தழதழப்பும் தனக்குக் கிடைத்தாற்போல ஒரு பார்வை. ஒரு நிமிஷம் அவரைப் பருகிக் கொண்டு நின்றவள் சட்டென்று வாசலுக்குப் போய், கதவைத் தாழிட்டு வந்து, மாலைகளை ஒவ்வொன்றாக அவர் கழுத்தில் போட்டு, தோளைப்பற்றி முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

''என்னைக்கூடத்தான் நீங்க அடிச்சதில்லே, அதிர்ந்து சொன்னதில்லே'' என்று மார்பில் தலையைச் சாத்திக் கொண்டாள்.

''உலகத்திலே வந்து இருக்கிறது கொஞ்ச காலம். ஈசல் மழைக்கு வந்து மடியறாப்பலே. அந்தப் பொழுதை அடிக்கக் கோவிச்சுக்கிட்டுப் போக்கணுமா? அடிச்சு யாரைத் திருத்த முடியும்?''

''ராட்சசன் மாதிரி கோவிச்சுக்க வாணாம். ஆம்பளையா இருக்கிறதுக்காவது ஒருதடவை கோபம் வரவேணும்?''

''வராமயா இருக்கும்?''

''வெளியிலே காமிக்கணும்.''

''அதுக்குத்தான் பால்காரி, வேலைக்காரி எல்லாம் இருக்காங்க உனக்கு. நான் வேற கோச்சுக்கணுமா?''

''பள்ளிக்கூடத்திலே அடிக்காம அதட்டாம இருக்க முடியுமா?''

''இருக்க முடிஞ்சதே!''


பரவசமாகப் பார்த்து விட்டு, அவர் மீசையை இழுத்துவிட்டு, ''காப்பி சாப்பிடறீங்களா?'' என்று நகர்ந்து நின்றாள் மகிமை.

அவள் உள்ளே விரைந்தபோது தன் பிராணனே இன்னொரு உடம்பு எடுத்து விரைவது போலிருந்தது. மேலே சுவரைப் பார்த்தார். முள் முடியுடன் அந்த முகம் கருணை வெள்ளமாகப் பொழிந்து கொண்டிருந்தது. நாலைந்து படம் தள்ளி இன்னொரு படத்தில் அதே முகம் ஒரு ஆட்டுச் சிசுவை அணைத்துக் கொண்டிருந்தது.

''என்னடா, திரும்பவும் அவர்கள் வீட்டுக்குப் போய் அந்தப் பெண்ணை இன்னும் ஒருதரம் பார்க்கணும்னு அடம் பிடிக்கிறே? இத்தனைக்கும் அந்தப் பெண்ணைவேறு உனக்குப் பிடிக்கல்லேங்கிறியே!''

''அந்த வீட்டிலே மட்டும்தானே வெங்காய பஜ்ஜி போட்டாங்க, அதான் காரணம்!''

—நடராஜ்



சின்னுசாமி சொன்னது அப்படியே உண்மைதான். முப்பத்தாறு வருஷ உத்தியோகத்தில் ஒருபையனைக்கூட அடிக்கவில்லை; அதட்டிப் பேசவில்லை அவர்.

சுபாவமே அப்படி. ஆயிசா பிறந்து, பள்ளிக்கூடம் சேர்ந்து, ஆறு வயதில் ஏதோ விஷமம் பண்ணியதற்காக வாத்தியாரிடம் அடிவாங்கி விட்டது. அந்த வாத்தியார் ஸ்கேலால் அடித்தபோது சட்டைக்குள் இருந்த கோடைக் கட்டியின் மீது பட்டு... அப்பப்பா! அன்று துடித்த துடி! அதைப் பார்த்ததும் சுபாவத்தைச் சங்கல்பமாகச் செய்து கொண்டார் அனுகூலசாமி. எல்லோரும் செய்த பாவங்களுக்குத் தன் உயிரை விலை கொடுத்தானே, அவன் எல்லாத் தலைமுறைகளுக்கும் சேர்த்துத் தான் கொடுத்தான்.

அந்த உறுதி முப்பத்தாறு வருஷமும் ஒரு மூளி விழாமல் பிழைத்து விட்டது. இல்லாவிட்டால் பதவியை விட்டு ஓய்வு எடுக்கிற எந்த வாத்தியாரை மேள தாளத்துடன் வீடு வரை கொண்டு விட்டுப் போயிருக்கிறார்கள்?

பள்ளிக்கூடத்தில் நேற்று நடந்த பாராட்டுக்கள் போதாதென்று, அவர் வகுப்பு என்று நாற்பது பையன்கள் இருக்கிறார்களே அவர்கள் தனியே பாராட்ட நினைத்திருக்க வேண்டும். இன்று நடந்தது அந்தக் கூட்டம் தான். மாலை மாலையாகப் போட்டார்கள். மடல் மடலாக வாசித்துக் கொடுத்தார்கள். இருந்தாற்போலிருந்து வராந்தாவில் ''உம்'' என்று ஒத்தும், தொடர்ந்து தவிலும் ஒலித்தன.

''என்ன தம்பி, இதெல்லாம்?''

''வேற யாருக்கு சார் செய்யப் போறோம்? வாங்க சார்'' என்று நாட்டாண்மை மாதிரி நின்ற பெரிய பையன் அவரை அழைத்தான். அந்த ஆறுமுகத்துக்கு வயது இருபத்து மூன்று. இன்னும் பள்ளிக்கூட படிப்பு முடியவில்லை. வெகுகாலமாக வாசிக்கிறான். மற்றபடி உலக ஞானம் அதிகம். அனுகூலசாமி பதில் சொல்லாமல் அவன் வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு விட்டார். இல்லாவிட்டால் மற்ற வாத்தியார்களைப் பற்றி ஆரம்பித்து விடுவான். நாலு வார்த்தை சொல்லிக்கூட விட்டான்.

''எங்களுக்குத் தெரியாதா சார்? 'நான் ரிடயராகப் போறேன்; நிதி திரட்டுங்க'ன்னு நீங்க சொல்லலே; கிட்டு நகையை வச்சுக் கடன் வாங்கல்லே; கடுதாசைக் காட்டிக் கடன் வாங்கி ஊர்ப் பாவத்தைக் கொட்டிக் கலே—''

''சரி— கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா'' என்று என்னமோ சொல்லி அவனை அனுப்பிப் பேச்சை மாற்ற வேண்டியிருந்தது.

அவன் வாயை அடைக்க வேண்டியிருந்ததே தவிர, சொன்னது என்னவோ தப்பில்லை. ஊர்ப் பாவத்தைக் கொட்டிக் கொண்டதில்லை. ஓங்கி ஒருவனை அறைந்தால் என்ன, கடனை நாமம் சாத்தினால் என்ன? — எல்லாம் ஒன்றுதான். எந்த ஹிம்சையும் அவர் கொடுத்ததில்லை.

காப்பியை எடுத்துக் கொண்டு வந்தாள் மகிமை.

''என்ன யோசனே? சாப்பிடுங்க, சூடு சரியா யிருக்கு'' என்று உபசாரப் பத்திரங்களை ஒவ்வொன்ருக வாசித்துக் கொண்டிருந்தாள். நடுநடுவே பெருமையுடன் அவரை நிமிர்ந்து பார்த்துக் கொண்டாள்.

''அதெல்லாம் நெசம்னு நெனேச்சுக்காதே. இனிமே வேலேக்கு வர முடியாதுன்னு அளப்போருனேன்னு உளுவாக் காட்டியிருக்காங்க. சக்கரை முட்டாயி.''

''தெரியும். ஆனு நெசத்தை மட்டும் எல்லாரும் சொல்லி யிருக்காங்க'' என்ருள் மகிமை. ''உங்கள் கை நீளாம, குரல் வெடு வெடுக்காம இருந்தது நெசம்.''

''த்லை... பெரிய நிசத்தைக் கண்டுபிட்டாங்க.''

''திறமைன்னு சொல்றதும் நெசம்தான்'' என்ருள் மகிமை. ''தடி யெடுக்காம, அதட்டாம, அப்படியே கெட்டிக்காரன்னு பேர் எடுக்கறதும் கஷ்டம்தானே?''

அனுகூலசாமி யோசித்துப் பார்த்தார். அதுவும் உண்மைதான் என்று பட்டது. அவருக்குக் கர்வப்படக் கூட உரிமை உண்டு என்று தோன்றிற்று.

''ஒரு கஷ்டமும் இல்லே. பால்காரி, வேலேக்காரி கிட்டேயும் அப்படி இருக்கலாம். மனுஷனப் பொறந்தவன் யாரும் புத்தி யிருக்கிறவன் யாரும் அடியிலே நம்பிக்கை வைப்பானு?''

''எல்லாருக்கும் முடியாதுங்க!''

''என்னமோ நான் இருந்துட்டேன்'' என்ருர் அவர்.

''சார்!'' என்று வாசற் கதவைத் தட்டுவது கேட்டது.

''யாரு?''

''நான்தான் சார்!''

மகிமை போய்த் திறந்தாள்.

''சார் இருக்காங்களா?''

''இருக்காங்க... யாரு?... ஆறுமுகமா, வா!''

ஆறுமுகம் மட்டும் வரவில்லே. இன்னெரு பையனும் வந்திருந்தான். அவர் வகுப்பில் படிக்கிற பையன்தான். கூட ஒரு அம்மாள். வயது நாற்பது நாற்பத்திரண்டு இருக்கும். நெற்றி, காது, மூக்கு, கைகளில் ஒன்றுமில்லே. அனுகூலசாமி எழுந்து நின்ருர்.

''என்ன சேதி, சின்னேயா?''

''சின்னேயன் அம்மா சார், இது'' என்ருன் ஆறுமுகம்.

''வாங்க!''

ஆறுமுகம் யாரையாவது அழைத்து வருவதென்ருல் ஸ்பார்க் என்று அர்த்தம். இருபத்து மூன்று வயதில் இன்னும் பள்ளிக்கூடத்தை முடிக்காத பையன்! நாட்டாண்மைக்காரன் மாதிரி ஒரு அந்தஸ்து உண்டு அவனுக்கு. எதற்கு வந்திருக்கிருனே? பரீட்சை பேப்பர் கூட இல்லேயே!

''என்ன ஆறுமுகம்?''

''சின்னேயன் பார்க்கணும்னுன் சார்.''

''என்ன சேதி.... சின்னேயா?''

சின்னேயன் பதில் பேசவில்லே. தலேகுனிந்து நின்ருன். கேட்டு அரை நிமிஷம் ஆயிற்று. குனிந்த தலே நிமிரவில்லே. அழுதான்.

''சொல்லுடா!'' என்ருர் அந்த அம்மாள்.



''உனக்கு என்ன நிமிர்? நான் நளினவிடம் காதல் மருந்து கேட்டியாமே?''

''சே, சே! காதில் மருந்து விடச் சொல்லிக் கேட்டேன் அவ்வளவுதான்!

உற்றுப் பார்த்தார் அனுகூலசாமி.

பையனின் முகச் சதை கோணிற்று. உதடு நடுங்கிற்று.

''சொல்லேண்டா'' என்ருன் ஆறுமுகம்.

''ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதுங்க அது'' என்ருள் அம்மா.

''ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதா?''

''ஆமாம் சார்'' என்ருன் ஆறுமுகம்: ''நீங்க இனிமே பேசலாம்னு சொல்லிடுங்க.''

''நல்லாச் சொல்லேண்டா. எனக்கு ஒன்றும் புரியலியே!''

''சாருக்கு மறந்து போச்சு'' என்று அந்த அம்மாளேயும் மகிமையையும் பார்த்தான் ஆறுமுகம்.

'எனக்கு என்ன மறந்து போய்விட்டது?'— அனுகூலசாமி யோசித்து யோசித்துப் பார்த்தார். ஒன்றும் ஞாபகமில்லே.

ஆறுமுகம் சொன்னுன்: ''சார்! போன வருஷம் இவன் காயாரோகணத்தோட இங்கிலீஷ் புஸ்தகத்தைத் திருடிட்டுப் போயி வேறே பேர் ஒட்டி, கடையிலே பாதி விலேக்கு வித்துப்பிட்டான். நான்தான் அதைக் கண்டு பிடிச்சு உங்களிட்டக் கொண்டு நிறுத்தினேன்!''

பையன் விசும்பி அழவே, ''சும்மா இருடா'' என்று தாயார் சமாதானம் செய்தாள்.

''அப்புறம்?''

''நீங்க அவனேச் சித்த நேரம் பார்த்தீங்க. 'நம்ம கிளாசிலே ஒரு பய இதுவரைக்கும் இந்த மாதிரி பண்ணினதில்லே. இனிமே இந்தப் பயலோட ஒருத்தரும் பேசாதீங்கடான்னு சொன்னீங்க.''

பையன் அழுகை நிற்கவில்லே.

'அன்னிலேந்து அவனே நாங்க ஒதுக்கிப் பிட்டோம் சார். யாரும் பேசறதில்லே. அப்புறம் இன்னிக்குப் பார்ட்டி நடத்தினேமில்ல? அதற்கு ரண்டு ஒண்ணுன்னு பையன்களிடம் வசூல் பண்ணினேம். இவனும் ஒரு ரூபா கொடுக்க வந்தான். வாண்டாம்னுட்டோம். பார்ட்டிக்கும் வரக் கூடாதுன்னுட்டோம். ஒண்ணும் பேசாத போயிட்டான். நேத்து. இப்ப இங்கே வந்திட்டு வீட்டுக்குப் போனேனில்ல? அவங்க அம்மாளே அழைச்சிட்டு வந்து திண்ணேயில நின்னுக்கிட்டிருந்தான். இவங்க அம்மாவும் சொன்னுங்க. அழைச்சிட்டு வந்தேன்.'' என்று பயந்து. மென்று விழுங்கிக் கொண்டே சொன்னுன்.

அனுகூலசாமிக்கு அந்தச் சம்பவம் ஞாபகம் வந்து விட்டது. ஆனால் இவ்வளவு கடுமையான தண்டனையா விதித்தோம்?...

''சின்னையா, அழாதேடா ஏய்!'' என்றார்.

''நாங்கள்ளாம் அவனோட பேசலாம்னு சொல்லுங்க சார் நீங்க!''

''ஒரு வருஷமா அவன் சொரத்தாவே இல்லீங்க. எப்பவும் சிரிச்சுப் பேசிட்டு இருப்பான். இப்ப சரியாப் பேசறதில்லே ஒரு வார்த்தை பேசுவான், போயிடுவான். என்னமோ அதுங்க மனசிலே இருக்கிறது நமக்குத் தெரியுதுங்களா? தங்கச்சிகளோட சரியாப் பேசறதில்லே. இன்னிக்குச் சாயங்காலம்தான் எல்லாத்தியும் சொன்னான். ஊட்டுலே அதெல்லாம் விளையாடப் போயிருந்திச்சு. வாத்தியாரை இன்னிக்குப் பார்த்தாத்தான் உண்டுன்னான். வந்தேன். நீங்க பெரிய மனசு பண்ணுங்க.''

அனுகூலசாமி கையும் களவுமாகப் பிடிபட்டு விழித்தார்; புழுத்துடிப்பாக அவர் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

''பையனைச் சேர்த்துக்க மாட்டேன்னுட்டாங்களாம். இதை உங்க கையாலே வாங்கிக்குங்க. எல்லோரும் செய்யறப்ப அவன் மனசு கேக்குங்களா... கொடுடா'' என்றாள் அம்மா.

பையனுக்கு அழுகை அதிகமாகி விட்டது. கையில் வேர்த்துக் கொட்டிக் கொண்டிருந்த ரூபாயை அவரிடம் நீட்டினான்.

''வாங்கிக்கங்க சார்'' என்று கெஞ்சினான் ஆறுமுகம்.

பேசாமல் வாங்கிக் கொண்டார்.


''ரொம்ப நல்ல பையன் சார். அன்னிக்கு ஏதோ புத்தி பிசகாப் பண்ணிட்டான். அப்புறம் ஒரு புகார் கிடையாது சார்!''

''நீங்க சொல்லுங்க பெரிய மனசு பண்ணி, கூட இருக்கிறதுங்க பேசாம இருந்தா என்ன செய்யும்? சிறுசுதாங்களே!'' என்றாள் அம்மாள்.

''இந்தப் பயலுங்க இப்படிப் பண்ணுவாங்கன்னு தெரியாமப் போயிடிச்சே எனக்கு'' என்றார் அவர்.

''நீங்க சொன்னதைத்தானே செய்தாங்க!'' என்றாள் மகிமை.

''அது சரி'' என்று லேசாகச் சிரித்தார் அவர். அழுகைதான் சிரிப்பாக வந்தது. மேலே படத்தில் தோன்றிய முள் முடி அவர் தலையை ஒருமுறை அழுத்திற்று.



கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 25

ஈடு

அழையா வீட்டில் நுழையும் சம்பந்தியாக காப்டன் இங்க்லண்ட் அந்த அறைக்குள் நுழைந்ததும், மகாநாட்டில் கலந்து கொள்வதாக அறிவித்ததும், மேஜை மீது தானாகவே ஏறி உட்கார்ந்து கால்களை மட்டும் கீழே தொங்கவிட்டு அலட்சியமாக ஆட்டியதும் யாருக்கும் வியப்பாயில்லை. அந்த அறையிலிருந்த மற்ற ஐவருக்கும் காப்டன் இங்க்லண்ட் எப்படியும் தங்கள் நடவடிக்கைகள் மீது ஒரு கண்ணை வைத்திருக்கத் தவற மாட்டான் என்பதிலோ அவசியமானால் தங்கள் யோசனைகளில் தலையிடுவானென்பதிலோ சிறிதளவும் சந்தேகமில்லாததால், அவன் வந்ததையோ, வந்ததும் பேசியதையோ, பேசிய தோரணையையோ கண்டு கலங்கினார்களில்லை. ஓரளவு அவன் வரவை ராணி எதிர்பார்த்திருந்தாள் என்பதை அவள் முகம் மிகத் தெளிவாகக் காட்டியது. மேஜையைச் சுற்றிலும் போடப்பட்ட மூன்று நாற்காலிகளுக்குள் பிரதான நாற்காலியில் அமர்ந்திருந்த ராணி, தனது முன்பாக மேஜையில் ஏறி உட்கார்ந்த இங்க்லண்டைப் புன்முறுவலுடன் நோக்கினாள். ''காப்டன் இங்க்லண்ட்! இந்த மகாநாடு உங்களையும் டெய்லரையும் கூடப் பற்றியதுதான். பூர்வாங்க யோசனையை முடித்துக் கொண்டு உங்கள் இருவரையும் கலக்கலாமென்றுதான் தீர்மானித்தேன். நீங்கள் முன்னதாக வந்துவிட்டீர்கள். அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான்'' என்றும் கூறினாள், மிக மதுரமான குரலில்.

இங்க்லண்ட் தனது கண்களை ஒருமுறை மற்றவர் மீது சுழலவிட்டான். ராணி அமர்ந்திருந்த நாற்காலிக்குச் சற்று தூரத்தில் மேஜையின் ஒரு முனையில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் சங்கர் பந்த். இன்னொரு மூலையின் முனையில் தனது அசுரக் கிளியை மேஜை மீது நிற்க வைத்துப் பக்கத்திலிருந்த நாற்காலியில் தனது தடியுடன் சாய்ந்து கொண்டிருந்தான் வில்வர். ராணிக்கு நேர் எதிரிலிருந்த நாற்காலியில் அனந்த் ஏதோ சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். மேஜையிலிருந்து நன்றாகத் தள்ளிச் சற்று எட்ட நின்றிருந்தாலும் துலாஜி மேஜைமீது தன் கண்களை நாட்டியிருந்தான். இங்க்லண்ட் வந்ததும் அவன் மீது தனது அந்தக் கண்களைத் திருப்பினான். இருவர் கண்களும் ஒரு முறை சந்தித்து விலகின.

இவையனைத்தையும் ராணி கவனிக்கவே செய்தாளாயினும், எதைப் பற்றியும் பிரஸ்தாபிக்காமல் நேரடியாகவே விஷயத்துக்கு வந்து, ''அனந்த்! நாம் இனி அடுத்தபடியாகத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கலாம். இங்க்லண்ட் வந்தது இன்னொரு கட்சியையும் இதில் ஈடுபடுத்துகிறது'' என்று கூறினாள்.

இங்க்லண்ட மேஜை மீது உட்கார்ந்த நிலையில் சிறிது திரும்பி ராணியை நோக்கினான். ''இன்னொரு கட்சியா?'' என்று வியப்புடன் வினவவும் செய்தான்.

ராணி சிறிதளவும் முகத்தில் வியப்பையோ வேறெந்த உணர்ச்சிகளையோ காட்டவில்லை. ''ஆம்'' என்ற ஒரு சொல்லை மட்டும் சொன்னாள்.

''இங்கு கட்சிகள் ஏது?'' என்று வினவினான் இங்க்லண்ட்.

''எந்த விஷயத்திலும் உண்மையைப் புரிந்து கொண்டு இறங்குவது நல்லது'' என்று கூறிய ராணி ''இங்க்லண்ட்! இங்கு நீங்களும் டெய்லரும் சேர்ந்த கட்சி இருக்கிறது. நீங்கள் அனந்தைப் பிடிக்கும் நோக்கத்துடன் சிந்து துர்க்கம் வந்தீர்கள். அவர் உங்களை அழிக்க வந்திருப்பதாக முன்னமே கூறியிருக்கிறீர்கள். ஆக உங்கள் கட்சி, உங்கள் நோக்கம் ஒன்று. அனந்த் சிந்து துர்க்கம் வந்த காரணம் எனக்குத் தெரியாது. ஆனால் அவர் சமீபத்தில் கூறிய விஷயங்களிலிருந்து துலாஜி ஆங்க்ரேயை இதே கப்பலில் சந்திக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும், பிரிட்டிஷ் கடற்படை பலத்தை உடைப்பது அவர் நோக்கம் என்பதும் தெரிந்தது. கட்சி இரண்டு ஆயிற்று. அடுத்தபடி நான், என் தந்தை, இந்தக் கப்பலில் உள்ள எங்கள் வீரர்கள் மூன்றாவது கட்சி. உங்கள் சண்டைகளில் எங்களுக்குச் சம்பந்தமில்லை. இருப்பினும் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சிகளால் இந்தக் கப்பலுக்கு வந்திருக்கிறோம். இப்படி மூன்று கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. வில்வரைப் பற்றி நான் ஏதும் கூற

முடியவில்லை. அவர் இந்தக் கட்சிகளில் ஏதாவது ஒன்றில் சேர்ந்தவரா அல்லது தனிப்பட்டவரா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவரை நாம் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. மற்றவர்கள் சாதிக்க முடியாததை அவர் கண்டிப்பாய்ச் சாதிக்க முடியும். ஆகையால் அவரைத் தனிக் கட்சியாக வைத்துக்கொண்டால் இந்தக் கப்பலில் கட்சிகள் நான்காகும்'' என்று விளக்கவும் செய்தாள்.

ராணியின் தெளிவான பார்வை அங்கிருந்த அனைவர் மனத்தையும் கவர்ந்ததென்றால் எல்லோரையும் விட வில்லவரை அதிகமாகக் கவர்ந்திருக்க வேண்டும். ''ராணி சொல்வது முற்றும் உண்மை'' என்றான் வில்வர். அத்துடன் சொன்னான்: ''என்னிஷ்டப்படி நான் நடக்கலாமென்றால் நான் ராணியின் பக்கம்தான் சேருவேன்'' என்று.

அதுவரை மௌனமாயிருந்த சங்கர் பந்த் ''இந்த வீண் விவாதம் எதற்கு?'' என்று வினவினார் எரிச்சலுடன்.

''இது வீண் விவாதமல்ல. பயன் தரக் கூடியது. இங்கு கட்சிகள் நான்கிருந்தாலும் எல்லோரும் ஓர் இனம் என்பதை ராணி குறிப்பிடுகிறாள்'' என்று உரையாடலில் புகுந்தான் எட்ட நின்றிருந்த துலாஜி ஆங்கரே.

''ஓர் இனமா! என்ன இனம் அது?'' என்று வியப்புடன் வினவினான் இங்க்லண்ட்.

''கொள்ளைக்கார இனம். டெய்லரும் வில்வரும் கடற் கொள்ளைக்காரர்கள் என்பது பிரசித்தம். அந்த வகையில் ராணியின் பெயரும் அற்ப சொற்பமல்ல. கடல் ராணி என்று அவள் அழைக்கப்படுவதே அதற்கு அத்தாட்சி. இந்த சங்கர் பந்த் மல்வான் கோட்டைத் தளபதி என்று பெயர். ஆனால் பிரிட்டிஷ் கப்பலொன்றைச் சமீபத்தில் கொள்ளையடித்து விட்டதாக பிரிட்டிஷார் சொல்கிறார்கள். என் தந்தை கடற் கொள்ளைக்காரரென்று பிரசித்தி பெற்ற கனோஜி ஆங்கரே. ஆகையால் என்னைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. மீதி அனந்த் ஒருவன். அவன் எனது நண்பன். எங்கள் இருவர் திட்டமும் மனமும் செயலும் நோக்கமும் ஒன்று. ஆகவே நாமெல்லோரும் ஓர் இனம். இந்தச் சமயத்தில் நாம் ஒன்றுபடுவது நல்லது, லாபமுள்ளது'' என்று துலாஜி ஆங்கரே விளக்கமாகவும் நிதானமாகவும் அழுத்தமான குரலிலும் பேசினான்.



இதற்குப் பிறகு அந்த அறையில் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை அனந்த் கலைத்தான். ''இப்பொழுது நாம் நமது திட்டத்தை ஆராயலாம்'' என்றான். ''எதற்கும் டெய்லரையும் அழைத்து வருவது நல்லது'' என்றும் கூறினான்.

''இந்தக் கப்பலுக்கு நான்தான் பிரதான காப்டன். நான் ஒப்புக் கொண்டால் டெய்லர் ஒப்புக் கொண்டது போலத்தான்'' என்று கூறிய இங்க்லண்ட் ''இப்பொழுது உங்கள் திட்டத்தை விவரிக்கலாம்'' என்றும் சொன்னான்.

ராணி இங்க்லண்ட் மீது தனது கண்களைத் திருப்பினாள். ''எதற்கும் டெய்லரும் வரட்டும்'' என்றாள்.

அனந்த் தனது நாற்காலியிலிருந்து எழுந்தான். ''டெய்லரை நான் அழைத்து வருகிறேன்'' என்று சொல்லி வெளியே சென்றான். சில விநாடிகளில் டெய்லருடன் திரும்பி வந்தான். அப்பொழுது டெய்லர் மிகவும் நிதானப்பட்டிருந்தான். அவன் நடை மிகத் திடமாயிருந்தது. அவன் பார்வையில்



பழைய குரூரம் மீண்டும் வெகு நன்றாகத் துளிர் விட்டது. மேஜைக்குச் சிறிது முன் பாகவே கால்களைப் பரப்பி நின்று ''இங்கு என்ன நடக்கிறது? என்னை எதற்காக அழைத்தீர்கள்?'' என்ற அவன் கேள்வியிலும் குரூரம் பயங்கரமாக ஒலித்தது.

ஆனால் அவன் பார்வையின் குரூரத்தையோ குரலின் குரூரத்தையோ அந்த அறையி லிருந்த யாரும் லட்சியம் செய்ததாகத் தெரிய வில்லை. விளைவு வேறு விதமாகவும் இருந்தது. ''விட் டௌன் டெய்லர்'' என்று ராணி அதிகார தோரணையில் கூறினாள், எதிரே அனந்த் ஏற்கனவே அமர்ந்திருந்த நாற் காலியைச் சுட்டிக் காட்டினாள்.

அனந்த் அதில் உட்காருமாறு டெய்ல ருக்குச் சைகை காட்டினான். டெய்லர் இரண்டடி நடந்து நாற்காலியில் உட்கார்ந்து ''வெல்? (என்ன?'') என்று கேட்டான்.

''தே ஹேவ் ஏ ப்ளான் (இவர்களுக்கு ஒரு திட்டம் இருக்கிறதாம்)'' என்று இங்கலண்ட் சொன்னான்.

டெய்லரின் இதழ்களில் மிகக் கொடிய புன்முறுவலொன்று படர்ந்தது. ''எஸ், எஸ். காப்டன் மாக்ரே அண்ட் தி மில்லியன்ஸ். கோல்ட், ஜுவல்ஸ் (ஆம் ஆம். காப்டன் மாக்ரேயும் லட்சக் கணக்கான பவுன்கள் மோஹராக்கள் நகைகள் முதலியன)''என்று கூறினான் இகழ்ச்சி நிரம்பிய குரலில். லேசா கக் கொடிய நகை நகைத்தான். ''அந்தப் பொய்யைக் கேட்டோம் ஏற்கெனவே. அடுத்து என்ன?'' என்றும் வினவினான்.

முதன் முதலாய் அனந்த் அந்த விவாதத் தில் கலந்து கொண்டான். ''அது முழுவதும் பொய்யல்ல. ராணி கடைசியில் சிறிது அதிகப்படுத்தினாள் காரண மாக'' என்றான்.

''எது பொய்யல்ல? எதை அதிகப்படுத்தினாள் ராணி?''. டெய்லரின் குர லில் வெறுப்பு இருந்தது.


''மாக்ரே உன்னையும் டெய்லரையும் தேடி வரு வது பொய்யல்ல. மாக் ரேயின் கப்பல்களில் பணம் வருவதும் பொய்யல்ல. நகைகள் வைர, வைடூரி யங்கள்தான் அதிகப்படி'' என்று அனந்த் கூறினான்.

டெய்லர் தனது கண் களை ராணி மீது திருப்பி னான். ''எதற்காகப் பொய் சொன்னாய் ராணி?'' என்று வினவினான்.

ராணியும் டெய்லரைக் கூர்ந்து நோக்கினாள். ''கொள்ளைக்காரர்களைப் பணத்தைத் தவிர எதுவும் நிலைதவறச் செய்யாது. தவிர காலையில் நான் அந்த வெறியை உருவாக்கியிரா விட்டால் பல கொலைகள் நடந்திருக்கும். ஆனால் டெய்லர், உன் புத்தி கூர்மை, சமயோசிதம், விஷ யத்தை அடியோடு வேறு திசையில் திருப்பி விட்டது'' என்று கூறினாள் ராணி.

''என் புத்திகூர்மையா? சமயோசிதமா?'' என்று வினவினான் டெய்லர்.

''ஆம் டெய்லர். உன்னைச் சுற்றி சங்கர் பந்தின் மாலுமிகளும் துலாஜியின் மாலுமி களும் நிற்பதைக் கண்டாய். எந்தச் சமயத் தில் எது நேர்ந்தாலும் வீண் ரத்தக் களறி என்பதைப் புரிந்து கொண்டாய். ஆகையால் தான் அந்தக் குடி வெறிக் கொண்டாட் டத்துக்கு ஏற்பாடு செய்தாய். டெய்லர், ஐ அட்மைர் யூ (டெய்லர் உன்னைக் கண்டு



என் மனம் வியக்கிறது)'' என்று ராணி தான் நிலையைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டதைத் தெளிவாக்கினாள்.

டெய்லரின் முகத்தில் பெருமையும் மகிழ்ச்சியும் நிலவியது. ''ராணி, ஐ ஹால் நெவர் மெட் எ கேர்ல் லைக் யூ. இப் எனிடே ஐ டிஸைட் டு மாரி இட் வில் பி யூ (ராணி! உன்னைப் போன்ற ஒரு பெண்ணை இதுவரை நான் கண்டதில்லை. என்றாவது ஒரு நாள் நான் மணக்கத் தீர்மானித்தால் உன்னைத் தான் மணப்பேன்)'' என்றான்.

ராணி வாய் திறந்து நகைத்தாள். ''அந்த சமயம் வரும்போது பார்ப்போம். என் திருமணத்தை விட முக்கிய விஷயங்கள் இப்பொழுது இருக்கின்றன நாம் கவனிப்பதற்கு'' என்று கூறி அனந்தை நோக்கினாள்.

அனந்தின் முகம் கல்லாயிருந்தது. அவன் ஏதும் பேசவில்லை. கையை மட்டும் நீட்டினான் ராணியை நோக்கி.

ராணி தனது ரவிக்கைக்குள் கையை விட்டு அந்தப் பழைய கசங்கிய காகிதத்தை எடுத்து நீட்டினாள் அனந்திடம். அவன் அதை வாங்கி நன்றாகப் பிரித்துக் கசங்கிய பகுதிகளைச் சரிப்படுத்தி மேஜை மீது வைத்தான். ''ஸில்வர்! இங்க்லண்ட்! டெய்லர்! இதைச் சிறிது பாருங்கள்'' என்றான்.

அவன் சொன்னதும் நாற்காலியில் இருந்தபடியே மேஜை மீது சாய்ந்தான் டெய்லர். ஸில்வர் தடியைப் பிடித்துக் கொண்டு எழுந்திருந்து அந்தக் காகிதத்தில் கண்களை ஓட்டினான். மேஜை மீது உட்கார்ந்திருந்த இங்க்லண்ட் கூடக் கீழே இறங்கித் திரும்பி மேஜை மீது பார்த்தான். பிரிந்து கிடந்த அந்தக் காகிதத்தில் மூவர் கண்களும் பதிந்தன, ஆராய்ந்தன, திரும்பத்திரும்ப அதன் மீதே ஓடின. மூவர் உணர்ச்சிகளையும் அந்தக் காகிதம் ஆட்கொண்டிருக்க வேண்டும். மூவரும் நீண்ட நேரம் மௌனம் சாதித்தார்கள்.

''1979ம் வருடம் மிகவும் குளிர்ச்சியானது!''

''எப்படி!''

''International children's year - என்பதன் சுருக்கம் ICY அல்லவா? அதனால் தான். குழந்தைகளுக்கும் ஐஸ் என்றால் அலாதி பிரியமாச்சே! என்ன பொருத்தம் பார்த்தாயா?''

- ரேகா ராகவன்



முன்பு துலாஜி கொடுத்த அதே அரபிக் கடலோர நிலப்படம் அது. துறைமுகங்களும், அந்தந்த இடத்திலிருந்த ராஜீய சக்திகளின் கப்பல் பலமும் காட்டப்பட்ட அதே படம்தான் அது. ஆனால் அதில் சில மாற்றங்கள் இருந்தன. மாற்றங்கள் மாற்றங்களாகத் தெரியவில்லை, மிகச் சாமர்த்தியத்துடன் செய்யப்பட்டிருந்த காரணத்தால். ஆனால் அந்தப் படம் அந்த மூன்று கொள்ளைக்காரர்களையும் கவர்ந்திருக்க வேண்டும். ''இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பது உன் நினைப்பா?''. இந்தக் கேள்வி இங்க்லண்டால் கேட்கப்பட்டது அனந்தை நோக்கி.

''நினைப்பல்ல, நிச்சயம்'' என்றான் அனந்த்.

''சரி. நாங்கள் இதில் கலந்து கொள்கிறோமென்று வைத்துக் கொள்வோம். எங்களை நீங்கள் ஏமாற்ற மாட்டீர்கள், எதிரிகளிடம் காட்டிக் கொடுக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? அதற்கு என்ன உறுதி கூற முடியும் உங்களால்?'' என்று டெய்லர் கேட்டான், அனந்தையும் ராணியையும் மாறி மாறி நோக்கி.

பதில் அந்த இருவரிடமிருந்தும் வரவில்லை. தூர நின்றிருந்த துலாஜியிடமிருந்து வந்தது. ''இந்த நடவடிக்கைக்குத் தலைமை வகிக்கப் போவது காப்டன் இங்க்லண்டும், காப்டன் டெய்லரும்'' என்றான் துலாஜி.

இதனால் டெய்லருக்கு ஓரளவு திருப்தி ஏற்பட்டாலும் ஸில்வரின் முகத்தில் சந்தேகம் நிலவியது. ''முதலில் தலைமை வகிக்க இவர்களை விட்டு, நேற்று மாறியதைப் போல் இடைரென்று நீங்கள் மாறினால்?'' என்று வினவினான் ஸில்வர்.

துலாஜியே இதற்கும் பதில் சொன்னான், ''முதலில் இந்த நடவடிக்கைக்கு ஈடு காட்டுகிறேம்.'' என்று.

''என்ன ஈடு?'' இரண்டாம் முறை வெளிவந்தது ஸில்வரின் கேள்வி.

ஸில்வர் என்ன, ராணியும் மற்ற எல்லோருமே தன்னை நோக்கித் திரும்பும்படி பேசினான் துலாஜி. ''சிந்து துர்க்கம் காப்டன் இங்க்லண்டின் வசம் ஒப்புவிக்கப்படும். இதை விட வேறு என்ன ஈடு வேண்டும்?'' என்று கேட்கவும் செய்தான்.

துலாஜியின் பேச்சைக் கேட்ட எல்லோருமே திக்பிரமைக்குள்ளானார்கள். ''இந்தக் கொடியவர்களிடம் சிந்து துர்க்கத்தை ஒப்படைப்பதாவது?'' என்று எண்ணி அதிர்ச்சியடைந்த சங்கர்பந்த் நாற்காலியில் சாய்ந்து விட்டார். அதைவிட அதிர்ச்சி தரும் பயங்கரத் திட்டத்தை அடுத்தபடி விவரிக்கத் துவங்கினான் துலாஜி.

(தொடரும்)

GOLDEN OPPORTUNITY!

சிறந்த பயிற்சி ! மிகக் குறைந்த கட்டணம் ! !

வகுப்புகள் ஆரம்பம் : 13-2-1980

உத்திரவாதத்துடன் 1980-81ம் வருட கீழ்க்கண்ட தேர்வுகளுக்கு தபால் மூலம் மாதமிருமுறை பாடங்கள் அனுப்பிப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், சென்னை சென்டரில் நேர்முக வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

1. M.B.A., M.B.M., A.M.I.B.M., A.M.I.B.A., L.L.B., M.Ed, LAW DIPLOMA & B.Ed. (பட்டதாரிகள் தகுதியுடையவர்கள்). **2. MYSORE M.A., B.A., & B.COM** (தமிழ் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தகுதியுடையவர்கள்). **3. S.V., B.A. & B.COM. 4. BHOPAL I.A. & I.COM** (S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்). **5. COM. INTER, D.COM., B.COM., B.COM (Hons.), M.COM** (S.S.L.C., S.S.C., P.U.C. H.S.C., Kerala, Compartmental S.S.L.C., Engineering Diploma தேறியவர்களும் தவறியவர்களும் தகுதியுடையவர்கள், 6. ஆந்திரா மெட்ரிகுலேஷன், P.U.C., INTER. 7. E.S.L.C. 8. விவசாயம். 9. கைத்தறி நெசவு. 10. போஸ்ட்மேன்-போஸ்டல் கிளார்க். 11. கிராம மணியம்-கர்ணம். 12. சர்வீஸ் கமிஷன் (Oct. 80). 13. பேசிக் ஆங்கிலம்-பிரிமெட்ரிக். 14. அக்கவுண்டன்ஸி. 15. ஹோமியோபதி. 16. B.A., M.A., (one sitting) உஸ்மானியா & உத்கல் யூனிவர்ஸிட்டி. 17. மீரட் இண்டர்

குறிப்பு : சென்னை கிளை அலுவலகங்களில் நேர்முக வகுப்புகள் நடத்தப்படும்

தமிழகத்தின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்!

(RECOGNISED & AFFILIATED BY I.A.E., I.B.A.M. & Com UNIVERSITY)

பாடப்பயிற்சிக்கும் - வெற்றிக்கும் உத்தரவாதத்துடன் பயிற்சியளிக்கப்படும்

முழு விவரங்களுக்கு ரூ. 2/- M. O. அனுப்பவும்

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

(Estd: 21-3-1952 Govt. Regd. No. 3072)

ரிஷிவந்தியம் - PIN: 606 205 - தெ. ஆ. மாவட்டம் – தமிழ் நாடு

MADRAS REGIONAL OFFICE:

41, ARCOT ROAD, MADRAS-600 024

கிளைகள் : சென்னை, மலேசியா, சிலோன், தென் ஆப்பிரிக்கா, மாரிஷியஸ், இந்தோனேசியா, அந்தமான்.

—OM SRI

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே!
என்அரசே யான்புகலும் இசையும்அணிந்து அருளே!

– திருஅருட்பா

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ - நவநீதகிருஷ்ணன் திருக்கோயில்

எம். எம். டி. சி. காலனி, நங்கநல்லூர், சென்னை-600 061

திருமாங்கல்ய சரடு வழங்கும் விழா

திருக்கல்யாண உற்சவம் (தை மீ 3வது வெள்ளிக்கிழமை)

1-2-1980

காலை 10 மணி : திருமஞ்சனம்
மாலை 4 மணி : திருக்கல்யாண உற்சவம்
7 மணி : தாயாருக்குச் சாற்றிய திருமாங்கல்ய சரடு வழங்குதல்

ரூ. 1/- (ஒன்று மட்டும்) செலுத்தி, திருமாங்கல்யச் சரடு பெற்று சுமங்கலிகள் சகல சௌபாக்கியங்களையும், திருமணமாகாதவர்கள் திருமண பாக்கியமும் பெற வேண்டுகிறோம்

பஸ் மார்க்கம் : 18C, 18D, 51F, 51C மடிப்பாக்கம்

ஸ்ரீ கிருஷ்ண பக்த ஜனசபா

விரக்தி நதிகள்



அறிவிப்புப் பலகையை அவன் எறிட்டு நோக்கினன்.

'இன்று 50வது நாள்.'

''தோழர்களே..... நமது நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்கும்வரை போராட வேண்டி இன்று முதல் வேலை நிறுத்தம்....''

யாரோ ஒரு தலைவனின் அடிவயிற்றிலிருந்து ஆற்றல் பெற்று வெளியே விழுந்து சிதறிய அச்சொற்கள் அவனை வரவேற்றன.

அந்த வரவேற்புக்குப் பிறகு நடந்த பேச்சு வார்த்தைகள் நீண்டு கொண்டே செல்ல, அதற்குப் பின்பு தன் மனைவியின் உடலில் கிடந்த ஒரே தங்க நகையான தாலி குண்டு மணிகளை விற்றதும் அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அந்தப் பணத்தில் பழைய கடன்களை அடைத்து, வீட்டு வாடகைகொடுத்து, எஞ்சியதில் அவன் உள்ளிட்ட நான்கு ஜீவன்களின் வயிற்றைக் கழுவி வந்தது அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அந்தப் பணத்தில் இன்னும் ஐந்து ரூபாய் தான் மிச்சமிருக்கிறது என்பதை எண்ணும் போதுதான் அவன் பதறுகிறான்.

இன்னும் எத்தனை நாட்கள் — வாரங்கள் — மாதங்கள் — இந்த அறிவிப்புப் பலகையின் எண்கள் வளர்ந்து கொண்டே போகும்? இன்னும் எவ்வளவு காலம் இந்தத் தொழிற்சாலையின் வாசற் கதவுகளில் போலீஸ்காரர்களின் காவல் நீடிக்கும்... அவன் சிந்தனை வியர்த்தது.

பாக்டரி அருகே ஓர் ஓலைக் கூரையின் கீழ் உண்ணாவிரதம் இருக்கும் ஊழியர்களில் ஒரிருவர் சுருண்டு கிடந்ததை ஒரு நிமிடம் பார்த்தான்.

அவர்கள் சுருண்டு கிடப்பது இவன் தொண்டையைக் காய்த்தது.

''தலைவர் வாழ்க... தலைவர் வாழ்க... நிர்வாகம் ஒழிக....''

தலைவரின் வருகையை அறிவிக்கும் குரலோசை அவனைக் குடிசையின் ஓர் ஓரத்தில் ஒதுங்கச் செய்தது.

தலைவர் காரிலிருந்து இறங்கி வந்தார். உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு ஆறுதல்

ஏ.வி.எம்.கணேஷ்



சொன்னார். நிர்வாகம் சற்று வளைந்து வருவதாகச் சொன்னார். எட்டுத் திசைகளுக்கும் கரம் கூப்பிவிட்டுப் புறப்பட்டார். தலைவர் புறப்பட்டுப் போன மறு விநாடி...

''கூட்டம் கூட்டமாக நிற்காமல் கலைந்து செல்லும்படி தொழிலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.''

மிரட்டும் குரலில் வந்த போலீசின் கோரிக்கை மைக் வழியே அலறியது.

'கலைந்து செல்க'... என்றுதான் சொல்கிறார்களே தவிர எங்கே செல்வது என்று யாரும் சொல்லவில்லையே... அவன் சிந்தனையில் வினா முள் சிக்கியது.

மீண்டும் சட்டைப் பைக்குள் கையைத் துழாவிப் பார்த்தான். ஐந்து ஒரு ரூபாய் நோட்டுகள் நெருடின. அவன் வீட்டுச் செலவுக்கு ஒரு வேளைக்குக் கூடப் போதாத பணம். சிறிது நேரம் சிந்தித்தான். அருகிலிருந்த முனியாண்டிக்குள் நுழைந்தான்.

நாலரை ரூபாய் காலி. நாலணாவுக்குப் பீடி. அவன் வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள்.

அதாவது வேலை நிறுத்தத்தின் ஐம்பத்தோராவது நாள். இரண்டு நாள் பட்டினி மயக்கத்திலிருந்து மனைவியும் குழந்தைகளும் கண் விழிக்கும் முன்பே அவன் புறப்பட்டு விட்டான்.

பைக்குள் கையை விட்டான். நாலணா நெருடியது. பாக்டரியை நோக்கி நடக்கத் தொடங்கினான். நேற்று சாப்பிட்ட பிரியாணி அளித்த சிறிது சக்தியில் அவன் கால்கள் நடைபயின்று கொண்டிருந்தன.

பாக்டரியை அவன் நெருங்கும்போது...

''ஓர் அறிவிப்பு... பாக்டரியைச் சுற்றி 144 தடை உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதால் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளிகள் பாக்டரி அருகே செல்ல வேண்டாமென எச்சரிக்கப்படுகிறார்கள்...''

போலீஸ் வேன் ஒன்று அறிவிப்பை அலறிக் கொண்டே விரைந்தது.

அவன் சுற்று முற்றும் பார்த்தான். சக தொழிலாளி எவரையும் காணோம்.

பேச்சு வார்த்தையின் நிலை என்ன என்பதைக் கூட உணர்ந்து கொள்ள விடாமல் தடை விதித்துவிட்ட சட்டத்தை நொந்து கொண்டு நிழலைத் தேடி அருகேயுள்ள பஸ் ஸ்டாப்பில் ஒதுங்கியபோது...

''சலங்....சலங்....''

அவன் எதிரே ஓர் உண்டியல் குலுக்கப்படுகிறது.

உலகத்திலேயே கதிர்காம முருகனுக்கு மட்டும் தான் உண்டியலில் அவன் பெயருக்கு (செக்) காசோலை எழுதிப் போடும் பழக்கம் உள்ளது. கதிர்காம முருகன் பெயருக்கு செக் எழுதி உண்டியலில் போட்டால் அது செல்லுபடியாகும்.

—பி. நாராயணன்



''சார்... ஐம்பது நாளா மூவாயிரம் தொழிலாளர் குடும்பங்கள் பட்டினி சார்... கொஞ்சம் உதவி செய்யுங்க சார்...''

உண்டியலை ஏந்தி வந்தவன் உயிரற்ற குரலில் கோரிக்கையைக் கூற அவன் கோரிக்கைக்குப் பின்னணி கொடுக்கிறது உண்டியலின் குலுங்கல்கள். உண்டியல் குலுக்குபவனின் முகத்தை உற்றுப் பார்த்தான் அவன்.

பத்தாண்டு காலம் பணி புரியும் அவனுக்கு அறிமுகமற்ற முகம்...

புதிதாக வேலைக்கு வந்தவனாக இருக்குமோ இல்லை சமூக நல ஊழியனோ?

எட்டணா... நாலணா.... ஒரு ரூபாய். பலதரப்பட்ட மனிதர்களின் கரங்களிலிருந்து பலவகையான காசுகள் உண்டியலுள் விழுந்த வண்ணம் இருந்தன.

பஸ் ஸ்டாப் தூணில் சாய்ந்தவாறே உண்டியலின் நடமாட்டத்தை அவன் கவனித்துக் கொண்டிருந்தான்.

பஸ் வந்தது. பஸ்கள் வந்தன. பஸ் ஸ்டாப் காலியாயிற்று. உண்டியலைக் குலுக்கியவன் அதை ஒரு பைக்குள் சுருட்டி வைத்துக் கொள்கிறான். பஸ் ஸ்டாப்பை விட்டு மெல்ல நழுவியது உண்டியல். அதைப் பின் தொடர்ந்தான் அவன்.

'உண்டியல்' அருகிலிருந்த ஓர் ஓட்டலுக்குள் நுழைய அவனும் நுழைந்தான்.

உண்டியல் ஹோட்டலின் தனி அறைக்குள் சென்று அமர அவனும் அவ்வறைக்குள் சென்று அமர்ந்தான்.

உண்டியல் ஒரு முறை இவனை ஏறிட்டுப் பார்த்தது. பின்பு அலட்சியமாக அன்றைய வரவை எண்ணத் தொடங்கியது.

சர்வர் வந்தான். பரோட்டாவுக்கும் பாயாவுக்கும் ஆர்டர் செய்தது உண்டியல்.

இவன் ஒரு சிங்கிள் 'டீ மட்டும்' சொன்னான்.

வெள்ளைப் பீங்கான் தட்டில் பாளம் பாளமாகப் பரப்பப்பட்டிருந்த பரோட்டாவில் ஒரு பகுதியை வெட்டி எடுத்துப் பாயாவில் அதைத் தோய்த்து எடுத்து — வாய்க் குகைக்குள் 'உண்டியல்' நுழைக்கும்போது....

''மிஸ்டர் உண்டியல்... நீங்க இந்தப் பாக்டரியில்தான் வேலை பார்க்கிறீங்களா?''

''ஆமாம்....''

''எந்த செக்ஷன்?''

''பேப்ரிகேஷன்ஸ்...''

''ராஸ்கல்...என்ன துணிச்சல்டா உனக்கு? அந்த செக்ஷன் சூப்பர்வைசரே நான்தான்!''

அவன் தன் உடல் பலம் முழுவதையும் தன் கரங்களுக்கு ஒன்று கூட்டினான்.

சித்திரகுப்தன் ஒரு பெரிய ஏட்டில் ஒரு வரியை அடித்துக் கொண்டிருந்தான். காரியத்தை — கடமையை முடித்துவிட்ட பெருமிதத்துடன்...... எருமை மீதிருந்தவன் தன் கயிற்றைச் சுருட்டிக் கொண்டிருந்தான்.

போலீஸ் கண்ட்ரோல் ரூம் டெலிபோன் விடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அப்போது....

ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் ஏ. சி. கான்பரன்ஸ் ஹாலில் தொழிலாளர் தலைவருக்கும் நிர்வாகத்துக்கும் வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகிக் கொண்டிருந்தது.



நான் கண்ட ரஷ்யா

அகிலன்

டால்ஸ்டாய் பண்ணை வாயிலில் சில கடைகள்; கடைகளில் டால்ஸ்டாயின் படங்களும், அவரைப்பற்றிய நூல்களும் கிடைக்கின்றன. ஓர் உணவு விடுதி இருக்கிறது. பயணிகளுக்கான தகவல் நிலையமும் உள்ளது. சுற்றுலாப் பயணிகளைச் சுமந்து வந்த ஏழெட்டுப் பேருந்துகள் வெளியே நின்றன. வெளிநாட்டு-உள்நாட்டுப்பயணிகள் அங்கே நூற்றுக்கணக்கானோர் கூடியிருந்தார்கள்.

டால்ஸ்டாய் பண்ணை அதன் மிகப் பெரிய முகப்பு வாயிலின் இரும்புக் கதவுகளுக்குப் பின்னே 400 ஹெக்டேர் நிலத்தில் நீண்டும் பரந்தும் கிடக்கிறது. தூலா நகரத்து மாணவியான ஆலா என்ற 19 வயதுப் பெண்மணி எங்களுக்கு வழிகாட்டியாக அனுப்பப்பட்டார். இரு புறமும் பர்ச் மரங்களால் சூழப்பெற்ற நீண்ட சோலை நிழல் பாதையில் நாங்கள் நடக்கத் தொடங்கினோம். அதே பாதையில்தான் அடிக்கடி டால்ஸ்டாய் நடந்து திரிந்து உலவுவாராம். அல்லது தமது குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்வாராம். சோலையின் தொடக்கத்தில் பெரியதொரு குளம் தெரிந்தது. பிறகு பாதைகள் பிரிந்து பல்வேறு திசைகளுக்குச் செல்கின்றன.

டால்ஸ்டாய் பண்ணை என்பது அந்தக் காலத்துப் பிரபுக்களிலேயே மிகச் சாதாரணமான குட்டிப் பிரபு வாழ்ந்த பண்ணை! அதன் அளவையும் பரப்பையும் பார்க்கும் போதே நமக்குப் பிரமிப்புக் கட்டுகிறது. வீட்டு வேலைக்காரர்கள் இருபது முப்பது பேர், பண்ணை அடிமைகள் நூற்றுக் கணக்கானோர், அவர்களைத் தவிர பிரபுக்களுக்குச் சொந்தமான சுற்றுப்புறக் கிராமங்களில் அவர்களுக்காக உழைத்த பண்ணையாட்கள். பெரிய பிரபுக்கள் எப்படி வாழ்ந்திருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டேன்.

இந்தப் பண்ணைக்குள்ளே உள்ள வீட்டைத் தவிர, குளிர் காலங்களில் வசிப்பதற்கு அவருக்கு மாஸ்கோவில் ஒரு மாளிகையும் இருந்தது. அதையும் புரட்சிக்குப் பிறகு ஒரு காட்சி சாலையாக மாற்றியிருக்கிறார்கள். பண்ணையிலும் நகரத்திலுமாக டால்ஸ்டாய் மாறி மாறி வசித்தாலும் அவர் வாழ்க்கையில் சுமார் 50 ஆண்டுகளைப் பண்ணையில்தான் கழித்திருக்கிறார். இங்கிருந்து அவர் எழுதிய கதைகள் கட்டுரைகள் 200க்கும் மேற்பட்டவை.



< டால்ஸ்டாய், மனைவி சோஃபியா, குடும்பத்தினர்

இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த டால்ஸ்டாய் தமது அத்தையால் வளர்க்கப்பட்டிருக்கிறார். அவருடைய இளமைப் பருவமும் மற்ற பிரபு வீட்டுப் பிள்ளைகளின் இளமைப் பருவத்தை ஒட்டித்தான் கழிந்திருக்கிறது. கருங்கடல் பகுதியில் நடந்த போருக்குச் சென்று பல மாதங்கள் போர் வீரராகக் கழித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். கால்நடை வளர்ப்பு, குதிரைகள் வளர்ப்பு, ஆடுகள் வளர்ப்பு, பயிர் செய்தல் முதலிய வேலைகளை மேற்கொண்டு அவற்றில் தோல்வி கண்டிருக்கிறார்.

வெளிவராது என்ற அச்சத்தோடு அவர் எழுதி அனுப்பிய முதல் கதை ஒன்று அச்சாகிப் பத்திரிகையில் வெளி வந்தபோது தான் அவர் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல; அவர் எழுத்தாற்றலைக் கண்ட பத்திரிகாசிரியர் அவரைப் பாராட்டி மேன்மேலும் எழுதச் சொன்னார். 'போரும் அமைதியும்' 'அன்னா கரேனினா' முதலிய உலகப் பேரிலக்கியங்களான நாவல்கள் அவரிடமிருந்து வெளிவரத் தொடங்கின. ஏராளமான புகழ்; ஏராளமான பொருள்; நாடும் உலகமும் அறிந்த எழுத்தாளராக அவர் உயரத் தொடங்கினார்.

ஆனால் டால்ஸ்டாயின் புகழ் அவரது நாவல்களால் மட்டும் ஒளி வீசவில்லை. தம்மிடம் வேலை செய்த அடிமைகள், பண்ணை யாட்கள், சுற்றுப்புறக் கிராமங்களில் பசி-பட்டினி — நோய் என்று செத்து மடிந்து கொண்டிருந்தவர்கள், மாஸ்கோ நகரத்துக் குடிசைகளிலும் குப்பங்களிலும் வறுமையால் உழன்றவர்கள் முதலியோரின் வாழ்க்கைப் போராட்டங்களை அவர் ஆராயலானார். அவற்றைத் தமது கதை கட்டுரைகளில் துணிச்சலுடன் வெளியிட்டார். ஜார் காலத்து அரசாங்கம் அவரைக் கண்காணிக்க முற்பட்டது; அவர் எழுத்துக்களைத் தணிக்கை செய்ய முன்வந்தது. அவர் தமது பண்ணையிலேயே ஏழைக் குழந்தைகளுக்காக நிறுவிய பள்ளிக்கூடத்தின் மேல் அது போலீஸ்காரர்களை ஏவிவிட்டது. அவரது பண்ணை வீட்டின் மூலை முடுக்கெல்லாம் சோதனை நடத்தியது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் ரஷ்யாவின் தலைமைக் கிறிஸ்தவாலயம் அவரை மதப் பிரஷ்டம் செய்தது. மன்னிப்புக் கேட்டால் மீண்டும் அவரை ஏற்றுக் கொள்வதாய் ஆசை வார்த்தை காட்டியது. கடைசி மூச்சு வரை அவர்



⌘ டால்ஸ்டாய் பண்ணையில் உள்ள அவர் வீடு

⌘ டால்ஸ்டாயின் அறை.



மன்னிப்புக் கேட்கவே யில்லை. அவருடைய பண்ணையையும் பங்களாவையும் துறந்து விட்டு, அவருடைய எழுத்துக்களின் பதிப் புரிமையைக் குடும்பச் சொத்தாக்க வேண்டு மென்று துடித்த அவருடைய மனைவி சோஃபியாவிடம் — 48 ஆண்டுகள் அவருடன் வாழ்ந்து அவருக்குப் பதின்மூன்று குழந் தைகள் பெற்றவரிடம் — கோபித்துக்கொண்டு அவர் வெளியேறினார். தம்முடைய உயிரில் தம் எழுத்துக்களின் பதிப்புரிமையை உல கத்து மக்கள் அனைவருக்கும் பொதுச் சொத்தாக்கி விட்டுத்தான் சென்றார்.—அவர் வீட்டைத் துறந்து வெளியேறியபோது, ஆஸ்டோபோவா என்ற ஒரு சின்னஞ் சிறு ரயில்வே ஸ்டேஷனில், ஸ்டேஷன் மாஸ்ட ரின் அறையில் அவர் உயிர் பிரிந்தது. அந்த ரயில்வே ஸ்டேஷன் இப்போது 'டால்ஸ் டாய் ரயில்வே ஸ்டேஷன்' என்ற பெய ரால் விளங்குகிறது.

அவர் பண்ணையாட்களின் வீட்டுப் பிள்ளை களுக்காக நடத்திய பள்ளி, அவருடைய குதிரைக் கொட்டகை, மாட்டுக் கொட்டகை வேலைக்காரர்களின் குடியிருப்புக்கள் முதலிய வற்றைப் பார்த்துக் கொண்டே, நாங்கள் நடந்தோம். அவர் பிறந்த வீடு இப்போது அங்கே இல்லை. அந்த வீடு இருந்த இடத்தில் மரங்கள் அடர்ந்து முளைத்துள்ளன. அவர் வாழ்ந்த வீட்டைத்தான், அவர் வாழ்ந்த காலத்தில் இருந்தபடியே கண்காட்சி சாலையாக மாற்றி வைத்திருக்கிறார்கள். அடித் தளத்தில் பத்துப் பன்னிரண்டு கூடங்கள், மேலே மாடியில் ஏழெட்டு அறைகள்!

அவர் வேட்டைக்கு எடுத்துச் சென்ற துப்பாக்கி, அவர் படித்த நூல்கள், பயன் படுத்திய சுவர்க் கடிகாரம், மேசைகள், நாற்காலிகள், அவருடைய எழுத்தறை, படுக்கை அறை, சாப்பாட்டு அறை, அவர் மனைவி மக்களின் அறைகள், அவருடைய செயலாளரின் அலுவலகம், குடும்பத்தாரின் வண்ண ஓவியங்கள் முதலியன அவர் வாழ்ந்த காலத்தை நமக்கு நினைவூட்டுகின் றன. காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் போராட்டம் நடத்தி வந்த காலத்தில் அவருக்கு அனுப்பிய — காந்திஜி எழுதிய — 'இந்திய சுயாட்சி' (Indian Home Rule) என்ற சிறு நூலும் அங்கு உள்ளது. டால்ஸ் டாய் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய பல மொழிகள் பயின்றவர். உலகின் பல பாகங்களிலிருந்தும் 26 மொழிகளில் அவருக்குக் கடிதங்கள் வருவதுண்டாம்.

டால்ஸ்டாய்க்கு வன்முறைப் புரட்சி யில் நம்பிக்கை இல்லை. ஆனால் மக்களின் அவல நிலையை வெளிப்படுத்தி ஒரு வகையில் ரஷ்யப் புரட்சிக்கான விடி வெள்ளியாகத் திகழ்ந்தவர் அவர். காந்தியடிகளுக்கு ஒத் துழையாமை இயக்கத்தின் மூலக்கருத்தைத் தந்தவரும் டால்ஸ்டாய் என்றால் அதில் தவறில்லை. ''தீமையை (வெள்ளை ஆதிக் கத்தை) வன்முறையில் எதிர்க்க வேண்டாம். ஆனால் அவர்களுடைய நிர்வாகம், நீதி மன் றம், வரிவசூல், ராணுவம் முதலிய தீமை களுடன் நீங்கள் ஒத்துழைக்காதீர்கள். அவற் றில் பங்கேற்காதீர்கள்'' என்று எழுதினார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் உருவாக் கிய பண்ணைக்கு டால்ஸ்டாய் பண்ணை என்று பெயர் சூட்டினார் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இரண்டாவது உலகப் போரின் போது ஹிட்லரின் படை ஒன்று டால்ஸ்டாய் வாழ்ந்த மாளிகையைக் கைப்பற்றி அதில் வசிக்கத் தொடங்கியது. ஆனால் அதற்கு முன்னரே அங்கிருந்த காட்சிப் பொருள்கள் சைபீரியாவுக்கு மாற்றப்பட்டு விட்டன.

கடைசியாக அந்தப் பண்ணையின் ஒரு பள்ளத்தாக்கின் ஓரத்திலிருந்த அவருடைய கல்லறையைக் காணச் சென்றோம். ரஷ்ய நாட்டுப் பிரபுக்களின் கல்லறைகள் பல பளிங்குக் கற்களால் உருவாக்கப்பட்டவை. மிகச் சிறந்த சிற்பியரை வரவழைத்து உற் றார் உறவினர் பலர் கதறி அழுவது போன்ற சிற்பங்களை அந்தக் கல்லறைகளில் செதுக் கச் செய்திருப்பார்கள். அந்த நாட்டுச் சிற்பக் கலை வளர்ச்சியில் அதன் கல்லறைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. இன்று ரஷ்யாவில் பல காட்சி சாலைகளில் உள்ள அந்தக் கல்லறைப் பளிங்குக் கற்களே சிறந்த கலைச் செல்வங் களாக விளங்குகின்றன. அப்படிப்பட்ட தொரு பளிங்குக் கல்லறையை எதிர்பார்த்து நான் அங்கு சென்றேன்.

என்ன ஏமாற்றம்! பரம ஏழையான குடி மகன் ஒருவனின் மண் மேட்டுக் கல்லறை தான் அங்கே இருந்தது. அவரது புதை குழியின் மீது பசும் புல்லும் கொடிகளும் அடர்ந்த சின்னஞ் சிறு மண் மேடு தென் பட்டது. 'மனிதனுக்குத் தேவை பெரும் பண்ணைகளல்ல; ஆறடி நிலந்தான்' என்று அவர் ஒரு சிறு கதையில் எழுதியிருந்தார். அதை அவர் செயலில் மெய்ப்பித்துக் காட்டி விட்டார்.

அருகில் நின்ற ஒரு பலகையில் அவரது உயிலில் இருந்து சில வரிகள் எழுதப்பட் டிருந்தன. மொழியைக் கேட்டேன்.

''என் எழுத்து முழுவதும் மக்களுக்குச் சொந்தமானது. என் மரணத்துக்குப் பிறகு எனக்கு எந்த விதமான சடங்குகளும் செய் யக் கூடாது. எளிய முறையில் என் சடலம் (இடத்தைக் குறிப்பிட்டு) அங்கே புதைக் கப்பட வேண்டும்.''

அவர் குறிப்பிட்ட இடத்தில் அவர் குறிப்பிட்ட படியே மீளா நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார் டால்ஸ்டாய். ஆனால் அவ ரால் விழிப்பூட்டப்பெற்ற உலகம் ஒரு புதிய

மனைவி: அவசரமா என் ஃபிரண்ட் சோமு வைப் பார்க்கப் போக வேண்டியிருக்குன்னு என்னிடம் சொல்லிவிட்டு கோல்மால் சினி மாவுக்குப் போனீங்களாமே.....?
கணவன்: நான் அவன் வீட்டுக்குப் போனா அவன் கோல்மால் போயிருக்கிறதா அவன் மனைவி சொன்னா.... தியேட்டருக்குள் போய் அவனைப் பார்த்துவிட்டு அப்படியே சினிமா வும் பார்த்துவிட்டு வந்தேன்!''

-உ. ராஜாஜி



CARAVAN FROM VACCARES

பிரெஞ்சு மலைப்பகுதியான ப்ராவின்ஸில், ஒரு மலை மேலிருந்து காரிலுள்ள ஒரு மனிதன், தன் தொலைநோக்கிக் கருவியால், கீழேயுள்ள சாலையில் ஒரு காரவானை இழுத்து வரும் காரையும், அதை ஓட்டி வருபவர்களான ஜிப்ஸிக்களையும் காண்கிறான். காரவானுக்குள் ஒரு மனிதன் ஒளிந்து வைக்கப்பட்டிருக்கிறான். மலைமேலுள்ள அம்மனிதன், அவர்களை நோக்கிப் புறப்படும் போது வேறு ஒரு மனிதன் அவனைச் சுட்டுக் கொன்று அருகிலுள்ள ஒரு குகையினுள் தள்ளி விட்டு, கொல்லப்பட்ட மனிதனின் காரை எடுத்துக் கொண்டு ஜிப்ஸிக்களைப் பின் தொடர்கிறான். இதன் பிறகு பல மயிர்க் கூச்செறியும் சம்பவங்கள் நிகழ்கின்றன.

ஜிப்ஸிக் கூடாரங்கள் சேதமாக்கப்படுகின்றன. ஒரு கிராமமே எரிக்கப்படுகிறது. சூரிய உஷ்ணத்தினால் எரிபொருளைச் சுலபமாக அடைய வழி கண்டுபிடித்த ஒரு விஞ்ஞானியைச்சிறைப்படுத்தி, எவர் அந்த ஆராய்ச்சிக்கு அதிக விலை கொடுக்கிறார்களோ அவருக்கு விற்க முயற்சி செய்யப்படுகிறது. விமானத்தின் வெளியே தொங்கும் கயிற்றேணியில் பயங்கரப்போர் நிகழ்கிறது.

இப்படிப் பல சுவாரஸ்யமான சம்பவங்களைக் கொண்டுள்ள அலிஸ்டர் மக்ளீனின் கதை மற்றுமொரு திரைக்காவியமாகியுள்ளது. பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏவிஎம் ராஜேஸ்வரியில் வெளியிட்டுள்ளது. —டி. எம். ஆர்.



சமுதாயக் கண்ணோட்டத்தையே பெற்றுவிட்டது: ''சொத்து, சுகம், வீடு, வாசல், பண்ணை, பங்களா, பணத்தைப் பெருக்கிக் கொள்ளப் பேராசைப் பட்டுப் பேய்களாக அலையாதீர்கள். மக்களைச் சுரண்டியும் ஏமாற்றியும், அடிமைப்படுத்தியும் வாழ முனையாதீர்கள். மனிதனிடம் அன்பு செலுத்துங்கள், அவனிடம் இரக்கப்படுங்கள்; கருணை காட்டுங்கள். அவனை வாழவிட்டு நீங்களும் வாழுங்கள்'' — அவர் கல்லறையிலிருந்து வெளிப்பட்ட குரல் என் காதுகளில் நினைக்கும்போதெல்லாம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

நீண்ட பெருமூச்சு விட்டபடி சிறிது நேரம் அங்கு நின்றுவிட்டுக் கனத்த இதயத்தோடு நான் அங்கிருந்து திரும்பினேன். அவர் காலத்து ரஷ்யா அடியோடு மாற்றம் பெற்று விட்டது. வாழ்க்கையில் மனிதனுக்குப் பொருளைப் பற்றிய ஏக்கம், கவலை, பசி, பட்டினி, வறுமை, எதிர் காலம் பற்றிய அச்சம் யாவும் அங்கே தவிடு பொடியாகி விட்டன.

கார் படு—வேகத்தில் அங்கிருந்து திரும்பிப் பறந்தது. மாலையில் லாரிகள் கூட்டமில்லை. ஐந்து மணிக்கெல்லாம் மாஸ்கோவுக்குத் திரும்பினேன். என்னை வழியனுப்புவதற்கு ஓட்டலுக்கு மணி வர்மாவும் பூர்ணம் சோமசுந்தரமும் வந்திருந்தார்கள். அவர்களிடமும் நண்பர்கள் ஃபூர்னிகா, மெரினா ஆகியோரிடமும் விடை பெற்றுக் கொண்டு அன்பர் மாலிகோவுடன் மாஸ்கோவின் விமான நிலையத்துக்குக் கிளம்பினேன். மராத்தி எழுத்தாளர் கர்ஹத்கர் மட்டிலும் என்னுடன் திரும்பினார்.

நள்ளிரவில் மாஸ்கோவிலிருந்து புறப்பட்ட ஏரோஃப்ளோட் ரஷ்ய விமானம் ஜூலை 5ந் தேதி காலை டில்லி பாலம் நிலையத்தில் வந்து இறங்கியது. நிலையத்தில் எங்களை வரவேற்பதற்காக 'சோவியத் நாடு' பரிசுக் குழுவின் அப்போதைய துணைத் தலைவர் திரு கிர்லெனேவ் வந்திருந்தார். மாலை விமானத்தில்தான் என்னால் சென்னைக்குச் செல்ல முடியும். ஆகவே ஓட்டல் 'ஜன்பத்தில்' எனக்கு அறை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

விமான நிலையத்திலிருந்து ஓட்டலுக்குச் சென்றபோது டில்லி நகரத்துத் தெருக்களைப் பார்த்துக் கொண்டு சென்றேன். ஓட்டல் மாடியிலிருந்தும் நகரத்தைக் கண்ணோட்டம் விட்டேன். ஏனென்றால் அது இந்தியாவின் தலைநகரம் மட்டிலுமல்ல. அதுவே ஒரு சின்னஞ் சிறு இந்தியா.

மரங்கடர்ந்த அழகான சாலைகள், பெரிய பெரிய மாளிகைகள்; தெருக்களில் இழையும் புத்தம் புதுக் கார்கள்; கடைகளில் கொட்டிக் கிடக்கும் ஆடம்பரச் சாமான்களின் குவியல்கள்; கூடவே சாக்கடைகளுக்கு மத்தியில் 'பஸ்தி'கள்; குப்பங்கள், கூரை யில்லாக் குடிசைகள்; நடைபாதைகளில் சுருண்டு கிடக்கும் மனிதர்கள்; நோயாளிகள்; பிச்சைக்காரர்கள்; வேலை தேடி அலையும் இளைஞர் கூட்டம்.

மனித உரிமைகள் அங்கே பறிக்கப்படுவதாக இங்குள்ள சிலர் பழிக்கும் ஒரு நாட்டிலிருந்து நான் திரும்பி யிருந்தேன். ''மனித உரிமை என்றால் என்ன?'' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். உழைப்பதற்கும் உண்பதற்கும் உடுத்துவதற்கும் ஒருவருடைய உடல் — உள்ளம் — ஆன்மாவை வளர்த்துக் கொள்வதற்கும் அவரவர் சமயக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்து வழிபடுவதற்கும் வாய்ப்புக்களும் உரிமைகளும் கிடைத்தால் அவை மனித உரிமைகள் இல்லையா? அரசியல் சுதந்திரம் கிடைத்து 32 ஆண்டுகள் ஆன பிறகும் எத்தனை சதவிகிதம் மக்களுக்கு இந்த நாட்டில் அந்த உரிமைகள் கிடைத்துள்ளன? — என் தாய் நாட்டு மண்ணில் நான் காலடி எடுத்து வைத்தபோது இந்தக் கேள்விதான் என்னுள் விசுவரூபம் எடுத்தது.

முற்றும்.

அம்மன் வாகனம்

மாரி அறவாழி



அலுவலகத்தைத் திறந்து வைத்தவுடன் பாப்பம்மாக் கிழவிதான் முதலில் வந்து நிற்பாள்.

''இதையெல்லாம் வெச்சிக்கிட்டுப் பெரிய நோட்டாக் கொடுங்க....'' என்று கசங்கி, மடங்கி, வியர்வைக் கவிச்சை யடிக்கும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் நோட்டுக்களையும் சில்லறைகளையும் நீட்டுவாள்.

போஸ்ட் மாஸ்டர் பூபதிக்குச் சங்கடமாக இருக்கும்.

இப்படிச் சில்லறைகளை யெல்லாம் மாற்றி நோட்டாக வாங்கிக் கொண்டு போய் என்ன செய்கிறாள்?

பாப்பம்மாக் கிழவிக்குத் தாராளமாக அறுபதுக்கு மேலிருக்கும் வயது.

தும்பைப் பூப்போல வெளுத்த தலை. ஆனால் சதைப் பிடிப்பில்லாமல் உயரமாக விசைக் குச்சிபோல் நன்றாக நடமாடிக்கொண்டிருக்கிறாள்.

நோய் நொடி என்று ஒரு நாள் படுத்தது இல்லை.

சரியான அந்தக் காலத்துக் கட்டை! அவளுடைய வீடு தபால் நிலையம் இருக்கும் வீதியின் கடைசியில் இருக்கிறது.

சின்னஞ் சிறிய, கீற்று வேய்ந்த குடிசை தான். ஆனால் எப்பொழுது பார்த்தாலும் பளிச்சென்று சுத்தமாக இருக்கும்.

வெள்ளிக் கிழமை, நல்ல நாட்களில் வாசலில் கோலமும், வீட்டிலும் திண்ணையிலும் பசுமாட்டுச் சாணத்தின் மெழுகலும் இருக்கும். அவளும் விடியற்காலையில் எழுந்து குளித்து, நெற்றிக்குப் பட்டையாக இட்டுக் கொண்டு சிவப்பழமாக இருப்பாள்.

அந்தத் தள்ளாத வயதில் நல்ல நடமாட்டம் இருப்பதே அபூர்வம்.

போதாததற்கு வீட்டுவேலையையும் செய்து கொண்டு அவ்வளவு சுத்தமாக எப்படி இருக்க முடிகிறது அவளால்?

ஒருவேளை உதவிக்கு யாராவது பேரன் பேத்தி, தூரத்து உறவு என்று இருக்கிறார்களோ?

மாரிமுத்துவிடம் விசாரித்தார் பூபதி.

''ஒருத்தரும் இல்லீங்க. ஒண்டிப் பிசாசு'' என்று சொன்னான் அவன்.

பாப்பம்மாக் கிழவியை அவர் அவ்வப்போது டவுனில் கடைத் தெருப் பக்கம் பார்ப்பதுண்டு. அகலமான பெரிய தட்டுக் கூடையில் சீசன்களுக்குத் தகுந்த மாதிரி வாழைப் பழமோ மாம்பழமோ சீத்தாப் பழமோ வைத்து விற்றுக் கொண்டிருப்பாள்.

ஆனால் அந்த வியாபாரத்தில் அப்படி என்ன லாபம் கிடைத்துவிட முடியும்?

தினம் தவறாமல் இருபது முப்பதுக்குச் சில்லறை கொண்டு வந்து நோட்டு மாற்றிக் கொண்டு போகிறாளே, அது எப்படி?

பழ வியாபாரம் மட்டுமல்ல, வட்டி வியாபாரமும் செய்கிறாள் கிழவி. அநியாய வட்டி. நூற்றுக்கு மாதம் பத்து ரூபாய். அதுவும் வசதியானவர்களுக்குத்தான் கடன் கொடுப்பாளாம். ஏழைகளும், வசதி இல்லாதவர்களும் கேட்டால், 'வட்டி அதிகம், உங்களுக்குக் கட்டுபடியாகாது' என்று சொல்லி மறுத்து விடுவாளாம்.

ஊரில் பராபரியாக இப்படிப் பேசிக் கொண்டார்கள். பூபதியின் சந்தேகத்துக்கு விளக்கம் அளிப்பதாக இருந்தது அது.

ஒரு நாள் மத்தியானம். நல்ல உச்சி வெய்யில்.

தனியாக நின்று கொண்டிருந்தாள் பாப்பம்மாக் கிழவி.

அவ்வழியே வந்த பூபதியைப் பார்த்து வழக்கம் போல் ஒரு கும்பிடு போட்டாள். விசாரித்தார் அவர்.

''என்ன பெரியம்மா, இந்த வெயில்லே இங்கே நிக்கறீங்க?''

சுரத்தில்லாத குரலில் பதிலளித்தாள் அவள்.

''டவுனுக்குப் போகணுங்க. காருக்குக் காத்துக்கிட்டிருக்கேன்...''

அவள் பஸ் ஏறியதைப் பார்த்ததில்லை அவர்.

''நடந்து போறதுதானே வழக்கம் உங்களுக்கு! இன்றைக்குப் புதிதாக என்ன?''

''ஒடம்பு சரியில்லேங்க. தர்ம ஆஸ்பத்திரிக்குப் போகணும்...''

''உடம்புக்கு என்ன?''

''வயித்தோட்டங்க.... நேத்திலிருந்து.''

''கண்டதை யெல்லாம் சாப்பிட்டால் அப்படித்தான். வயசு ஆகிவிட்டதல்லவா! என்ன சாப்பிட்டீங்க நேத்தைக்கு?''

''குச்சி வள்ளிக் கிழங்கு! சல்லீசாக் கிடைச்சுது. அரைக் கிலோ வாங்கி வந்து அவிச்சுச் சாப்பிட்டேன். திமுர்னு ஒத்துக்காமப் போயிட்டது...''

''அதை யெல்லாம் ஏன் சாப்பிடுகிறீர்கள்?''

''ஏழை பாழைங்க பின்ன என்ன பண்றது? தினமும் அரிசிச் சோறு ச்சாப்பிட முடியுங்களா?''

''நீங்களா ஏழை? நான் தவறாமல் சில்லறையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு நோட்டாக வாங்கிக் கொண்டு போகிறீங்களே....''

''அதனாலே அதெல்லாம் என் பணம் ஆயிடுங்களா?''

''பின்னே யாருடையது? வயதான காலத்திலே பணத்தைச் சேர்த்து வைத்து என்ன செய்யப் போறீங்க? வயத்துக்கு வஞ்சனை பண்ணாமல் சாப்பிடுவதுதானே?....''

''நீங்க கூடத்தான் ஆயிரக் கணக்கிலே ரூபா வைச்சிருக்கிறீங்க. அதனாலே அதெல்லாம் உங்களுக்குச் சொந்தமாயிடுமா?....''

திகைத்தார் பூபதி.

கிழவி கெட்டிக்காரி மட்டுமல்ல, புத்திசாலியும் கூட என்று நினைத்துக் கொண்டார்.

ஆடி மாதத்தில் அந்த ஊரில் காளியம்மன் திருவிழா.

பத்துக் கிராமங்களுக்குப் பொதுவான பண்டிகை.

தேரோட்டம், வாண வேடிக்கை, தீக்குழி மிதிப்பது, அலகு குத்துவது எல்லாம் பிரமாதமாக இருக்கும்.

வழக்கப்படி பூபதியிடம் நன்கொடைக்கு வந்தனர் கோயில் சம்பந்தப்பட்டவர்கள்.

பத்து ரூபாய் கொடுத்தார் அவர்.

''வருஷா வருஷம் பணம் கொடுக்கிறீங்களே தவிர, பண்டிகையை வந்து பார்க்கிறதில்லே. நீங்க இந்தத் தடவை அவசியம் வரவேணும். மத்த வருஷங்களை யெல்லாம் விட இந்த முறை பிரமாதமாக இருக்கும்.''

நோட்டுப் புத்தகத்தில் வரவு வைத்துக் கொண்டே சொன்னார் அறங்காவலர்.


சிரிப்புடன் கேட்டார் பூபதி.

''இந்த வருடம் அப்படி என்ன சிறப்பு?''

''என்ன இப்படிக் கேட்டுட்டீங்க? வெள்ளிக் குதிரை வாகனத்திலே அம்மன் பெரமனை இருக்குதுங்க...''

''இது என்ன புதிது? எல்லா ஊரிலேயும் நடக்கிறதுதானே?''

''ஆனா மத்த ஊரிலே குதிரையை மரக் கட்டையாலே செய்து பெயிண்ட் பூசி



யிருப்பாங்க. நம்ம ஊர்க் குதிரை வாகனம் அசல் வெள்ளியாலே ஆனதுங்க...''

பூபதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''வெள்ளியாலா? குதிரை முழுக்க வெள்ளியினுலே செய்ததுவா?''

''ஆமாங்க! எல்லாம் வெள்ளிதான்!''

''ஆயிரக் கணக்கிலே செலவாகியிருக்குமே! அவ்வளவு பணம் இருக்கிறதா இந்த ஊர் கோயில் நிதியிலே?''

''கோயில் நிதியிலே ஏதுங்க? எல்லாம் பாப்பம்மாக் கிழவியோட கைங்கர்யம் தான்!''

அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக இருந்தது பூபதிக்கு.

''பாப்பம்மாக் கிழவி செய்து கொடுத்ததா? உண்மையாகவா?''

''உண்மைதாங்க. அவ செய்து கொடுத்ததுதான்! இருபது வருஷத்துக்கு முன்னுலே மத்த ஊர்லே உள்ளது மாதிரி இங்கேயும் மரக் கட்டையினுல் ஆன குதிரை வாகனம் தாங்க இருந்தது. ஒரு நாள் அது திருட்டுப் போய்விட்டது. அதற்குப் பிறகு நாங்களே கூட அதுமாதிரி இன்னென்று செய்யாமல் விட்டு விட்டோம். ஆனு பாப்பம்மாக் கிழவிக்கு அது பெரிய குறையாகப் பட்டது போல இருக்குது. ஒரு நாள் எல்லார் முன்னுலும் வந்து, தானே ஒரு வாகனம், அதுவும் வெள்ளியிலேயே செய்து தருவதாகச் சொன்னுள். நாங்க அதை நம்பல்லே. கிழவிக்கு ஏதோ மூளைக் கோளாறு வந்து உளறுகிறுள் என்று நினைத்தோம். ஆனு அது உளறல் அல்ல, உண்மைதான் என்கிறதை இந்த வருஷம் நிரூபித்துக் காட்டி விட்டாள்.''

வியப்பின் மிகுதியால் பூபதிக்கு வாய் அடைத்துப் போய் விட்டது.

குச்சி வள்ளிக் கிழங்கு அவித்துச் சாப்பிடும் பிச்சைக்காரக் கிழவி, வெள்ளியில் குதிரை வாகனம் செய்து தருவதாவது!

பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆசிரியர்: பள்ளிக் கூடத்திலே படிக்கிறப்போ எல்லா பாடத்திலேயும் ஜீரோ வாங்கிட்டு இருந்தே, இப்ப என்ன பண்றே?

அவன்: பல்பு தயார் பண்ணுற கம்பெனி வைச்சிக்கிட்டிருக்கேன்.

ஆசிரியர்: பலே! என்னனென்ன பல்புகள் தயார் பண்றே?

அவன்: வெறும் ஜீரோவாட்ஸ் பல்பு மட்டும் தான் சார் தயார் பண்ணுறேம்.

—ஆர். கோபாலகிருஷ்ணன்



கடை வீதியில் பழம் விற்றுக் கொண்டிருந்த பாப்பம்மாக் கிழவியைச் சந்திக்க நேர்ந்தது பூபதிக்கு.

நிழலுக்கு மரத்தடியில் நின்று கொண்டிருந்தாள் அவள்.

அந்த மரத்தடியில் இருந்த சைக்கிள் கடையில் 'பஞ்சர்' போடப் போனுர் பூபதி.

''பெரியம்மா! உங்களை இத்தனை நாளும் என்னவோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்க பெரிய ஆளு என்று இப்போது தான் தெரிகிறது....''

வியர்வையைத் துடைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தாள் அவள்.

''ஓ! நீங்களா...'' என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கேட்டாள்

''என்ன சொல்றீங்க?''

''காளியம்மனுக்கு வெள்ளியாலே குதிரை வாகனம் செய்து கொடுத்திருக்கிறீர்களாமே நீங்கள்?''

''ஆமாங்க! ஏதோ என்னுலே முடிஞ்சது....''

''அடேயப்பா! எவ்வளவு பெரிய காரியம் தெரியுமா அது? அவ்வளவு பணம் உங்களிடம் எப்படி இருந்தது?''

அவள் ஒரு விநாடி தாமதித்தாள்.

''என் பணமா? என்கிட்டே ஏதுங்க பணம்? எல்லாம் அவ பணம்தான்! வட்டியோடு திருப்பிக் கொடுத்திருக்கிறேன், அவ்வளவுதான்!''

பூபதி மெல்லச் சிரித்தார்.

''கடவுளிடம் கூட வட்டி வியாபாரமா?''

''பின்னே! என்கிட்டே கடன் வாங்கினவங்க எனக்கு ஒழுங்கா வட்டி கொடுத்திடுறுங்க. அதே மாதிரி அம்மன் கிட்டே பட்ட கடனுக்கு நானும் வட்டி கொடுத்துத் தானே ஆகணும்?''

பூபதிக்கு அவள் தத்துவம் புரியவில்லே.

''புரியும்படியாகச் சொல்லுங்கள்'' என்ருர்.

சிறிய மௌனத்துக்குப் பின் அவள் பேசினுள்.

''இருபது வருஷத்துக்கு முன்னுலே அம்மன் கோயில் குதிரை வாகனம் காணுமல் போயிருச்சு. அப்ப எங்க வீட்டுக்காரர் கோவிலிலே காவல்காரராக இருந்தாரு. திருடன் வந்து தன்னை அடிச்சுப் போட்டுட்டு வாகனத்தை எடுத்துக்கிட்டுப் போயிட்டான்னு அவர் சொன்னதை யெல்லாம் நம்பிட்டாங்க. ஆனு நான் நம்பல்லே. என் வீட்டுக்காரரைப் பத்தி எனக்குத் தெரியும். குடி, கூத்தி, சூதாட்டம் எல்லாம் உண்டு. காசுக்கு ஆசைப்பட்டு வெளியூர்க்காரங்க யாருக்கோ அதை வித்துட்டார்னு எனக்குத் தோணிச்சு....என் சந்தேகத்தை உறுதிப் படுத்தற மாதிரி பண்டிகை முடிஞ்ச இரண்டாவது நாளே என் வீட்டுக்காரரு செத்துட்டாரு. அதைத் தொடர்ந்தாப்பலே என் பெரிய மவளை அவ புருசன் அடிச்சுக் கொன்னுட்டான். சின்ன மவளை அம்மை வந்து வாரீட்டுப் போயிடுச்சு. எல்லாத்துக்கும் மேலே என்னோட ஒரே அருமை மகனுக்குப் பைத்தியம் பிடிச்சிட்டது. அம்மன் பொருளைத் திருடி வித்ததுக்கு

இதெல்லாம் தண்டனை என்கிறது நல்லாத் தெரிஞ்சுட்டது எனக்கு.... புருசன் செய்த குத்தத்துக்குப் பரிகாரம் செய்ய வேன்னு எனக்கும் நல்ல சாவு வராதுன்னு தோணுச்சு. அதனுலே என் புருசன் திருடி வித்த குதிரை வாகனத்துக்கு ஈடு செய்யற வகையிலே அதே மாதிரியான ஒரு வாகனம், அதுவும் வெள்ளியிலே செய்து அம்மனுக்குப் படைச்சிடறேன்னு வேண்டிக்கிட்டேன். பதினெட்டு வருசத்துக்குப் பிறகு அது பூர்த்தியாகி யிருக்குது... வெள்ளியிலே குதிரை வாகனம் செய்ய வேணும்கிறதுக்காகத்தான் இத்தனை காலமும் மொட்டை மரமா உலாத்திக்கிட்டிருந்தேன். வயித்தைக் கட்டி, வாயைக் கட்டி, பட்டினி கிடந்தேன். தள்ளாத உடம்போடு தெருத் தெருவா அலேஞ்சு பழம் வித்தேன். அதிலே வந்த பணம் எனக்குச் சொந்தமில்லேன்னு நினைச்சு வட்டிக்கு விட்டு வளர்த்தேன். அநியாய வட்டிதான். ஆனு அதனுலே ஏழை பாழை பாதிக்கப்படலே. அதோடு அது எனக்காகச் சேர்த்ததில்லையே....! இனிமேல் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். அம்மன் கிட்டப் பட்ட கடனை வட்டியும் முதலுமாத் தீர்த்தாச்சு என்கிற நிம்மதியோடு, இருக்கிற கொஞ்ச நாளையும் கழிச்சுடுவேன்...''

கிழவியின் வாய் மடை திறந்த வெள்ளமாய்ப் பெருக,கண்கள் அருவியாய் வழிந்தன.

பண்டிகையின் முக்கியமான நாள். பூபதி தவருமல் போய் எல்லாவற்றிலும் கலந்து கொண்டார்.

பாப்பம்மாக் கிழவி செய்து கொடுத்த குதிரை வாகனத்தில் அன்று அம்மன் மெரமனை.

ஊரே அல்லோலகல்லோலப்பட்டது.

சுற்று வட்டாரத்துக் கிராம மக்களெல்லாம் காலையிலிருந்தே சரம், சரமாக வந்து குழுமி விட்டிருந்தனர்.

இரவு பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டது மெரமனை.

தகத் தகவென்று ஜொலிக்கும் வெள்ளிக் குதிரை மேல் அம்மன் ஆரோகணித்து வரும் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்து எல்லோரும் மெய் மறந்து நின்றனர்.

ஆனல் ஒரே ஒரு ஜீவன் மட்டும் அதைப் பார்க்க வரவில்லை. வீட்டை விட்டுப் புறப்பட்ட பரபரப்பில் வாசற்படி தடுக்கி விழுந்த நிலையில் அதன் கடைசி மூச்சு அமைதியாகப் பிரிந்து கொண்டிருந்தது.

மறுநாள் காலை வழக்கம்போல் அலுவலகத்தைத் திறந்து வைத்தார் போஸ்ட் மாஸ்டர் பூபதி.

மணி ஆர்டர்களையும், பார்சல்களையும் போஸ்ட் மேனுக்குப் போடும் அவசரத்திலும் ஒரு கணம் நிதானித்தார். வருத்தப்பட்டார்.

''இதையெல்லாம் வெச்சுக்கிட்டுப் பெரிய தோட்டாக் கொடுங்க...''

என்று இனிமேல் யார் வந்து கேட்கப் போகிருர்கள் அவரை?

சிரிப்பு மழை!

ஒருவன்: யாரய்யா அது தியேட்டரில் குடையைப் பிடிச்சிகிட்டுப் படம் பார்க்கிறது? மடக்கச் சொல்லுய்யா!

மற்றவன் : சொன்னேனுங்க!

ஒருவன் : என்ன சொல்ருன்?

மற்றவன்: படத்திலே மழை பெய்யுதுங்கிறன்!

—ஆர். கோபாலகிருஷ்ணன்

●

இளம் எழுத்தாளர் ஒருவர் பிரபல கவிஞர் 'பூஜின் ஃபீல்டு'க்குத் தாம் எழுதிய ''நான் ஏன் வாழ்கிறேன்?'' என்ற கவிதையை அனுப்பினர். அதற்கு பூஜின் இப்படி பதில் எழுதி அனுப்பினர் தமாஷாக: ''உங்கள் கவிதையைத் தபாலில் அனுப்பியதால்!''

-சம்பத் குமாரி

●

அவன் : ''இவ்வளவு சிறிய வாரப் பத்திரிகையைப் போய் இரண்டு கைகளாலும் தூக்கிகிட்டு வர்றியே... அவ்வளவு கனமா கனக்குது..?''

இவன் : ''உனக்கென்ன தெரியும்... முன் பக்கத்தில் உதிரிமணி... பின்பக்கத்தில் பக்கோடா காதர் போட்டோவை அல்லவா போட்டிருக்காங்க...!''


●

கடைக்காரர் : ''இந்தப் பிரிஸ்கிருப்ஷனை உங்களுக்குக் கொடுத்த டாக்டரின் பெயர் டெ. சீதாராமனு...?''

அவன் : ''ஆமாம்! ஏங்க..?''

கடைக்காரர் : ''மனுஷன் பழக்க தோஷத்தில் மருந்தின் பெயருக்கும் பதிலா ஜோக்தான் எழுதியிருக்கார் இதில்!''

—உ. ராஜாஜி



மீரா தந்தையைக் காண இந்தியாவி லிருந்து அமெரிக்கா போய்ச் சேர்ந்தபோது— டாக்டர் சேகரின் படுக்கையில் ஒரு புறத்தில் அம்மா சுபத்ராவும் மறு பக்கத்தில் சேலை கட்டிய ஓர் அமெரிக்கப் பெண்ணும் அவள் மகள் போன்ற இளம் பெண்ணும் உட்கார்ந்து கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தார்கள்.

மீராவைப் பார்ப்பதற்காகவே உயிரைப் பிடித்து வைத்திருந்தவர் போல அவளைப் பார்த்ததும் கடைசி மூச்சை விட்டுவிட்டார் சேகர். அவர் விருப்பப்படி, ஈமச்சடங்குகள் இந்து மத முறைப்படி விரிவாக நடத்தப் பட்டன.

தந்தைக்கு மகள் செய்ய வேண்டிய சடங்கு களை அமெரிக்க இளம் பெண் மேகலாவை வைத்துச் செய்யும்படி புரோகிதரிடம் சுபத்ரா சொன்னதும், மீரா திடுக்கிட்டாள்.

''என்னம்மா இது, அப்பாவுக்கு யாரோ ஒரு பெண்ணை—''

''ஆமா... அவருக்கு மேகலா தான் சடங்கு செய்யணும். அது அவருடைய ஆசை...''

மீராவுக்குப் புரிந்து விட் டது.— அவள் அப்பாவும் ஒரு கோவலன் தான்: அந்த அமெரிக்க மாது மார்கரெட், இன்னொரு மாதவி. மேகலா அவளுடைய மகள் மணி மேகலை....

''அம்மா! நீ மனைவிக்குரிய உரிமை களை விட்டுவிட்டுக் கண்ணகி போல் கணவரை மாதவியிடம் விட்டுவிட்ட வளா யிருக்கலாம். ஆனால் நான் மகளுக்குரிய கடமைகளை விட்டுவிட மாட்டேன்'' என்று பொங்கினாள் மீரா.

''ஷ்... பேசாமலிரு. மேகலா சடங்கு செய்தால்தான் அவருடைய ஆத்மா சாந்தியடையும்.''

''ஏம்மா?''

''ஏன்னா.... நீ....நீ.... அவ ருடைய மகள் இல்லை... அவருடைய மனைவியின் மகள். தெட்'ஸ் ஆல்...''

மீரா இடிவிழுந்தது போல் வாய டைத்துப் போய்த் திகைத்து நின்றாள்.



கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சுபத்ரா இளமையிலிருந்தே ரொம்பத் துறுதுறுப்பு. எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் துடிப்பாள். அவளுக்கு இயற்கையாகவே நடனமாடும் திறமை இருந்தது. பள்ளிக் கூட விழாக்களில் தவறாமல் நாட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வாள்.

'டான்ஸ் கற்றுக் கொள்ளணும்' என்று ஒற்றைக் காலில் நின்ற மகளின் ஆசையைப் பூர்த்தி செய்வதற் காக அவ ளுக்கு சாஸ்திரிய முறைப்படி நாட்டியப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார் விஜய ராகவன்.

தினசரி மாலை நேரங்களில் நட்டுவனார் ராமலிங்கம் பிள்ளையின் நாட்டியப் பள் ளிக்குப் போய்ப் பயிற்சி பெறத் தொடங் கினாள் சுபத்ரா. நட்டுவனாரின் மகனும் அவள் படிக்கிற கல்லூரியிலேயே பி.ஏ. மாணவனா யிருந்தான். அவன் படிப்பிலும் மேடைப் பேச்சிலும் விளையாட்டுக்களிலும் நிறையப் பரிசுகள் வாங்குவான். விடுமுறை நாட்களில் அவள் பிரெஞ்சு மொழி கற்றுக் கொள்ளச் செல்லும் இன்ஸ்டிட்டியூட்டில் அவனும் படித்துக் கொண்டிருந்தான்.

காலப் போக்கில் இருவரும் காதல் வயப் பட்டு விட்டார்கள். நடனப் பாடம் படிக்கப் போன மகள் வேற்று ஜாதிப் பையனுடன் காதல் பாடம் படிக்கும் விஷயம் விஜயராக

வனுக்கு எட்டியதும், அவர் கொதித்து விட்டார்.

'ஒரு லட்சாதிபதியின் அருமை மகள், காளைப் கட்டிப் பிழைக்கிறவனின் மகனைக் காதலிப்பதா? சீ! கேவலம்!....'

குடும்ப கௌரவத்தைப் பாழாக்கிய மகளைச் சுட வேட்டைத் துப்பாக்கியைத் தூக்கி விட்டார் அந்த மானஸ்தர். குறுக்கே விழுந்து தடுத்தாள் பெற்றவள்.

''என்னங்க இது? பெண்ணை வளர்க்க வேண்டிய முறைப்படி வளர்க்காம, காலேஜ் படிப்பு, பிரெஞ்சு கிளாஸ், டான்ஸ் பாடம்னு எல்லா இடத்துக்கும் சுதந்திரமாய்ப் போகிற அளவுக்குச் செல்லம் கொடுத்து நீங்கதான் கெடுத்திட்டீங்க.... அவளுக்கு என்ன தெரியும்? அறியாப் பொண்ணு.... சீக்கிரமாய் ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணத்தை நடத்திடுங்க. எல்லாம் சரியாய்ப் போயிடும்...''

ஆத்திரத்தை விட்டு விட்டு நிதானமாகச் சிந்திக்க ஆரம்பித்தார் விஜய ராகவன்.

''கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்? நம்ம சேகரையே மாப்பிள்ளையாக்கிடுவோம்'' என்று அமெரிக்காவிலிருந்த சேகருக்கு 'அவசரம், உடனே புறப்பட்டு வா' என்று கேபிள் அனுப்பிவிட்டு, திருமண ஏற்பாடுகளில் இறங்கினார் அவர்.

சேகர், அவரிடம் சமையற்காரராக வேலை பார்த்த சந்தானத்தின் மகன். சிறு வயதிலேயே அவனுடைய அறிவையும் படிப்பையும் பார்த்து, அவனுக்குத் தேவையான பண உதவிகள் எல்லாம் செய்து, அமெரிக்காவுக்கும் அனுப்பிப் படிக்க வைத்தார் விஜய ராகவன். மகள் பி. எஸ்ஸி. முடித்ததும் அவனுக்கே அவளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் மனத்துக்குள் திட்டம் போட்டிருந்தது யாருக்குமே தெரியாது. தம் பேச்சை இம்மியும் தட்ட மாட்டான் சேகர் என்பது அவருக்குத்தெரியும்.

போட்டிக்கதை-17

வாழ்க்கையின் அர்த்தங்கள்

'அய்க்கண்'



அமெரிக்காவிலிருந்து சேகர் வந்ததும் விஷயத்தைச் சொல்லி ஒரு சுப முகூர்த்தத்தில் ஜாம் ஜாம் என்றுதிருமணத்தை நடத்தி விட்டார்.

முதல் இரவு அன்று பாலும் பழமுமாக உள்ளே நுழைந்த சுபத்ரா, கண்ணீரும் கம்பலையுமாக, நடந்ததை யெல்லாம் சேகரிடம் சொல்லி விட்டாள்.

அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு சேகர் நிதானமாகச் சொன்னான்:

''சுபத்ரா! உன் நேர்மையையும் சத்தியத்தையும் நான் பாராட்டுகிறேன். உனக்குத் தாலி கட்டியவன் என்ற உரிமையில் உன் உடல்மேல் நான் பாத்தியதை கொண்டாட மாட்டேன். என்னை ஆளாக்கிய உன் அப்பாவுக்கு நான் செய்த நன்றிக் கடனாகத்தான் மறு வார்த்தை பேசாமல் உன்னை ஏற்றுக் கொண்டேன். சுபத்ரா, உன் அப்பா உயிரோடு இருக்கும்வரை, நீதான் என் மனைவி; நான்தான் உன் கணவன்....''

திருமணம் முடிந்ததுமே இருவரையும் அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார் விஜயராகவன். அங்கே சென்ற சில நாட்களில், சுபத்ரா வாந்தியும் குமட்டலுமாய், கரு உயிர்த்திருப்பதை உணர்ந்தாள்.

அன்று மாலை வீட்டுக்கு வந்ததும் சேகர் சுபத்ராவிடம் கேட்டார்: ''என்ன சுபா, இன்னிக்கு டாக்டர் மார்க்கரெட்டிடம் போயிருந்தாயா?''

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அவருக்கு எப்படித் தெரிந்தது?'

''சுபா! என்ன ஆச்சரியப்படறே? நீ யார் என்று அவளுக்குத் தெரியும். அதுதான் உடனே எனக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னாள்.... ரொம்ப ஸ்வீட் நியூஸான இதை நீ என்னிடம் சொல்லுவாய் என்று நான் கணவன் என்ற முறையில் எதிர்பார்க்க உரிமை இல்லைதான். ஆனாலும் அபார்ஷன் என்று முடிவு செய்த பிறகு, டாக்டர் என்ற முறையிலாவது என்னிடம் நீ இதைச் சொல்லியிருக்கலாமே?'' என்று அவன் கேட்டபோது பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்து நின்றாள் அவள்.

''சுபா! நான் இப்போ சொல்லப் போற யோசனை, ஒரு டாக்டர் என்ற முறையில் அல்ல; உன்னுடைய அங்கீகரிக்கப்பட்ட கணவன் என்ற ஹோதாவில் சொல்கிறேன். உன் காதல் சின்னத்தை அபார்ஷன் செய்து அழிக்க வேண்டாம். நீ ஒருத்தனுக்கு மனைவியாகத்தான் வாழக் கொடுத்து வைக்கலே. ஒரு குழந்தைக்குத் தாயாகவாவது வாழலாமே. அந்தக் குழந்தையாவது, உன் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுக்கட்டும்...''

சுபத்ரா திடுக்கிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''எஸ் சுபா! பயப்படாதே! உன் குழந்தை தகப்பன் இல்லாத குழந்தையாகப் போய் விடாது. நம் இருவரையும் பொறுத்தவரையில்-அது என் மனைவியின் குழந்தை; ஆனால் ஊர் உலகத்தைப் பொறுத்த வரையில் அது டாக்டர் சேகரின் குழந்தை.... அந்தக் குழந்தையின் கௌரவத்துக்கும் 'சோஷல் செக்யூரிட்டி'க்கும் நான்பொறுப்பு'' என்று அழுத்தமாகச் சொன்னான் அவன்.

பிரசவ காலம் நெருங்கியதும் சுபத்ராவை டாக்டர் மார்கரெட்டின் நர்ஸிங் ஹோமிலேயே அட்மிட் செய்தான் சேகர்.

மார்கரெட்டின் நர்ஸிங் ஹோமில்தான் சுபத்ராவுக்கு ஒரு முக்கியமான ரகசியம் தெரிய வந்தது.

குழந்தை பிறந்த மறு நாள், அவள் படுக்கையில் பாதித் தூக்கத்தில் இருந்தபோது டியூட்டியில் இருந்த இரண்டு நர்ஸ்கள் மிகவும் ஜாக்கிரதையோடு சுபத்ராவுக்குப் புரியாது என்ற ஒநம்பிக்கையில் பிரெஞ்சு மொழியில் பேசிக் கொண்டது அவளுக்குத் தெளிவாகக் கேட்டது.

''நம் டாக்டர் மார்கரெட், உண்மையில் இந்த சுபத்ரா இடத்தில் இருக்க வேண்டியவள்....''

''என்ன சொல்கிறாய்?''

''டாக்டர் சேகரின் மனைவியாக வேண்டியவள்தான் நம் டாக்டர். இருவரும் திருமணம் செய்துகொள்ள ஏற்பாடு கூடச் செய்துவிட்டார்கள். ஆனால் திடீரென்று இந்தியா சென்ற டாக்டர் சேகர் அங்கே இந்தச் சுபத்ராவைத் திருமணம் செய்து கொண்டு வந்து விட்டார். பாவம், மார்கரெட்!....'' என்று அநுதாபப்பட்டாள் அந்த நர்ஸ்.

நர்ஸிங் ஹோமிலிருந்து டிஸ்சார்ஜ் ஆன சுபத்ராவையும் குழந்தையையும் அழைத்துப் போக வந்தான் சேகர். மார்கரெட்டின் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி சொன்னாள் சுபத்ரா.

''டாக்டர்! உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. எனக்குப் பிரசவம் பார்த்த உங்களுக்கு, நான் என் சொந்த ஹோதாவில் மெடிகல் ஃபீஸ் கொடுக்க வேண்டாமா?'' என்றதும் ''நோ....நோ.... அதெல்லாம் வேண்டாம்'' என்று மறுத்தாள் மார்கரெட்.

''டாக்டர்! நான் கொடுக்கிற ஃபீஸ், பணம் இல்லை, வாழ்க்கை... என் கணவரையே கொடுக்கிறேன்....'' என்று சேகரின் கைகளையும் மார்கரெட்டின் கைகளையும் இணைத்து வைத்தாள் சுபத்ரா.

இரு டாக்டர்களும் திடுக்கிட்டு நின்றார்கள்.

''உங்கள் காதலைப் பற்றி நான் இப்போது தான் தெரிந்து கொண்டேன். உங்கள் காதல் இனிய இல்லற வாழ்க்கையாக மலர்ந்து மணம் பரப்பட்டும்...'' என்று வாழ்த்திய சுபத்ரா, சேகரைப் பார்த்து ''பயப்படா

''இஞ்சி இருக்கா? இஞ்சி? இஞ்சி இருக்கா? இஞ்சி?''

''அடடே! புது பல் செட்! எப்ப மாட்டினே?''

-சுதர்ஸன்



தீங்க! இந்த விஷயம் உங்க மாமனுருக்கு—ஏன், வேறு யாருக்குமே தெரியப்போற தில்லே!....'' என்று சிரித்தான்.

குழந்தை மீரா வளர்ந்து பள்ளிக்கூடம் போக ஆரம்பிக்கவுடனே, சும்மா வீட்டுக்குள்ளே அடைந்து கிடக்கும் வாழ்க்கை, சுபத்ராவுக்கு 'போர்' அடித்தது. பொழுது போக்காகத் தன் வீட்டிலேயே ஒரு நடனப் பள்ளி ஆரம்பித்து, இந்தியர்களின் குழந்தைகளுக்கும் ஆர்வமுள்ள சில அமெரிக்கப் பெண்களுக்கும் நாட்டியம் சொல்லிக் கொடுத்தாள்.

அவளுடைய திறமையைக் கேள்விப்பட்ட மாத்யூ ராபின்ஸ் என்ற புகழ்பெற்ற நாட்டியக் கலைஞன் தன் குழுவில் அவளையும் சேர்த்துக் கொள்ள டாக்டர் சேகரின் அனுமதி பெற்றான்.

ராபின்ஸின் ரெயின்போ நாட்டியக் குழு மேல் நாட்டு 'பாலே' நடனங்களையும் ஓரியண்டல் நடனங்களையும் கலந்து நடத்துகிற ஒரு புதுமையான அமைப்பு. அமெரிக்காவில் அவனுக்கென்று ஒரு பெரும் ரசிகர் கூட்டம் பெருகியிருந்தது. அந்தக் குழுவின் நிகழ்ச்சிகளில், தானே சில அயிட்டங்களை ஆடியதோடு, வேறு சில நடனங்களுக்கு 'கோரியாக்ராபி' அமைத்துக் கொடுத்தாள் சுபத்ரா.

மீரா வளர்ந்து பூப்படைந்த விழாவைச் சென்னையில் பிரமாதமாக நடத்திய பின்புதான் விஜயராகவன் காலமானார். பாட்டி மீராவைத் தன்னுடனேயே இருக்க வைத்துச் சென்னையில் கல்லூரியில் படிக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

''மீரா! என் கணவருடைய மகளுக்கு நான்தான் மேகலா என்று பெயர் வைத்தேன். மார்கரெட் என்னிடமிருந்து எதையும் பறித்துக் கொள்ளவில்லை. நானேதான் அவளுக்கு எல்லாவற்றையும் கொடுத்தேன். என்னால் அந்தக் காதலர்களை வாழ வைக்க முடிந்தது. ஆனால் என் காதல்—?... எனக்கு இப்போது தோன்றுகிறது — அப்பாவை, எதிர்த்துப் போராடி என் காதலரையே கல்யாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். அப்பா மேல் உள்ள பாசத்தினாலும் பயத்தாலும் என் வாழ்க்கைக்கே அர்த்தமில்லாமல் போய் விட்டது'' என்று மகளிடம் தம் கதையைச் சொல்லி முடித்து நெட்டுயிர்த்தாள் சுபத்ரா.


பண்பிலும் தியாகத்திலும் உயர்ந்தது தந்தையா, தாயா என்று பிரமித்து மெய் சிலிர்த்து நின்றாள் மகள். 'மனிதர்களின் வாழ்க்கைகளுக்குள் எத்தனை அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன?....'

சேகரின் மரணத்துக்குப் பிறகு உடனே சுபத்ரா இந்தியா திரும்ப முடியவில்லை..

சேகரின் மறைவுக்குப் பிறகும், நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட சுபத்ராவிடம் மேலும் பரிவோடும், பாசத்தோடும் பழகத் தொடங்கினான் ராபின்ஸ்.

ஒரு நாள் பேச்சுவாக்கில் தன்னை மறுமணம் செய்து கொள்ள முடியுமா' என்று நேரடியாகவே கேட்டுவிட்டான் அவன்.

அதிர்ச்சி யடைந்து திணறிப் போய்விட்டாள், சுபத்ரா.



''நோ.... ஐயாம் ஸாரி, மிஸ்டர் ராபின்ஸ்!'' என்று சிரித்தபடியே அழுத்தமாக மறுத்து விட்டாள்.

அதற்குப் பிறகும் அவளிடம் கண்ணியமாகவே நடந்து கொண்டான் அந்தக் கலைஞன்.

அமெரிக்க நாட்டில் நிகழ்ச்சிகள் முடிந்து லண்டன், பாரிஸ் முதலிய ஐரோப்பிய நகரங்களுக்கு அந்த நாட்டியக் குழு புறப்பட்ட போது சுபத்ரா இந்தியா திரும்பி விட்டாள்.

அவள் இந்தியா வந்து ஒரு வருடத்தில் மீராவுக்கு ஒரு நல்ல இடத்துச் சம்பந்தம் வந்தது.

ஓய்வு பெற்ற கல்லூரிப் பேராசிரியை லட்சுமியம்மாளின் மகன் ரங்கராஜன், அமெரிக்காவில் ஐ. எம். எஃப். ஸ்தாபனத்தில் ஓர் ஆபீஸராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தாய் போட்ட கோலத்தைக் கூடத் தாண்ட மாட்டான்!

'அம்மா! நீ இந்தியாவுக்குப் போய், சம்பந்தம் பேசி முடிவு செய்கிற எந்தப் பெண்ணையும் நான் கல்யாணம் பண்ணிக்கத் தயார்' என்று சொல்லிவிட்டான். லட்சுமியம்மாள் சுபத்ரா வீட்டுக்கு வந்து, மீராவைப் பெண் பார்த்து உடனே சம்மதம் தெரிவித்துவிட்டாள்.

தன் திருமண அழைப்பிதழை, பேராசிரியர் நாராயணனிடம் நேரடியாகவே வீட்டில் கொண்டு போய்க் கொடுத்தாள் மீரா.

''அடே! உனக்குக் கல்யாணமா?'' என்று ஆச்சரியத்துடன் சிரித்தார் நாராயணன்.

''பின்னே, உங்க மாதிரி பிரம்மச்சாரியாகவே இருக்க முடியுமா ஸார்?'' என்று குறும்பாகக் கேட்டாள், மீராவின் தோழி ஸ்வர்ணா.

''மீரா! கல்யாணம் ஆகாதவன் எல்லாம் பிரமச்சாரியல்ல; கல்யாணமானவனெல்லாம் குடும்பஸ்தனுமல்ல—டு யூ அண்டர்ஸ்டாண்ட்? உண்மையில் நான் கல்யாணமானவன்தான். ஆனால் உன் கல்யாணம் மாதிரி இன்விடேஷன் அச்சடிச்சு, எல்லோரையும் கூப்பிட்டு, அக்கினி சாட்சியாகத் தாலி கட்டிய திருமணம் அல்ல. மனச்சாட்சியோடு இரண்டு பேர் உள்ளத்தாலும் உடலாலும் ஐக்கியமாகிய காந்தர்வ மணம் அது... அதற்குப் பிறகு என் காதலி வேறொருவனுக்கு மனைவியாகி விட்டாள். ஆனால் என்னால் இன்னொருத்தியை மனைவியாக்கிக் கொள்ள முடியவில்லை. அவளையே நினைச்சு, அவளையே மனைவியாகக் கற்பனை பண்ணிகிட்டு இன்னும் வாழ்கிறேன்...

காதலின் பரிமாணங்களைக் கண்டு வியந்து நின்றார்கள் மீராவும் தோழியும்.

திருமண நாளில், மாங்கல்ய தாரணம் நடந்து முடிந்த பிறகுதான் பேராசிரியர் நாராயணன் அங்கே வந்தார். தம் ஆசிரியரைக் கண்டதும் மகிழ்ச்சியால் துள்ளி, வரவேற்றுத் தன் கணவருக்கு அறிமுகம் செய்துவைத்தாள் மீரா.

''ஸார்! ஒன் மினிட்... உள்ளே போய் அம்மாவைக் கூட்டிக்கிட்டு வர்றேன்... இவரோட பேசிக்கிட்டிருங்க...'' என்று கூறி ஓடி, ''அம்மா! எங்க ப்ரொபஸர் வந்திருக்காரம்மா. அடிக்கடி நான் சொல்வேனே, பிரம்மச்சாரி ப்ரொபஸர்னு—'' என்றாள்.

''ஆமா... ஏதோ பழைய காதலியையே நினைச்சுக்கிட்டு, அவளையே மனசிலே வச்சு வாழ்ந்துக்கிட்டிருக்கிறவர்னு சொல்லியே!''

''ஆமாம்மா! அவரே தான். அதோ மாப்பிள்ளையோட பேசிக்கிட்டிருக்கார் பார்!'' என்று அந்த ஹாலிலிருந்தே ஜன்னல் வழியாகப் பேராசிரியரைக் காட்டினாள் மீரா.

அதே சமயம், தற்செயலாகத் திரும்பிய நாராயணனும் அவளைப் பார்த்து விட்டான்.

'ஓ!...யாரது, சுபாவா?.... என் சுபத்ராவா இவள்!' உள்ளம் பரபரக்க, ஓரடி முன் எடுத்து வைத்தார் அவர்.

அப்போது — ''சுபத்ரா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே குறுக்கே வந்து நின்றாள் லட்சுமியம்மாள் — சம்பந்தி!

''சுபத்ரா! அதோ உள்ளே யார் உட்கார்ந்திருக்கிறதுன்னு பார்த்தியா? தாலி கட்டின புருஷன் இறந்து ஒரு வருஷம் ஆகிறதுக்குள்ளே, முதல் சிராத்தம் முடியறதுக்குள்ளே இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாளே, அந்த சுலோசனா... அவளை யார் இங்கே இன்வைட் பண்ணினது? நம்ம கல்யாண வீட்டு 'சாங்டிட்டியே' போயிட்டுது போ!.... சேச்சே! இவங்க எல்லாம் பொண்ணுன்னு நடமாடறாங்களே, நம்ம நாட்டுக்கே கேவலம்... மறு மணம் செஞ்சுக்கிட்டது மட்டுமில்லாம, இப்போ என்ன சொல்றாளாம் தெரியுமா?... அந்த ரெண்டாவது புருஷனைத்தான் அவள் ஆரம்பத்திலே காதலிச்சாளாம்... எப்படிக் கண்றாவி?'' என்று முகத்தைச் சுளித்தாள் சம்பந்தி அம்மாள்.

''அம்மா!'' என்று சுபத்ராவைத் திருப்பினாள் மகள். ''ப்ரொபஸர் காத்துக்கிட்டிருப்பார் அம்மா!''

சுபத்ராவின் கண்களில் அழுத்தமான உறுதியின் பாவம். நெஞ்சிலே ஓர் இறுக்கத்தின் நங்கூரம்... 'நாராயணன் காத்துக் கொண்டே இருக்க வேண்டியது தான். சுபத்ரா இப்போது அவருடைய தார்மீக மனைவி அல்ல—அவருடைய மகளின் தாய்.'

நீர் கசிந்த கண்களை, ஏதோ தூசி விழுந்து துடைப்பது போல், முந்தானையால் துடைத்துக் கொண்டவள், ''மீரா! எனக்கு உள்ளே ஒரு முக்கியமான வேலை இருக்கு. உன் ப்ரொபஸருக்கு நீயே தாம்பூலப் பை கொடுத்து விடு'' என்று உள்ளே சென்றாள்.

அவளுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு நின்ற நாராயணனின் உள்ளத்தில் சிந்தனைகள் புரண்டன.

'தோ.... இவள் என் சுபா இல்லை. என் சுபா இன்னும் அழகாக, இளமையாக, பதினெட்டு வயதுப் பெண்ணாக இருப்பாள். இவள் சேகரின் மனைவி; மீராவின் தாய்; ரங்கராஜனின் மாமியார்; அடுத்த வருஷம் மாஸ்டர் அல்லது மிஸ் ரங்கராஜனின் பாட்டி — இவளுடைய வாழ்க்கையிலே நான் குறுக்கிட மாட்டேன்....'

திரும்பி வந்த மீரா கொடுத்த தாம்பூலப் பையை வாங்கிக் கொண்டார் நாராயணன்.

''மீரா! நீ தீர்க்க சுமங்கலியா இருப்பே! மணமக்களை வாழ்த்த ஒரு பிரம்மச்சாரிக்குத் தகுதி இருக்கோ இல்லையோ, உன்னை வாழ்த்த எனக்குத் தகுதியும் உரிமையும் இருக்கு.'' என்று மனம் நெகிழ வாழ்த்தி வெளியேறினார் 'பேராசிரியர் பிரம்மச்சாரி.'

சீர் மிகு பொங்கல்



செல்வம் தழைத்திடச் சீர்த்தி பெருகிடும்
சீர்மிகு பொங்க லடா!-எழிற்
பார்மிசை பொங்க லடா!
நெல்வகை குவிந்திடப் பல்வகைப் பொருளும்
நிறைந்திடச் செய்தோ மடா! - அன்பு
நெஞ்சினிற் பதித்தோ மடா!

நெய்யும் துணிவகைச் செய்யும் முறைதனில்
நேர்த்தியைக் கண்டுவிட் டோம்! - பல
நூதனம் விண்டுரைத் தோம்!
பொய்யும் புரட்டும் கொய்தபின் சத்தியம்
போற்றி வணங்கிவிட் டோம்! - நிதம்
பொன்மனம் கொண்டுவிட் டோம்!

செய்யும் தொழில்வகை உய்யவகை செய்து
செந்நீர் பிழிந்துவிட் டோம்! - அறம்
சிந்தையிற் கொண்டுவிட் டோம்!
மெய்யும் கரணமும் தொய்யும் நிலையினை
மெல்ல அழித்துவிட்டோம்! - கருணை
மெய்யென மதித்துவிட் டோம்!

கரும்பொடு நெல்லும் விரும்பியே நாமும்
கதலியும் படைத்துவிட் டோம்! - ஒளிக்
கதிரை வணங்கிவிட் டோம்!
அரும்பிடும் எண்ணம் குருத்தென விரிய
ஆதவன் தாள்பணிந் தோம்! - உயர்
ஆற்றலால் நாமுயர்ந் தோம்!

— குடந்தை புகழேந்தி

திருமங்கல்ய ஸரடு உத்ஸவம்

சென்னையையடுத்த நங்கைநல்லூரில் கோயில் கொண்டுள்ள, கல்விக்கும் செல்வத்திற்கும் நாயகனும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயவதனப் பெருமான் மடி மீது உறைந்திருக்கும் **ஸ்ரீ வித்யா** என்ற திருநாமம் கொண்ட தாயாருக்கு ஆண்டுதோறும் தை மாதம் முதல் வெள்ளிக்கிழமையன்று **ஸரடு உத்ஸவம்** நடத்தி, குழுமியிருக்கும் சுமங்கலிகள் அனைவருக்கும் மஞ்சள், குங்குமம், தாம்பூலம், திருமங்கல்யச் சரடு ஆகியவற்றை விநியோகித்து வருகிறோம்.

மேற்படி வைபவம் இந்த வருடம் தை மாதம் **4 ஆம் தேதி வெள்ளிக்கிழமை** 18-1-1980 அன்று காலை 9-30 முதல் 12-30 மணி வரை நடைபெறும். சுமங்கலிகள் அனைவரும் திரளாக வந்திருந்து எம்பெருமான் தாயாருடைய அனுக்ரஹத்தைப் பெற்று நற்பயனடைய அழைக்கிறோம்.

ஸ்ரீ நீளாதேவி சங்கம்
(Regd.)
நங்கைநல்லூர்

கல்லூரியில் 'குவிஸ்'

[வேளச்சேரியில் உள்ள குருநானக் ஆண்கள் கல்லூரி. 'க்விஸ்' போட்டியில் பங்கேற்க மாண வரிடையே ஏக உற்சாகம். மொத்தம் பத்து மாணவர்கள் போட்டியிட முன்வந்ததால் சீட்டுக்குலுக்கு முறையில் ஆறு மாணவர்கள் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். கல்லூரி முதல்வர் தலைமை தாங்க, 'கல்கி' தயாரித்த கேள்விகளைக் கொண்டு உதவிப் பேராசிரியர் திரு கோவிந்தசாமி 'க்விஸ் மாஸ்டராக' மாறிப் போட் டியை நடத்திக் கொடுத்தார்.

போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் :

எஸ். ஸ்ரீனிவாசன்
ஆர். சங்கர்
பி. தர்மலிங்கம்
ஜி. காமராஜன்
வி. ரவிச்சந்திரன்
எம். ஷண்முகம்

1. கேள்வி: Ezra cup என்பது எந்த விளை யாட்டோடு சம்பந்தப்பட்டது?



✖ பார்வையாளரில் ஒரு பகுதி

(சங்கர் சரியாக விடையளித்தார்.)

2. கேள்வி: சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி யார்?
(சங்கர் சரியாக விடையளித்தார்.)

3. பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் அதிகார பூர்வமான இல்லம் எங்குள்ளது?
(குவெட்டாவில் உள்ளது என்று ஒரு மாணவர் சொல்ல, சரியான பதிலை சங்கர் சொன்னார்.)

4. கேள்வி: Gaza strip என்பது எங்குள் ளது என்று சொல்ல முடியுமா?
(பாகிஸ்தானில் உள்ளது என்று ஒரு மாணவர் கூற, சரியான பதிலை எவரும் கூறவில்லை.)

5. கேள்வி: கம்போடியா சமீப காலத்தில் செய்திகளில் அதிகமாக அடிபடுகிறது. கம்போடியாவின் தலைநகரம் எது?
('குவெய்ட்', 'சியோல்' என்றெல்லாம் மாணவர்கள் விடையளிக்க, சரியான விடையை எவரும் கூறவில்லை.)

6. கேள்வி: இந்திய ஜனாதிபதியின் மாதாந் திரச் சம்பளம் எவ்வளவு?
(சங்கர் சரியாக விடையளித்தார்.)

7. கேள்வி: ஹர் கோபிந்த் கொரானாவின் பெயர் எத்துறையுடன் சம்பந்தப்பட் டது? அவரது மிகப் பெரிய சாதனை என்ன?
(பௌதிகத் துறை என்றும் வானிலை ஆராய்ச்சித் துறை என்றும் மாண வர்கள் விடையளிக்க, சரியான விடை எவரும் கூறவில்லை.)

8. கேள்வி: Sextant என்றால் என்ன?
(ஆண்மையை அளக்க உதவும் கருவி என்று பார்வையாளரில் ஒருவரிட மிருந்து மெதுவான குரல் ஒலித்தது! சரியான பதில் எவரும் அளிக்கவில்லை.)

9. ஆந்தைக் குஞ்சு ஆங்கிலத்தில் என்ன வென்று அழைக்கப்படுகிறது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

10. "யுனைடெட் கிங்டம்" என்று நாம் அழைக்கும் நாட்டின் முழுமையான பெயர் என்ன?
(இக்கேள்விக்கான பாதி விடையை ரவிச் சந்திரன் சரியாகக் கூறினார்.)

11. கேள்வி: ஞான பீட விருதைப் பெற் றுள்ள தமிழ் எழுத்தாளர்கள் யார்யார்? எந்தெந்தப் படைப்புகளுக்காக அவ் விருதைப் பெற்றுள்ளனர்?
(சரியான விடையை ரவிச்சந்திரன் கூறினார்.)

12. கேள்வி: 'எஸ்கிமோ' என்பதன் அர்த் தம் என்ன?
(சரியான விடையை எவரும் அளிக்க வில்லை.)

13. கேள்வி: 'கேரளா' என்பது 'கேரா' என்பதிலிருந்து வந்ததாகக் கூறப்படு கிறது. 'கேரா' என்பதன் அர்த்தம் என்ன?
(ஸ்ரீனிவாசன் சரியான விடையைக் கூறி னார்.)

14. கேள்வி: "ஜெர்மினேஷன்" என்றால் என்ன?
(இக்கேள்விக்கு எந்த மாணவரும் சரி யான விடையை அளிக்கவில்லை.)

15. கேள்வி: செயற்கைத்தனமான, இயல்பாயிராத எழுத்து நடைக்கு (artificial or affected Style of writing) ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூறவும்.
(எவரும் விடை யளிக்கவில்லை.)

16. கேள்வி: (1) Moon and six pence (2) சி. ஐ. டி. சந்துரு ஆகிய புத்தகங்களை எழுதியவர்கள் யார்?
[பங்கேற்ற மாணவர்கள் சரியாக விடையளிக்காத நிலையில் பார்வையாளராக இருந்த ஒரு மாணவர் சரியாக விடை அளித்தார்.]

17. கேள்வி: சாண்டில்யனின் இயற் பெயர் என்ன?
(காமராஜன் சரியாக விடையளித்தார்.)

18. கேள்வி: பெங்களூரில் நடைபெறும் அகில உலக திரைப்பட விழாவில் பங்கேற்கும் தமிழ் படங்களில் இரண்டின் பெயர்களைக்கூற முடியுமா?
(ஸ்ரீனிவாசன் சரியாக விடையளித்தார்.)

24. கேள்வி: மன்ஸூர் அலிகான் படாடியின் தந்தை படாடி நவாபின் பெயர் என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)

25. கேள்வி: யானையின் தும்பிக்கை என்பதற்கு Trunk என்பது தவிர ஆங்கிலத்தில் வேறு ஒரு வார்த்தை கூற முடியுமா?
(பார்வையாளரிலிருந்து ஒரு மாணவர் பதிலளித்தார்.)

26. கேள்வி: ருமேனியாவின் 'கரன்ஸி' எது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

27. கேள்வி: லக்ஸம்பர்கின் தலைநகரம் எது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

28. கேள்வி: சூடான் நாட்டின் சுதந்திர தினம் எந்த நாளில் கொண்டாடப் படுகிறது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

29. கேள்வி: OPEC என்பதன் விரிவு என்ன?
(பார்வையாளரில் ஒரு மாணவர் சரியாக விடையளித்தார்.)



✠ பங்கு பெற்ற மாணவர்களும், விழா நிர்வாகிகளும். வலமிருந்து இரண்டாவதாக உட்கார்ந்திருப்பவர் 'க்விஸ் மாஸ்டர்'

19. கேள்வி: சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் முதன் முதலாகப் புத்தக வடிவில் தொகுத்தது யார்?
(தர்மலிங்கம் சரியாக விடையளித்தார்.)

20. கேள்வி: Magnum opus என்பதன் அர்த்தம் என்ன?
(Magic Formula என்று ஒரு மாணவர் விடையளிக்க, சரியான விடையை யாரும் சொல்லவில்லை.)

21. கேள்வி: Privy Purse என்றால் என்ன?
(பெரிய பர்ஸ் என்று ஒரு மாணவர் கூறினார். சரியான விடையை எவரும் கூறவில்லை.)

22. கேள்வி: 'இகபானு' (Ikebana) என்றால் என்ன?
(பார்வையாளரிலிருந்து ஒரு மாணவர் சரியாக விடையளித்தார்)

23. கேள்வி: gambet என்பதற்கும் gambit என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)

30. கேள்வி: தனது முதல் செயற்கைக் கோளான 'ஆர்யபட்டா'வை இந்தியா எந்த ஆண்டு வான்வெளியில் செலுத்தியது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

[அதிக மதிப்பெண்கள் பெற்று திரு ஆர். சங்கர் போட்டியில் வெற்றி பெற்றார். 'கல்கி'

✠ கல்லூரி முதல்வரிடமிருந்து திரு சங்கர் பரிசு பெறுகிறார்.



சங்கருக்கு ரூ. 50 பரிசாக அளித்தது. பரிசை கல்லூரி முதல்வர் திரு வி. குமார பிள்ளை வழங்கினர். நிகழ்ச்சி முடிந்ததும் மாண வர்கள் 'கல்கி' நிருபரைச் சூழ்ந்து கொண்டு மாணவர்களின் அறிவுத் திறனை வளர்க்கும் விதமாக இம்மாதிரியான ஒரு சிறப்புத் திட் டத்தை 'கல்கி' மேற்கொண்டிருப்பது குறித் துத் தங்களது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தனர். கல்லூரி முதல்வரும் விழா நிர் வாகிகளும், மாணவ மணிகளும் காட்டிய உற்சாகமும், ஒத்துழைப்பும் மறக்க முடி யாதவை.]

விடைகள்:

1. போலோ 2. வி. வி. சந்திரசூட் 3. 10, டௌனிங் தெரு. 4. இன்று இஸ்ரேலின் அதிகாரத்தில் உள்ள எகிப்து பிரதேசம். இஸ்ரேல் – எகிப்து எல்லையில் உள்ளது. 5. Phnom penh (நாம்-பென்). 6. மாதம் ரூ. 10,000. 7. மருத்துவத் துறை. செயற்கை உயிரணுக்களைத் தோற்றுவித்தது (Creation of Synthetic gene) 8. கப்பலைத் திசை தப்பாது செலுத்தவும் சர்வேயிலும் பயன்படும் கருவி. பிரதிபலிப்பின் அடிப் படையில் இயங்குவது. 9. Owlet 10. United kingdom of great Britain and Northern Ireland. 11. திரு அகிலன் மட்டுமே தமது 'சித்திரப் பாவை' நாவலுக்காக ஞானபீடம் விருது பெற்றுள்ளார். 12. எஸ்கிமோ என்ருல் பச்சை மாமிசத்தை உண் பவர்கள் என்று அர்த்தம். வட அமெரிக்கா வின் ஆர்க்டிக் பிரதேசங்களில் வாழும் குடி யினர். 13. 'கேரா' என்ருல் தேங்காய். இந்தியாவின் தேங்காய் உற்பத்தியில் சுமார் 60 சதவீதம் கேரளாவில் உள்ளதால் இப் பெயர் வந்தது. 14. விதை முளைவிடுவது தான் Germination. 15. Euphuism 16. Somerset Maugham (மாம்); தேவன். 17. திரு. பாஷ்யம். 18. பசி, உதிரிப்பூக்கள், அழியாத கோலங்கள். 19. தமிழ் தாத்தா உ. வே. சுவாமிநாதய்யர். 20. ஒரு இலக் கியவாதியின் தலைசிறந்த படைப்பு. 21. இந்தியக் குடியரசுடன் இணைந்துவிட்ட பிர தேசங்களின் முன்னுளைய மன்னர்களுக்கு அளிக்கப்படும் உதவிப் பணம். 22. பூக்களை அலங்காரமாக வைக்கும் ஜப்பானியக் கலை. 23. gambet என்பது ஒரு பறவை; gambit என்பது செஸ் விளையாட்டில் பானையோ அல்லது வேறு காயையோ வெட்டுக் கொடுக் கத் தயாராக உள்ள நிலை. வேறு பெரிய சாதனைக்காகத் திட்டமிட்டுப் பறிகொடுக் கப்படுவது. 24. இஃப்டெகார் அலி கான் (Iftekar Ali Khan) 25. Proboscis 26. Leu 1 leu = 100 bari 27. Luxembourg. 28. ஜனவரி முதல் தேதி 29. Organisati on for Petroleum Exporting Countries. 30. 1975.

நிகழ்ச்சி தொகுப்பு: **நாயகன்**
புகைப்படம்: **மன்னை மூர்த்தி**

பிப்ரவரி 16, 1980

❋ பிப்ரவரி 16ம் தேதி ஒரு முக்கிய மான நாளாக 1980ம் ஆண்டில் விளங் கப் போகிறது. உலகெங்கிலும் உள்ள வானியல் வல்லுநர்கள் தங்களது ஆராய்ச்சிக்கு அது முக்கியமான நாளாக நினைக்கிருர்கள். அன்றுதான் முழு சூரிய கிரகணம் நிகழப் போகிறது. தெற்கு அட்லாண்டிக் பகுதியில் முழு கிரகணப் பகுதி ஆரம்பித்து, ஒரிஸ்ஸா, ஆந்திரப்பிரதேசம் வழியாகப் பரவித் தென் சீனுவில் அது முடிவடைகிறது. இந்தியாவில் கடக், ரெய்ச்சூர், சரத் பூர், பூரி ஆகிய நகரங்கள் அந்தப் பாதை யில் இருப்பதால் அவை கிரகணத்தின் போது முழு இருட்டில் ஆழ்ந்துவிடும். எந்த ஒரு இடத்திலும் மூன்று நிமி டங்கள் வரை முழு இருட்டு நிறைந் திருக்கும். இதுபோல் பூரண கிரகணம் ஒரு இடத்தில் ஏற்பட்டால் மீண்டும் அதே இடத்தில் ஏற்பட 360 வரு டங்கள் ஆகும்.

அதனுல் நாம் இப்போதே பார்த்து விடுவோமே!

உயர்ந்தவை!

❋ நமது திரைப்படங்களில் சென்னை நகரத்தைக் காட்ட எல். ஐ. சி. கட்டி டத்தை அடையாளம் காட்டுகிருர்கள். ஆனுல் உலகில் உள்ள உயர்ந்த கட்டி டங்களை நினைக்கும் போது நம்ம ஊர் எல். ஐ. சி ஒரு கொசு! உலகில் உள்ள பதினைந்து மிக உயர்ந்த 'ஸ்கை ஸ்கிரேப் பர்கள்'' அமெரிக்காவில் தான் உள்ளன. மிக உயர்ந்த கட்டிடம் சிகாகோ நகரில் உள்ள 'ஸியர்ஸ் ரோபக் டவர்' என்பது தான். 110 மாடிகள் உள்ள இதன் உயரம் 442 மீட்டர்கள். 1973ல் இது கட்டி முடிக்கப்பட்டது. நியூயார்க்கில் உள்ள எம்பையர் ஸ்டேட் பில்டிங் இப்போது மூன்றுவது இடத்துக்கு வந்து விட்டது.

அமெரிக்காவில் முதல் விண்ணை முட்டும் கட்டிடம் 1884ம் ஆண்டி லேயே கட்டப்பட்டு விட்டது.

— டி. ஆர். நவநீதன்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

அவருடன் சேர்ந்து கைதானவர்களுள் ஒருவரான சேலம் கே. வி. சுப்பராவ் கோவையில் வைக்கப்பட்டிருந்தார். மற்றவர்கள் பல்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். சுப்பாராவுக்கு உடல் நலமில்லை. அவருக்குப் பணிவிடை புரிந்து உதவிய ஸி. ஆர்., ''இடுப்பிலோ தொடையிலோ சுப்பராவுக்கு எந்த விதத் தொந்தரவும் இல்லை'' என்று அவரது உறவினர்களுக்கு உறுதியளித்து எழுதினார். ''அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அவரை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

காங்கிரஸிடம் அனுதாபம் கொண்ட பத்திரிகைகள் சிறைக் கூடத்துக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆயினும் ஸி. ஆர். மெயில், டைம்ஸ் ஆப் இந்தியா ஆகிய பிரிட்டிஷாருக்குச் சொந்தமான பத்திரிகைகள் வழங்கும் கசப்பு டானிக்கைச் சாப்பிட்டே தாம் புஷ்டி அடைந்து வருவதாக எழுதினார்.

வீராங்கனையான ஐரிஷ் மாது அன்னி பெஸண்ட் சென்னையில் செப்டம்பர் மாதம் காலமானார். மலபாரில் மாதவன் நாயர் காலமானதும் ஸி. ஆருக்குத் துயரமளித்தது. ''இச் செய்தி அறிந்து நான் கிட்டத்தட்ட தைரியமிழந்தவனாகி விட்டேன்'' என்று அவர் எழுதினார். மேலும், ''மலபாரில் உள்ளவர்களில் உண்மையாக என்னைப் புரிந்துகொண்ட ஒரு சிலரில் மாதவன் நாயர் ஒருவர்'' என்று குறிப்பிட்டார்.

சுருசுருப்பான அவர் மனம் ஹிந்திப் பிரசாரத்துக்கோ கதர் விற்பனையை அதிகரிப்பதற்கோ புதிய உத்திகளை யோசித்துக்கொண்டிருந்தது. அல்லது சேலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஹரிஜனங்களுக்கு எந்த விதமாக நிவாரணப் பணி ஆற்றலாம் என்பது குறித்து யோசனைகள் வெளியிட்டது. ஆலயப் பிரவேச மசோதா பற்றியும், நெசவு ஆலைகள் உற்பத்தி செய்யும் துணியைக் கதர் என்ற பெயரில் விற்று மோசடி செய்வதைத் தடுக்கச் சட்டம் இயற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் எம். எல். ஏ.க்களுக்கு இவரிடமிருந்து செய்திகள் சென்றன.

இவை ஒருபுறமிருக்க, ஸி. ஆர். ஆத்ம சிந்தனையில் ஈடுபட வாய்ப்பளிப்பதாகவும் சிறைவாச காலம் விளங்கியது. இதன் விளைவாகச் சில நுண்ணிய உணர்வுகளுடன் கூடிய வரிகள் பிறந்தன. அறிமுகமாகியிருந்த ஒரு கிறிஸ்தவ மதப் பிரசாரகருக்கு அவர் எழுதினார்:

''அன்புக்கும் மரியாதைக்கும் உரிய பாப்லே, சென்ற முறை நாம் சந்தித்த பிறகு எனக்குப் புனராலோசனை செய்ய நிறைய அவகாசமும் வாய்ப்பும் கிட்டியிருக்கிறது. தாங்கள் அன்புடன் ஆசிரமத்துக்கு விஜயம் செய்த தருணத்தை நான் மதமாற்றங்கள் குறித்த விவாதத்தில் இறங்கிப் பாழ்படுத்தியது எவ்வளவு அபத்தமானது! நான் உண்மையில் வெட்கப்படுகிறேன்.''

தம்மிடம் வருத்தம் கொண்டிருந்த ஒரு நபருக்கு ஸி. ஆர். பின்வருமாறு எழுதினார்:

''நான் உங்களுக்குத் தீங்கு நினைத்து எதையும் செய்ததில்லை என உறுதி மொழி அளிக்கிறேன். மாறாக, உங்களுக்கு உதவுவதற்கே எப்போதும் முயன்றேன். இதற்கு நீங்கள் எனக்கு நன்றி கூற வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் கணக்குப் பார்ப்போமானால் நீங்கள் எனக்குக் கடமைப்பட்டிருப்பதை விட நான்தான் உங்களுக்கு அதிகமாகக் கடமைப் பட்டிருப்பேன்.''

பத்திரிகையாளர் காஸா சுப்பா ராவுக்கு ஸி. ஆர். எழுதினார்:

''நீங்கள் உங்கள் நன்றியை எனக்குத் தெரிவிக்க அவசியமில்லை. உங்களுக்கு என்னிடம் அன்பு உண்டு என்பது எனக்கு நிச்சயம் தெரியும். வெளியிடச் சாத்தியமற்ற உணர்வுகளை வெளியிட நீங்கள் முயல்வதை விட, வெளியிடப்படாத அன்பிலேயே நான் அதிகமாக மகிழ்ச்சி அடைகிறேன். நான் இங்கு இதற்கு முன் வந்ததில்லை. இவ்விடம் ஒரு மாறுதலாக இருக்கிறது. தோழர்கள் என்று சொல்லிக்கொள்ளும்படி யாருமில்லை. இதுவே வித்தியாசமானதாக இருக்கிறது.''

மிதமாக மது அருந்துமாறு பிரசாரம் செய்கிற அவரது நண்பர்கள் ஹெர்பர்ட் ஆண்டர்சன், மேரி கேம்ப்பெல் ஆகியோர் தங்கள் நல்வாழ்த்துக்களை அனுப்பியிருந்தார்கள். அவர்களுடைய அன்பான வார்த்தைகள் சிறைச் சுவர்களையும் கம்பிகளையும் பூட்டுக்களையும் கூட மென்மையாக்கிவிட்டதாக ஸி. ஆர். பதிலெழுதினார்.

பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவரும் சுதந்திரப் போராட்டத்துக்கு உதவி வந்தவருமான ஸ்ரீமதி மார்கரெட் கஸின்ஸ் ஓராண்டு சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலை பெற்றபோது, ஸி. ஆர்., ''புத்தொளிக்கும் காற்றோட்டத்துக்கும் திரும்பியுள்ள உங்களுக்கு வாழ்த்துக்கள்'' என்று செய்தி அனுப்பினார். அத்துடன், வீரமும், பொறுமையும் விசுவாசமும் மிக்க அவரது தொண்டு எப்போதும் நினைவில் வைத்துப் போற்றப்படும் என்று அவருக்கு உறுதி அளித்தார்.

தமது ஆசிரமத் தோழர்களுக்கும் ஸி. ஆர். எழுதினார்:

''சகோதரர்களாக நடந்து கொள்ளுங்கள். ஆண்டவனை மறவாதிருங்கள். நீங்கள் எல்லோரும் அங்கு ஒன்று சேர்ந்து



இருப்பதற்கான உயர்ந்த லட்சியக் காரணத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருடைய நற்குணங்களையே எண்ணிப் பாருங்கள்; குறைகளுக்கு முக்கியத்துவம் தராதீர்கள்.''

தனிமை அவரது உள்ளத்திலிருந்து அன்பை ஈர்த்தது. ஆசிரம அங்கத்தினர்களுக்கு அவர் சொன்னார்:

''படிப்பறிவற்ற ஏழைகளிடம் அன்பும் அனுதாபமும் காட்டுங்கள். உண்மையில் பார்க்கப் போனால் அவர்கள் ஒருவிதத்தில் நம்மை விட அதிகமாகவே இந்தத் தேசத்துக்காகப் பாடுபடுகிறார்கள். அவர்களுடைய மிகப் பெரிய சொத்து நேரம்தான். ஆகவே அவர்களை அநாவசியமாகக் காக்க வைக்கக் கூடாது.

''அவர்கள் தங்களது சுய கௌரவத்தை மென்மேலும் உணரும் விதமாகவே நாம் அவர்களிடம் பேசி நடந்து கொள்ளவேண்டும். மருத்துவ மனையும் கடையும் அவர்களுக்கு மென்மேலும் உதவும் விதமாக நடத்தப்பட்டு வரும் என்று நம்புகிறேன். சிறுவர் சிறுமியர் கந்தலை உடுத்தி எவ்வளவு அழுக்காக இருந்தாலும் சரி, உங்கள் குழந்தைகள் பிறரால் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புவீர்களோ அப்படியே இந்த ஏழைக் குழந்தைகளையும் நடத்துங்கள்.''

ஒரு துப்புரவுக் குழு உருவாக வேண்டும் என்று அவர் யோசனை சொன்னார். இக்குழு ஆசிரமத்தை, புல் பூண்டுகள் அழுகிக் கொண்டிருக்கும் அசிங்கங்கள், கிழிந்த தாள்கள், பெருக்கித் தள்ளிய குப்பைகள் முதலியவை இல்லாமல் சுத்தமாக வைத்திருக்கும். ''சிறையில் எத்தனையோ குறைபாடுகள் இருந்தும்கூட, இங்கே ஒழுக்கமும் சுத்தமும் பாதுகாக்கப்பட்டு வருவதைக் காணும் போது எனக்குப் பாராட்டவே தோன்றுகிறது'' என்று வி. ஆர். எழுதினார்.

கைத்தறியாளர்களை அவர் மறக்கவில்லை. அவர்கள் தங்கள் பணியைக் கவனமாகவும் சிறப்பாகவும் செய்யுமாறு அவர் கெஞ்சினார். ''வாராவாரம் சிறிதளவு பணம் சேமிப்பு செய்யுங்கள்; கள், சாராயத்துக்கு எதையும் செலவிடாதீர்கள்.'' என்று வேண்டினார்.

''ஸ்வீட் மாஸ்டர் வேலை கேட்கிறாயே! என்ன உன் பேர்?''

''ஜீனிவாசன்.''



அமெரிக்காவில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது பற்றி ஜெயிலில் கேள்விப்பட்டதும் பலமான அடி விழுந்தது போலிருந்தது. ஆண்டர்சனுக்கு ஒரு செய்தி அனுப்பினார்:

''அமெரிக்கா போய்விட்டது! அரசாங்க நடவடிக்கை மூலம் மதுவிலக்கை அமல்படுத்தப் போராடிக் கொண்டிருந்தவர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய துயரம்தான்!''

இதற்கிடையில் மகாத்மா, ஹரிஜனப் பணிக்காக ஒரு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். வி. ஆர். அவர் தெற்கே வர வேண்டும் என்று செய்தி சொல்லி அனுப்பினார். இங்கே ஆசாரக்காரர்களின் செல்வாக்குப் பலம் பெற்று நீடித்துக் கொண்டிருந்தது. காந்தியின் தோற்றம் சாமானிய மக்களுக்குச் சக்தி தந்து, நாகரிமுற்றவர்களாக நடிப்பவர்களின் எதிர்ப்பு நசுக்கப்பட வேண்டும் என வி. ஆர். விரும்பினார்.

அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் வி. ஆர்., அதை யொட்டிய முழுப் பொறுப்பையும் வகிக்குமாறு டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனைக் கேட்டுக் கொண்டார். ''ஏற்பாடுகள் பற்றி அறிவுரைகள் வழங்க என்னால் முடியும் என்று பாபு எதிர்பார்க்கிறார் என்று தோன்றுகிறது. ஆனால் அவ்வளவு சுதந்திரமாக என்னால் இயங்க முடியாது....'' என்று வி. ஆர்., எழுதிய போதிலும் மகாத்மாவுக்கு நிறைய பழங்கள், ஆட்டுப் பால் ஆகியவை அவசியம் என்பதை வற்புறுத்தினார். காலைக் கடன்கள் முடிப்பதற்கான வசதிகள் உள்ளனவா என ராஜன் கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ''நமது மக்கள் இதனைப் புரிந்து கொள்வதும் இல்லை; நினைவில் வைத்துக் கொள்வதும் இல்லை'' என்று அவர் விசனத்துடன் குறிப்பிட்டார்.


வி. ஆர். விடுதலை பெற்ற பின்னரும் காந்தியின் தென்னாட்டு விஜயம் நீடித்தது. அவருடன் மீண்டும் சேர்ந்திருக்கலாம், அதுவும் ஆசிரமத்தில் சில காலம் ஒன்றியிருக்கலாம் என்ற எண்ணம் வி. ஆருக்கு உற்சாகம் அளிப்பதாக இருந்தது. ஆனால் சிறிது கவலையும் இருந்தது.

ஆசிரமத்தில் வி. ஆர். நிறுவிக் கொண்டிருந்த 'பம்பு'கள் நீண்ட காலம் இயங்காது என்று மகாத்மா 'ஜோஸ்யம்' சொல்லி இருந்தார். வி. ஆர். அவை நீண்ட நாட்கள் இயங்கும் என்று பந்தயம் கட்டியிருந்தார். ஆசிரமத்துக்குப் பொறுப்பாளியாக இப்போது விளங்கிய சீனிவாச ராகவனிடம், பம்புகள் சரியாகக் கவனிக்கப்பட்டனவா என்று வி. ஆர். எழுதிக் கேட்டார். ''அவை நன்கு இயங்கவில்லையெனில் பாபுஜியிடம் பந்தயத்தில் நான் தோற்றுப் போவேன்!''

அவரது சிறைத் தண்டனை காலம் முடிய மூன்று வாரம் இருந்தபோது லக்ஷ்மியும் அண்மையில்தான் விடுதலை பெற்ற தேவதாஸும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மறுபடியும் ஒரு தரம் தன்னைப் பார்க்க முயலலாம் — விடை பெறுவதற்காக என்று வி. ஆர். யோசனை கூறினார். ஆனால் இதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

(தொடரும்)

தமிழாக்கம்: இ. ராஜேந்திரன்



ஆண்டவன் இருக்கிறான் என்று எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்கின்றன. இறைவன் இல்லையென்று எந்தச் சமயத்தவனாகிலும் சொன்னானாகில் அவனை அச்சமயம் துரோகி, நிரீசுவரவாதி என்று புறக்கணித்து விடும். ஆனால் இந்து சமயமோ, இறைவனை ஒப்புக்கொள்ளும் ஆஸ்திகனை எப்படி மதித்து ஏற்றுக் கொள்ளுகிறதோ அதே அளவுக்கு இறைவனை மறுக்கும் நிரீசுவரவாதிக்கும் மதிப்பும் மரியாதையும் தொன்று தொட்டு அளித்து வந்திருக்கிறது. இந்தப் பரந்த மனப்பான்மை உலகில் எந்தச் சமயத்தாரிடைக் காண முடியும்?

வால்மீகி ராமாயணத்தில் ராமபிரானிடம் நிரீசுவர வாதம் புரிந்தவர் ஜபாலி. அவரை வால்மீகி கடு சொற்களாலோ, கடும் சொற்களாலோ வர்ணிக்கவில்லை. அவரையும் மகரிஷி என்றே ஏற்றுக் கௌரவம் அளித்திருக்கிறார். வசிஷ்டர், வாமதேவர் ஆகியோருக்கு இணையான இடத்தைத்தான் அளித்தார்.

பகவான் புத்தர் ஹிந்து மதத்துக்கு விரோதமாகத்தான் தொழிற் பட்டார். ஆனால் இந்து சமயப் பெரியோர்கள் அவர் கூறிய பல கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அவரையும் இறைவனின் தசாவதாரத்தில் ஓர் அவதாரமாகவே ஏற்றுக் கொண்டு விட்டனர். இத்தகைய பண்பாடு உலகில் எந்தச் சமயத்தாரிடம் காண முடியும்?

இந்தப் பண்பு நேற்று வரை இருந்தது இன்றில்லை என்று சொல்ல முடியாது. தொடர்ந்து நிலவி வருகிறது.

மேனாட்டு யாத்ரீகர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்துவிட்டு இப்படி எழுதுவார்கள்: ''நேற்று ஒரு இந்திய விஞ்ஞானியுடன் பேசிக் கொண்டிருந்தேன். உலக முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவராக விளங்குகிறார். அவருக்கு வானில் உள்ள சூரியன் என்றால் அக்னி கவாலையான பிழம்பு என்னும் அடிப்படை விஷயம் தெரிந்திருக்கிறது. ஆயினும் மறு நாள் காலை சூரியன் இறைவன் என்று கருதி அர்க்கியம் விட்டுக் கொண்டிருந்தார். சூரியன் ஒரு வாயு என்ற கருத்தும், இறைவன் என்ற கருத்தும் - ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் - இந்திய விஞ்ஞானியின் மனத்தில் எப்படித்தான் ஒரே சமயத்தில் நிலவுகிறதோ, இந்து மனத்தின் இயல்பு மிக வியப்பாக இருக்கிறது!''

ஹிந்துக்கள் ஆதித்தனுக்கு அர்க்கியம் வரும்போது, சூரியனை நினைப்பதில்லை. அவனுக்கும் மூலகாரணமான பொருளை நினைக்கிறார்கள் என்பது சாதாரண மேனாட்டு யாத்ரீகளுக்குப் புரியாது. அவன் நம்மைப் பார்த்துச் சிரித்தால் சிரித்துவிட்டுப் போகட்டுமே என்றிருப்போம். வேதாந்தம், மிக உயரிய நிலையில் இந்து சமயத்தில் பிறந்த ஒருவனைக் கொண்டு நிறுத்துகிறது.

ஆஸ்திகனையும் நாஸ்திகனையும் சமமாகப் பார்க்கும் அற்புத பரிபக்குவத்தை அளிக்கிறது.

அது மட்டுமா? இறைவனையே பார்த்துச் சிரிக்கும் துணிவும் அளிக்கிறது. கவிச் சக்கரவர்த்தி கம்பர் பாடுவதைப் பாருங்கள்:

ஒன்றே என்னின் ஒன்றேயாம்
பலவென்றுரைக்கின் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம்
ஆமே என்னின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம்
உளதென்றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக் கிங்கென்னே பிழைப்பம்மா
(யுத்தகாண்டம் காப்புச் செய்யுள்)

கடவுளே, உன் பிழைப்பு இப்படியாகி விட்டதே!' என்று சிரிக்கும் பரிபக்குவம் உலகத்தில் வேறு எந்தச் சமயத்துக்கு உண்டு?

பசி

குப்பத்துக் கதை. அதுவும் சென்னைக் கூவத்தை யொட்டிய குடிசை வாழ் மக்களின் அப்பட்டமான அவல வாழ்க்கை. சைக்கிள் ரிக்ஷா முனியனின் (டெல்லி கணேஷ்) குடும்பத்துக் கதை. முனியனின் மகள் குப்பம்மா (ஷோபா) வின் சோகக் கதைதான் பசி. வயசுக்கு வந்தவளான குப்பம்மா கோணிப்பை சுமந்து தெருவில் காகிதம் பொறுக்கிக் காசு சம்பாதித்துக் குடும்பத்தின் பசிக்கு உதவும் உருக்கமான காட்சிகள் தான் பசியின் கதைக்குப் பல மணிக்கின்றன.

குடிக்குப் போகக் குடும்பத்துக்குத் தரும் சில்லறையில் ஐந்து குழந்தைகளோடு மானமாக வாழப் போராடும் வள்ளியம்மா (தாம்பரம் லலிதா), தன் மகள் நெறி தவறிவிட்டாள் என்பதைத் தாங்காமல் ரயில் தண்டவாளத்துக்குத் தன்னைப் பலியாக்கிக் கொள்ளும் பரிதாபம். வீட்டில் அழகு மனைவியும் அன்பு மதலையும் இருக்க, அப்பாவிப் பெண் குப்பம்மாவை மயக்கித் தனக்கு முந்தானை விரிக்கச் செய்து மோசம் செய்த லாரி டிரைவர் ரங்கனின் (விஜயன்) கதையும் பசிக்கு வேகமளிக்கிறது.

ஷோபாவின் ஒவ்வொரு அசைவும் நடிப்புக்கு இலக்கணம் வகுக்கின்றன.

ரிக்ஷா முனியனாக டெல்லி கணேஷ் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

கண்ணதாசனையும் இளையராஜாவையும் புறக்கணித்துவிட்டுப் பாட்டே இல்லாமல் ஆனால் அந்தக் குறையே தெரியாமல் ரசிகர்களின் பசிக்கு விருந்தே வைத்திருக்கிறார் டைரக்டர். படம் பார்க்கிறோம் என்ற உணர்வே ஏற்படாமல், சேரி வாழ் மக்களின் நிஜ வாழ்வை எட்ட நின்று பார்ப்பது போன்ற உணர்வை உண்டாக்கி இருப்பதற்குக் காரணமான கதை, இயல்பான வசனம் இவற்றோடு சிறப்பான டைரக்ஷனையும் செய்துள்ள துரையையும், சேரியின் மூலை முடுக்கில் தம் காமிராவை லாவகமாக உலவ விட்டிருக்கும் ரங்காவையும் எத்தனை பாராட்டினாலும் தகும்.

பழைய ரிக்கார்டுகளைப் போட்டே ஹாஸ்யத்தை நிறைவுள்ளதாகச் செய்திருப்பதற்குப் போனஸாக ஒரு சபாஷும் போடலாம்.

உருக்கமான முடிவு.

பசி — மனத்தை நிறைக்கச் செய்கிறது.

குப்பம்

கொலை நடக்கும் இடத்தில் குழப்பம் இல்லாதிருக்குமா? துப்பாக்கி சத்தம் — தரையில் குண்டடி பட்ட ஓர் உருவம் — அதைக் கண்ட இராமத்தான் ஊரைக் கூட்டி வரும்போது உடல் காணப்படவில்லை. அங்கு ஒரு காட்டுப் பன்றி இறந்து கிடக்கிறது. நண்பனைத் தேடி வருகிறான். ஆனால் அவன் இல்லை. எங்கே போனான், கொல்லப்பட்டது அவன்தானா? அவன் உடல் எங்கே? கொள்ளி வாய்ப் பிசாசு — பாழடைந்த பங்களா— சந்தேகப்படும்படியான பார்வை கொண்ட வேலைக்காரன் — எதையோ மறைக்கும் பருவப் பெண். இப்படிப் பல மர்மங்களைக் கொண்ட படம். ஃப்ளாஷ் பேக் முறையில் முடிச்சுக்களை விடுவித்து முடிவில் கதாநாயகி நிரபராதி என்று நிரூபிக்கிறார்கள்.

இதில் கதாநாயகியாக ஷோபா வருகிறார். மர்மத்தைக் கட்டவிழ்க்க வரும் கதாநாயகனாக தேவராவும் தேவலாம். மர்மப் படங்களை ரசிப்பவர்களுக்கு இது விறுவிறுப்பான படம்.





ஒரு கோயில் இரு தீபங்கள்



முற்றிலும் புது முகங்களைக் கொண்டே ஒரு படத்தைஉருவாக்கிக் கொடுத்திருக்கிறார் எஸ். பி. முத்துராமன். தயாரிப்பாளர் சங்கரன் கதை வசனத்துக்கும் பொறுப் பேற்றிருக்கிறார்.

ராதாவுக்குக் கணவனாக்கவே சந்திரனை உன்னத நிலைக்குக் கொண்டு வருகிறான் அவள் அண்ணன். ராதாவின் மனமோ வேறொருவனை நாடுகிறது. அதே போலச் சந்திரனும் வேறொரு பெண்ணைக் காதலிக்கிறான். அவர்கள் விருப்பப்படியே மண வாழ்க்கை அமைந்தாலும் விதி சதி செய்கிறது. தன்காதலி தற்கொலை செய்து கொண்டதாகச் சந்திரனுக்குத் தகவல் வருகிறது. தன் உயிர்த் தோழனின் தங்கை ராதா விதவையாகிறாள். நண்பனின் வேதனையையும் ராதாவின் வெறுமையையும் போக்கச் சந்திரனே ராதாவை மறுமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கும்போது அவன் காதலி மல்லிகா குழந்தையும் கையுமாக மணவறைக்கு வருகிறாள்.

இப்படிக் கதையை நல்ல உத்தியோடு கொண்டு போகிறார்கள். க்ளைமாக்ஸ் காட்சிகளும் உண்டு. சந்திரனாக வரும் புது முகம் விஜய்க்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. நடிப்புக் கல்லூரியில் பயின்ற ஆர்வமிக்க இளைஞர். பட்டை தீட்டப்படச் சரியான நபரிடம்தான் போயிருக்கிறார்.

கலர்ப் படங்களையே பார்த்துத் திகட்டிப்போன கண்களுக்குக் கறுப்பு வெள்ளைப் படமான தீபங்கள் ஊறுகாயாக இருக்கிறது. —கௌசிகன்



கடுகு பதில்கள்!



✠ காந்தி ஆசிரமம் கிருஷ்ணன், தஞ்சை

கே: நடிகைகளுக்கு என்றுமே வயது ஏறுவதில்லை. அரசியல் பதவிப்பித்தர்களுக்கு?

ப: பித்தம் என்றுமே இறங்குவதில்லை.

✠ எஸ். கண்ணன் பி.எஸ்ஸி., பி.டி., வடலூர்

கே: அடியாத மாடு படியாது என்கிறார்கள். நீங்கள் அடிக்காதீர்கள் என்கிறீர்கள்.

ப: மாணவர்களை மாடு என்று ஏன் சார் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

✠ இரா. இராமன் ஆத்தூர் (நெல்லை)

கே: தேர்தல் விளைவாகக்குழப்பம் ஏற்படுமா? நல்ல மாற்றம் கிடைக்குமா?

ப: நல்ல மாற்றமான குழப்பம் ஏற்பட்டாலும் வியப்பதற்கில்லை.

✠ லட்சுமி செங்குட்டுவன், வேலூர்

கே: எல்லாருக்கும் உதவ வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் பணம் இல்லை. என்ன செய்வது?

ப: பணம் இல்லாத காரணத்தால்தான் இப்படிப் பட்ட ஆசை வந்திருக்கிறது. கொஞ்சம் பணம் சேர்ந்ததும் போய்விடும், கவலைப்படாதீர்கள்.

✠ எம். காமராஜ், திருச்சி-5

கே: சென்னை 'ஜ' உங்களைத் துன்புறுத்தியதா?

ப: என் 'ஜ' என்னைத் துன்புறுத்தவில்லை.

✠ கோ. தீபா, காட்பாடி

கே: எழுதும் கதைகள் திரும்பி வந்து விடுகிறதே? அதைத் தடுக்க வழி.

ப: நீங்கள் எழுதின கதையை விருப்பு வெறுப்பில்லாமல் சீர்தூக்கிப் பார்க்க உங்களால் முடியாது. கதையில் மையக் கருத்தும் நடைச் சிறப்பும் இருந்தால் ஏன் திருப்பி அனுப்பப் போகிறார்கள்? திரும்பிய கதையைப் பற்றிப் பிரலாபித்துக் கொண்டு இருக்காதீர்கள். மேலும் முயற்சி செய்துகொண்டே இருங்கள். மற்றவர் கதையை அலட்சியத்துடன் படிக்காதீர்கள். அவைகளில் ஏதோ ஒரு தகுதி இருக்கவே தான் பிரசுரித்திருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (ஆமாம், மிஸ்டர் தீபா, சமீபத்தில் உங்கள் பெயரில் ஒரு துணுக்கு வந்ததே. அது முன்பே வேறொருவர் வேறொரு இதழில் எழுதியிருக்கிறாரே. மேலும் நீங்கள் ஆதாரம் காட்டிய ஜூனியர் ஸ்டேட்ஸ்மன் நின்று போய் வருஷங்கள் ஆகின்றனவே?)

✠ கமலா மாரியப்பன், கோவை

கே: கடுகைவிடச் சிறியது எது? மலையைவிடப் பெரியது எது?

ப: 1) 'கடுகி'ன் திறமை 2) 'கடுகி'ன் ஜம்பம்.

✠ எஸ். சேகர், ஷெனாய் நகர்

க: கறுகறுப்பிற்கு யாரை அல்லது எதை உதாரணம் காட்டுவீர்கள்?

ப: குமுதம் ''பால்யூ''வை.

✠ சுஜாதா, காட்பாடி

கே: புதுக்கவிதைகள் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப: அதில் நிறைய போலி சரக்குகள் உள்ளன. பல கவிதைகளில் கருத்தை விட வார்த்தைகள் அதிகமாக இருக்கும். நவீன கால கவிஞர்கள் எழுதும் மையில் தண்ணீரை அதிகம் கலந்து விடுகிறார்கள். — இப்படிக் கூறியவர் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஜெர்மானியக் கவிஞர் கதே! இந்தக் கருத்து இன்றைக்கும் பொருந்தும்.

✠ சாந்தகுமார், பழனி

கே. பிளேபாய் பத்திரிகை பார்த்து இருக்கிறீர்களா?

ப: ஓ! பிளேபாயை மிஞ்சும் பென்ட்ஹவுஸ், ஹஸ்லர் பத்திரிகைகளைக் கூடப் பார்த்திருக்கிறேன். பிளேபாயைப் பற்றி ஒரு விஷயம். அது வெறும் செக்ஸ் பத்திரிகை என்று நினைக்காதீர்கள். ஹெமிங்வே, வோட்ஹவுஸ், ரிச்சர்ட் ஆர்மர் போன்ற பெரிய பெரிய ஆசாமிகளும் அதில் எழுதியிருக்கிறார்கள்.

✠ கே. குணசீலன், திருவாரூர்


கே. முருகதாஸ் எப்படி?

ப: உரு(க்)க தாஸ்.

ரூ. 5 பரிசு பெறுபவர்:

லட்சுமி செங்குட்டுவன்
அண்ணசாலை
வேலூர்-638182

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran



திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

திருமலையில் இறைவனைத் தரிசிக்க வரும் ஏழை எளிய யாத்ரிகர்களுக்கு இலவச உணவு வழங்க உங்களுக்கு விருப்பமுள்ளதா?

இந்து சமய இலக்கியங்கள், பல புராணக் கதைகளின் மூலம் ஏழை எளியோர்க்கு வழங்கப்படும் அன்னதான மகிமையை விளக்கிக் கூறுகின்றன. அதுவும் குறிப்பாகத் திருமலை போன்ற திருத்தலத்தில் இறைவனைத் தரிசிக்க வரும் ஏழை யாத்ரிகர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுவது சாலச் சிறந்ததாகும். அது போலவே இறைவனின் பிரஸாதங்களை இலவசமாக வழங்கப்படுவதும் மிக உன்னதமாகக் கருதப்படுகிறது.

இவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரின் **"ஸ்ரீ வேங்கடேஸ்வரா நித்ய பிரஸாத தான அறக் கொடை"** திட்டத்தின் கீழ், நீங்கள் திருமலையில் இறைவனைத் தரிசிக்க வரும் யாத்ரிகர்களுக்கு இறைவனின் பிரஸாதங்களான உணவுப் பொட்டலங்கள் அல்லது லட்டுகள் அல்லது வடைகள் ஆகியவற்றை - இலவசமாக வழங்கலாம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ. 500/-ஐ முதலில் அறக் கொடையாக வழங்குதல் வேண்டும். இத்தொகையினால் வரும் வட்டித் தொகையினைக் கொண்டு, 20 ஏழை யாத்ரிகர்களுக்கு இலவசமாக பிரஸாதங்கள் அல்லது க்யூ வரிசைகளில் வரும் யாத்ரிகர்களுக்கு 20 லட்டுகள் அல்லது 15 வடைகள் வழங்கப்படும்.

இவ்விலவச பிரஸாத வழங்கீடு, வருடத்தில் ஒரு நாளின் போது அது உங்கள் பிறந்த நாளாகவோ, திருமண நாளாகவோ, உங்கள் பிள்ளை அல்லது மகளுடைய பிறந்த நாளாகவோ, உங்கள் தாய் அல்லது தந்தையாரது நினைவு நாளாகவோ அல்லது உங்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் பிடித்தமான நாளாகவோ இருக்கலாம் - நடைபெறும்.
ஒரு நபர் எத்தனை அறக் கொடைகளேனும் வழங்கலாம். ஒவ்வொரு அறக் கொடைக்கான இலவச பிரஸாத வழங்கீடு நீங்கள் விரும்பும் வெவ்வேறு நாளின்போது நடைபெறும். குறைந்த பட்சம் 20 அறக் கொடைகள் வழங்கினால், அறக் கொடை வழங்கிய நபரைச் சார்ந்த 5 நபர்களுக்கு, இலவச தரிசன வசதி வழங்கப்படும். (இது 5 சிறப்பு தரிசன டிக்கெட்டுகளின் மதிப்பான ரூ. 125க்குச் சமமாகும்.)

இலவச பிரஸாதம் வழங்கும் நாளன்று, அறக் கொடையாளரின் பெயரும், கோத்திரமும் திருமலையில் இறைவனின் தர்பாரில் (கொலுவில்) வாசிக்கப்படும்.
17–3–80 அன்று, அதாவது தெலுங்கு வருடப் பிறப்பு நாளன்று ஆரம்பிக்கப்படவிருக்கும் இத்திட்டத்திற்கான அறக்கொடைகள் இப்போது முதல் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளன.
நீங்கள் அளிக்கும் இவ் அறக்கொடை தொகைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. நீங்கள் உங்களுடைய வருமான வரி கணக்கின் போது, இவ் அறக் கொடையினைச் சுட்டிக் காட்டி வரி விலக்கு பெறலாம்.

அறக் கொடையாளர்கள், தொகையினை இந்தியாவில் உள்ள ஆந்திரா பாங்க் கிளை அலுவலகங்களின் மூலமாகவோ அல்லது **"எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்" தி. தி. தேவஸ்தானம், திருப்பதி** எனும் பெயரில் 'டிமான்ட் டிராஃப்ட்' ஒன்றினை எந்த வங்கி மூலமாவது வாங்கி, **'மானேஜர்', தி ஆந்திரா பேங்க் லிமிடெட், காந்தி ரோடு, திருப்பதி, 517 501** எனும் முகவரிக்கு அறக் கொடையாளரின் பெயர், கோத்திரம், குடும்பத்தின் பெயர் மற்றும் கிருஹஸ்தரின்/அறக் கொடையாளரின் முழு முகவரி; இலவசமாக வழங்கப்பட வேண்டிய பிரஸாத வகை விவரம்; இலவசமாக வழங்கப்பட வேண்டிய நாள்; என்ற விவரங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

SUBRA & RAM: TTD: 1180

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு